ISBN : 978-81-685205-6-1

செந்தமிழறிஞர்கள்:108




தமிழ்த் தாத்தா
(உ. வே. சாமிநாத ஐயர்)

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

தமிழ்த் தாத்தா
(உ. வே. சாமிநாத ஐயர்)



LOK BHAVAN, TAMIL NADU
@lokbhavan_tn
3:20 PM · Feb 19, 2026

Humble tributes to the venerable 'Tamil Thatha,' U. Ve. Swaminatha Iyer, on his birth anniversary. Through unwavering dedication and scholarly brilliance, he revived ancient Tamil literature from the Sangam era, restoring its glory and ensuring its timeless wisdom guides generations.

By safeguarding the rich Tamil literary and cultural heritage, he strengthened society's connection to its linguistic roots and reinforced Bharat's cultural and civilisational spirit.

His monumental contributions remain an enduring inspiration, guiding us to cherish, uphold and pass forward our timeless Tamil heritage, continuing to enrich the civilisational spirit of Bharat with pride and purpose.

Source:
https://x.com/lokbhavan_tn/status/2024421340665807354

செந்தமிழ்சிற்பிகள்

'தமிழ்த்தாத்தா' உ.வே.சாமிநாதர் (1855 – 1942)

23 February, 2024



அறிமுகம்

தமிழ்ப் பதிப்பியக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான உ.வே.சாமிநாதர் 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் தேதி பாபநாசம்,உத்தமதானபுரம் எனும் ஊரில் பிறந்தார். வெங்கட்ராமன் என்பது இவரது இயற்பெயர் . இவரது தாயார் சாமிநாதன் என்ற செல்ல பெயரால் அழைக்க, பின்னர் அதுவே நிலைத்து விட்டது.

இவர் குடும்பம் வசதியில்லாமல் ஊர்ஊராக இடம் பெயர்ந்து வாய்ப்புகளை தேடியலைந்த போதும் , மனம் தளராமல் சடகோப ஐயங்கார் மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் விடாமுயற்சியுடன் தமிழ் கற்று தமிழறிஞர் ஆனார் உ. வே. சா.

தமிழ் மற்றும் சமுதாயப் பணி

1880 ஆம் ஆண்டு முதல் கும்பகோணம் கல்லூரியில் தொடர்ந்து 23 ஆண்டுகளும் பின்பு 1903 ஆம் ஆண்டு முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் 16 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார். 1924 ஆம் ஆண்டு மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வரானார்.

அழிந்துக் கொண்டிருந்த சங்ககால நூல்களை, ஓலைச்சுவடிகளாக இருந்தவற்றை தேடித்தேடி கண்டறிந்து,அதில் சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் ஆராய்ந்தறிந்து முழுப்பொருள் விளங்கும் படி அதை பதிப்பித்தார்.

3000-க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார்.

படைப்புகள்

உ. வே. சா. அவரது 23 ம் வயதிலேயே ஆதீனம் பெரிய காறுபாறு வேணுவனலிங்க சுவாமிகள் இயற்றியிருந்த 'தேசிக விலாசச் சிறப்பு'; 'வேணுவனலிங்க விலாசச் சிறப்பு' என்னும் நூலை பதிப்பித்து வெளியிட்டார்.

விரிவான முன்னுரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் ஆகியவற்றுடன் முதல் பதிப்பு முயற்சியாக அக்டோபர் 1887இல் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தார்.

சங்க இலக்கியம் , 12 புராணங்கள் ,9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள் ,4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள் ,2 மும்மணிக் கோவை ,2 இரட்டை மணி மாலை,அங்கயற்கண்ணி மாலை மற்றும் 4 சிற்றிலக்கியம் உள்ளிட்ட பலவகைப்பட்ட 90 க்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்துள்ளார்.

கலைமகள் துதி , திருலோக மாலை, ஆனந்த வல்லியம்மை பஞ்சரத்னம் போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். புதியதும் பழையதும், நல்லுரைக் கோவை போன்ற உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்,

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா ஆற்றிய சொற்பொழிவே '***சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்***' எனும் நூலாக வெளியிடப்பட்டது.

மீனாட்சிசுந்தரம், மகாவைத்தியநாதர், கோபால கிருஷ்ண பாரதி, உள்ளிட்ட பல தமிழ் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

'என் சரித்திரம்' எனும் தலைப்பில் ஆனந்த விகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக, தனது வாழ்க்கை வரலாற்றை, உ. வே. சா. அவர்கள் எழுதி வந்தார். இது புத்தகமாக 1950 ஆம் ஆண்டில் வெளி வந்தது.

விருதுகள் /சிறப்புகள்

- மகாமகோபாத்தியாய(1906), தக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யாபூஷணம் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.
- 1932-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகம் '**முனைவர்**' பட்டம் வழங்கி கௌரவித்தது .
- தமிழ்மொழிக்குச் செய்த தொண்டினால் '**தமிழ்த்தாத்தா**' என மக்களால் அன்போடு அழைக்கப்பட்டார்.
- 1937-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டில் இவரது உரையை கேட்ட மகாத்மா 'இவரிடம் நான் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வமிகுதி தான் என்னிடம் எழுகிறது "-என்றார்.
- இந்திய அரசு பிப்ரவரி 18, 2006 ம் ஆண்டு இவரது **நினைவு அஞ்சல் தலையை** வெளியிட்டது .
- உத்தமதானபுரத்தில் உ. வே. சா வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் '**உ. வே. சா நினைவு இல்லம்**' -ஆக பராமரிக்கப்பட்டு வருகிறது .
- ருக்மணி அருண்டேல் உதவியுடன் 1943-ம் ஆண்டு ' **டாக்டர் உ.வே.சாமிநாதர் நூல் நிலையம்**' சென்னை பெசன்ட் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழுக்கு வளம் சேர்க்கும் தமிழறிஞர்களின் சேவைகளைப் பாராட்டும் விதமாக **உ.வே.சா. விருது** தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது.

Source:
https://www.annacentenarylibrary.org/pages/view/18.%20'%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE'%20%E0%AE%89.%E0%AE%B5%E0%AF%87.%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%B0%E0%AF%8D

உ.வே.சாமிநாதையர்

‘தமிழ்த் தாத்தா’ ஆன வரலாறு

இரா.வெங்கடேசன்

பிரிவு: உங்கள் நூலகம் - ஜூலை 2019

வெளியிடப்பட்டது: 18 ஜூலை 2019



19, பிப்ரவரி, 1855ஆம் ஆண்டு பிறந்த உ.வே.சாமிநாதையருக்கு 06, மார்ச்சு, 1935-ஆம் நாள் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் நடத்தப்பெற்றுள்ளது.கால அளவைக் கொண்டு 25, 50, 100ஆண்டுகள் நிறைவடையும்பொழுது வெள்ளி, பொன், வைரம் எனக் கொண்டாட்டங்கள் நடத்துவதைப் போன்று, ஒருவரின் வாழ்நாட்களில் அறுபதாம் வயது நிறைவடையும்பொழுது ‘சஷ்டிபூர்த்தி’ என்றும், எண்பதாவது வயது நிறைவடையும்பொழுது ‘சதாபிஷேகம்’ என்றும் அழைப்பது வைதீக வழக்கமாகும். அந்த நாளை விழாவாகக் கொண்டாடி மகிழ்வது வைதீகர்களின் மரபாக உள்ளது.

1915, பிப்ரவரி, 2ஆம் நாள் உ.வே.சா. அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுற்றது; இந்தச் ‘சஷ்டிபூர்த்தி’யைக் கொண்டாட அன்பர்கள், உறவினர்கள் விரும்பியும் உ.வே.சா. அதைக் கொண்டாட விரும்பாமல் அன்றைய நாளில்

துணைவியார் சரஸ்வதியுடன் திருக்காளத்தி சென்று அபிஷேகம் செய்து, கிரிப்பிரதட்சிணம் செய்துவிட்டு வந்ததோடு முடித்துக்கொண்டுள்ளார்.

எண்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 'சதாபிஷேக' விழா அன்பர்களும் உறவினர்களும் விரும்பி வேண்டிக்கொண்டு ஏற்பாடு செய்தபடி1935, மார்ச்சு 06-ஆம் நாள் கொண்டாடப்பட்டுள்ளது.

உ. வே. சாமிநாதையர் அவர்களின் சதாபிஷேக விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கனம் பி. டி. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விழாக் குழுவில் டி. சிவராமசேதுப்பிள்ளை, பெ.நா. அப்புசுவாமி, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய மூவரும் உறுப்பினர்களாகவும், கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் பொருளாளராகவும் இருந்து செயல்பட்டுள்ளனர்.

சதாபிஷேக விழாவிற்குரிய முன் ஏற்பாடுகளையும், விழா சிறப்பாக நடைபெறுவதற்குரிய காரியங்களையும் உ.வே.சா.அவர்களின் மாணாக்கர்களான கி. வா. ஜகந்நாதையர், வி. மு. சுப்பிரமணிய ஐயர், ச.கு.கணபதி ஐயர், செல்லமையர் ஆகிய நால்வரும் செய்துமுடித்திருந்தனர். உ.வேசா. அவர்களின் அன்பர்களின் பட்டியலைத் தயாரித்து அவர்களின் முகவரிகளைத் திரட்டி விழாக்குழுவின் அறிக்கைகளை அனுப்புதல், இதழ்களுக்கு விழா குறித்த அறிவிப்புச் செய்தியை அனுப்பி, அது வெளிவரும்படி செய்தல் முதலான பணிகளை இவர்கள் செவ்வனே செய்துமுடித்தனர். இதற்கிடையில், ஏற்கனவே உ.வே.சா. அவர்களைப் பற்றித் தமிழறிஞர்கள் எழுதியிருந்த குறிப்புகளையெல்லாம் கி.வா.ஜ. திரட்டி முடித்திருந்தார். அவற்றின் சிலவற்றை ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற இதழ்களில் வெளிவரவும் செய்திருந்தார்.

சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், சுதந்திரச் சங்கு, தினமணி, ஜனமித்திரன், லோகோபகாரி, தாருல் இஸ்லாம், இந்துநேசன், இந்து சாதனம், மதுரமித்ரன், பாரத ஜோதி போன்ற அன்றைக்கு வெளிவந்துகொண்டிருந்த முக்கியமான தமிழ் இதழ்களிலும், தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெட்ராஸ் மெயில் போன்ற ஆங்கில இதழ்களிலும் சதாபிஷேக விழா குறித்த செய்திகள் வெளிவந்திருந்தன.

கி.வா.ஜ. அவர்கள், உ.வே.சா. பற்றி கட்டுரைகள் எழுதியும் பிற அன்பர்களை எழுதச்சொல்லியும் கலைமகள், ஆனந்தவிகடன் முதலான இதழ்களில் வெளிவரும்படி செய்திருந்தார்.

விழாக் குழுவின் ஏற்பாட்டில் சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் மார்ச்சு மாதம் 6ஆம் தேதி, புதன்கிழமை மாலை 5 மணிக்கு உ.வே.சா. அவர்களின் சதாபிஷேக விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.அதற்கு முன்பாக அன்று காலையில் உ.வே.சா. அவர்களின் 'தியாகராஜ விலாச' இல்லத்தில் சதாபிஷேக முகூர்த்த விழா வைதீக முறைப்படி நடத்தி வைக்கப் பெற்றது. புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் நடத்தி முடித்த பின்னர், பலவகையான தானங்கள் வழங்கப் பெற்றுள்ளன. உறவினர்கள், அன்பர்கள், பொதுமக்கள் என பலரும் வந்து அந்நிகழ்வில் பங்கேற்று, உ.வே.சா. அவர்களை வாழ்த்தியும் வாழ்த்துகளைப் பெற்றும் சிறப்பித்துள்ளனர்.

மாலையில் சென்னைப் பல்கலைக்கழகச் செனெட் அரங்கில் விழா நடைபெற்றது. விழாவிற்கு முன்னதாகப் பல்கலைக்கழக செனெட் தோட்டத்தில் பாண்டு வாத்தியஇசை முழக்கத்துடன் உ.வே.சா. அவர்களுடைய திருமகன் கல்யாணசுந்தரம் ஐயர் அவர்களால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டுள்ளது.

சதாபிஷேக விழாவிற்கு,சென்னை மாகாணத்தின் தற்காலிக ஆளுநராக அப்போது நியமிக்கப்பட்டிருந்த ஸர் மஹமத் உஸ்மான் ஸாஹிப் பகதூர் அவர்கள் தலைமை வகித்திருந்தார்கள்.

விழாவில், உ.வே.சா. அவர்களுக்குப் பல உபசாரபத்திரங்கள் படித்து அளிக்கப்பட்டன. முதலில் நண்பர்களும் அபிமானிகளும் அளித்த உபசாரபத்திரத்தை விழாக்குழு உறுப்பினரான சிவராமசேதுப் பிள்ளையவர்கள் வாசித்தளித்துள்ளார். அந்தப் பத்திரம் பனையேட்டில் எழுதப்பெற்றதாக இருந்தது. அப்பத்திரம் இரண்டு தாங்கப்பெற்ற ஒரு வெள்ளிக்குழாயில் வைத்து அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னைச் சமஸ்கிருத சங்கம், சென்னை வித்துவச் சிரோமணி மண்டலம், சென்னைப் புத்தகசாலைச் சங்கம், சென்னை அரசினர் பேரகராதிச் சபை (Tamil Lexicon Committee), வண்ணைத் தமிழ் அபிவிருத்திச் சங்கம், கும்கோணம் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், இராசதானிக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், லயோலாக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், மகமதிய கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், கும்பகோணம் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஒன்றன்பின் ஒன்றாக உபசார பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டுள்ளன.

அன்பர்களும், நண்பர்கள், மாணவர்கள் அளித்த உபசார பத்திரங்கள் அளிப்பிற்குக்குப் உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணிக்கு உதவும் வகையில், விழாக் குழுவின் சார்பில் கனம் பி.டி.ராஜன் அவர்கள் 3001 ரூபாய்க்குரிய உண்டியலடங்கிய வெள்ளிப் பையன்றை ஐயரவர்களிடம் சேர்ப்பித்தார்.

பொதுமக்கள் பலரும் அன்புடன் அளித்த நிதியிலிருந்து இத்தொகை வழங்கப்பெற்றது. இந்த நிதியைத் திரட்டுவதற்குரிய கூட்டமொன்று, விழா நடைபெறுவதற்கு முன்னர் மார்ச்சு மாதம் முதல்தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்குத் தேனாம்பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில் இருந்தவிழாக் குழுத் தலைவர் கனம் பி. டி. ராஜன் அவர்கள் வீட்டில் நடைபெற்றிருக்கிறது.

விழாக் குழுவின் நிதியளிப்பு நிகழ்விற்குப் பின்னர், நண்பர்கள் சம்மானங்கள் அளித்துச் சிறப்பித்தனர். உ.வே.சா. எழுதியிருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்தைப் படித்து இன்புற்ற அன்பர் ஒருவர் உ.வே.சா. அவர்களுடைய வரலாறு அதனினும் பன்மடங்கு அரிய, உயரிய செய்திகளையும் தமிழின் சரித்திரத்தையும் வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு வழிகாட்டியாக நின்று நிலவுமென்ற கருத்தில் அவர் அச்சரித்திரத்தை அவரே எழுதி வெளியிட வேண்டுமென்ற தமது விருப்பத்தைச் சபையினருக்கு 501 ரூ. அனுப்பி வேண்டியிருந்தார். பெயர் வெளியிட விரும்பாத அன்பர் அளித்த அத்தொகை விழாக் குழுவின் சார்பில் உ.வே.சா. அவர்களுக்கு வழங்கப்பட்டது. இது போன்ற கோரிக்கையை அன்பர் பலரும் சதாபிஷேக வாழ்த்துக் கட்டுரையில் விடுத்திருந்தனர். சதாபிஷேக விழா நடைபெற்று முடிந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் 1942இல் தனது சரித்திரத்தை ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதி வெளியிடத் தொடங்கினார் உ.வே.சா.

டாக்டர் உ.வே.சா. அவர்களின் உருவப்படத்தைச் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் வைப்பதற்குரிய ஏற்பாட்டையும் சதாபிஷேக விழாக் குழுவினர் செய்திருந்தனர். திருப்பனந்தாள் ஆதீனம் காசிவாசி சுவாமிநாத தம்பிரான் உதவியால் ஆர். துரை என்பவர் வரைந்த உ.வே.சா. உருவப்படம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் லிட்டில் ஹேல்ஸ் அவர்களிடம் அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் சார்பாக அதை அவர் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இந்தக் கொண்டாட்டத்தில் படித்துக் கொடுக்கப்பட்ட உபசார பத்திரங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு சிறுநூலாக டாக்டர் உ.வே.சா. அவர்களின் படங்களுடன் அச்சிடப்பட்டு விழா நடைபெற்ற அன்றைய நாளிலேயே வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் ஐயரின் சதாபிஷேக மலர் என்று ‘கலைமகள்’ தனிப்பிரசுரமொன்றை 64 பக்கங்கள் கொண்டதாக அச்சிடப்பட்டு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் டாக்டர் உ.வே.சா.அவர்களின் வரலாறும் அவரைப் பற்றிப் பலர் எழுதிய கட்டுரைகளும் அடங்கியிருந்தன.

விழாவில் முத்தையா பாகவதர் அவர்களின் பாட்டுக்கச்சேரியும் நடைபெற்றுள்ளது. ஆந்திர பல்கலைக்கழகத்தின் சார்பாக அப்பல்கலைக்கழகத் தமிழ், கன்னட

மொழிகளின் பாடத்திட்டக்குழுவின் தலைவர் ராவ் பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸ்லே அவர்கள் உ.வே.சா. அவர்களுக்கு அறுபது ஆண்டு பழமைவாய்ந்த ஒரு எழுத்தாணியையும் ஒரு பௌண்டன் பேனாவையும் பரிசாக அளித்து மகிழ்ந்தார்.

உ.வே.சா. அவர்களின் சதாபிஷேக விழா சென்னையில் மட்டுமின்றித் தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் யாழ்ப்பாணம், ரங்கூன், கம்போடியா ஆகிய வெளிநாடுகளிலும் கொண்டாடப்பட்டுள்ளது. சதாபிஷேக விழாவிற்கு முன்னதாகவும் பின்னதாகவும் பல்வேறு இதழ்கள் உ.வே.சா. அவர்களை வாழ்த்திக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுச் சிறப்பித்துள்ளன.

ந.மு.வேங்கடசாமி நாட்டார், ப.சம்பந்த முதலியார், வீ.இராமாநுஜாச்சாரியார், மு.கதிரேச செட்டியார், மு. இராகவையங்கார், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், வெ.ப.சுப்பிரமணிய முதலியார், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் கட்டுரை எழுதிச் சிறப்பித்துள்ளனர். ரா.இராகவையங்கார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, முன்னீர்ப் பள்ளம் பூர்ணலிங்கம் பிள்ளை, கே.ஜி.சேஷையர், இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, வித்துவான் மா.இராசமாணிக்கம், அ.மு.பரமசிவானந்தம் உள்ளிட்ட அறிஞர்கள் பலர் வாழ்த்துப் பாக்களை எழுதி அளித்துச் சிறப்பித்துள்ளனர்.

சதாபிஷேக விழாவினையட்டி பல ஊர்களில் இருந்தும் அன்பர்கள் உ.வே.சா. அவர்களுக்குக் கடிதம் எழுதியும், தந்தி அனுப்பியும் வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

சதாபிஷேக விழாவிற்கு முன்னும் பின்னுமான சில நாட்களில் உ.வே.சா. அவர்களின் வாழ்வில் சில முக்கியமான நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. ஒன்று, அன்பர்கள் பலரும் உ.வே.சா. அவர்கள் தன் சரித்திரத்தைத் தானே எழுதி வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை நேரடியாக அவரிடம் வைத்தது; இரண்டு ‘தமிழ்த் தாத்தா’ என அவரை அன்போடு அழைத்து மகிழ்ந்தது. இந்த இரண்டும் உ.வே.சா. அவர்களின் பெரு வாழ்வில் நடந்தேறிய முக்கியமான நிகழ்வுகளாகக் கருதத்தக்கது. இவற்றுள் அவரின் ‘என் சரித்திரம்’ நூலை பலரும் படித்து மகிழ்ந்திருப்பர். ‘தமிழ்த் தாத்தா’ எனும் பெயர் அவருக்கு நிலைபெற்ற வரலாற்றை இங்கு நினைவுபடுத்தி பார்ப்போம்.

சதாபிஷேக விழாவிற்கு முன்னும் பின்னுமாகக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மூன்று கட்டுரைகளை தொடர்ச்சியாக மூன்று வாரம் ஆனந்தவிகடன் இதழில் எழுதி வெளியிட்டிருக்கிறார். அந்த மூன்று கட்டுரைகளுள் முதல் கட்டுரை சதாபிஷேக விழாவின் அறிவிப்புச் செய்தியாகவும், இரண்டாவது கட்டுரை சதாபிஷேக விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்த விழாக் குழுவினருக்கு

எழுதுவதாகவும், மூன்றாவது கட்டுரை உ.வே.சா. அவர்களுக்கு எழுதுவதாகவும் இருந்தன. இந்த மூன்று கட்டுரைகளும் மூன்று வார ஆனந்த விகடனில் தனித் தனியே வெளிவந்திருக்கின்றன. இதற்கடுத்த வார ஆனந்த விகடன் இதழை உ.வே.சா. அவர்களைப் பற்றிய கட்டுரைகள் அடங்கியதாகவே வெளிவரும்படி கல்கி செய்திருக்கிறார். இதுமட்டுமின்றி சதாபிஷேக விழா நடைபெற்று முடிந்த பின்னர் அவ்விழாகுறித்து 17-3-1935-இல் ஆனந்த விகடன் இதழில் 'தமிழ்த் திருவிழா' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டு சிறப்புச் செய்திருக்கிறார்.

'தமிழ்த் தாத்தா' எனும் பெயர் உ.வே.சா. அவர்களுக்கு நிலைபெற்ற வரலாற்றுக் குறிப்புகள் இந்த மூன்று கட்டுரைகள் வழியே வெளிப்பட்டு நிற்கின்றன. அதனால், கல்கி அவர்கள், சதாபிஷேக விழா நடைபெறுவது குறித்தும், விழா குழுவினருக்கும், உ.வே.சா. அவர்களுக்கும் ஆனந்த விகடனில் எழுதி வெளியிட்ட அந்த மூன்று கட்டுரைகளும் வெளிவந்த வண்ணமே இங்குத் தரப்படுகின்றன.

1

ஸ்ரீமத் சகலகுண சம்பன்ன அகண்டித லக்ஷ்மீ அலங்கிருத ஆசிருத ரக்ஷிக மகாமேரு சமான தீர இகபர சௌபாக்கிய வதான்னிய மூர்த்தன்னிய சதுஷ்டய சாதாரண திக்விஜய பிரபு குல திலக மங்கள குண கணாலங்கிருத வாசாலக பரிபாக சிரோரத்ன மகா புருஷ மகாராஜமான்ய ராஜஸ்ரீ பொதுஜனம் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு விகடன் தாழ்மையாகச் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்.

என்ன, பெரியவாள் முழிக்கிறாய்ப் போலிருக்கிறது? ஒன்றும் விளங்கவில்லையாக்கும்! "என்னமோ காமாசோமாவென்று எல்லாருக்கும் தெரிந்த பாஷையில் எப்போதும் எழுதும் விகடனுக்கு இன்று என்ன வந்தது?" என்று யோசிக்கிறீராக்கும். அதெல்லாம் முடியாது; இன்று உம்மைக் கதற வைத்துத் திணற அடித்து விடுவதாக உத்தேசம். தினம்போல் சுலபமாய்த் தப்பித்துக் கொண்டு போகலாமென எண்ண வேண்டாம். எங்கே, தைரியமிருந்தால் பின்வரும் புத்தகங்களின் பெயர்களைப் படியும், பார்க்கலாம்:-

மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்துயமகவந்தாதி, துறைசையமகவந்தாதி, மறைசை யந்தாதி, திருக்குற்றால யமகவந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் அந்தாதி, வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பிரம்மவித்யா நாயகி பிள்ளைத்தமிழ், மயூரகிரி இரட்டைமணிமாலை, வாளளிபுற்றூர்ப் புராணம்,

வாட்போக்கிக் கலம்பகம், திருநாகைக்காரோணப் புராணம், திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், கலைசைச் சிலேடைவெண்பா.........

அதற்குள்ளாகவா சரணாகதி அடைந்துவிட்டீர்? இந்த நூல்களின் பெயர்களைப் படிப்பதே உமக்குச் சிரமமாயிருக்கிறதே, அவைகளைக் கற்றல் எவ்வளவு சிரமமாயிருக்க வேண்டும்? அவற்றைப் போன்று விகடனில் நாலைந்து பக்கங்களுக்குப் பெயர் ஜாபிதா மட்டும் கொடுக்கக்கூடிய அவ்வளவு தமிழ் நூல்களையும் கற்றுத் தேர்தல் என்றால், அது எத்தகைய செயற்கரிய செயல்?

அப்பேர்ப்பட்ட அரும்பெரும் செயல் புரிந்த பெரியார் ஒருவர் நமது தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் யார் தெரியுமா? அவருடைய முழுப்பெயரைப் படிப்பதுகூடக் கொஞ்சம் கடினமான விஷயந்தான். மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள்.

அய்யர்வாள் படித்திருக்கிற பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றின் பெயரையும் சொல்வதென்றால் மிகவும் பிரயாசையான காரியமே. ஆனால் அவர் படிக்காத பழந்தமிழ் நூல்களைக் குறிப்பிடுவது மிகவும் சுலபம். 'ஒன்றும் இல்லை' என்று இரண்டே வார்த்தையில் கூறுதல் எளிதல்லவா?

பொதுஜன ஸ்வாமி! நீரும் நானும் கூடத்தான் தமிழ் நூல்கள் படித்திருக்கிறோம். அதாவது, அத்தியாயத் தலைப்புக்களுடனும், அரும்பத அகராதிகளுடனும், முன்னுரை பின்னுரைகளுடனும் முத்து முத்தாக அச்சிட்ட புத்தகங்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அய்யர்வாள் தமிழ் படித்தது எப்படித் தெரியுமா? அந்தக் காலத்தில் அச்சிட்ட புஸ்தகங்களே அபூர்வம். ஒரு பண்டார சந்நதி அந்நாளில் கம்பராமாயணம் அச்சுப் பிரதியைப் பார்த்துவிட்டு "ஓகோ! இதைக்கூடப் 'புக்கு' (Book)ப் போட்டுவிட்டானா?" என்று வியந்தாராம்! இவ்வாறு, அச்சிட்ட புத்தகமே வியப்பளித்த காலம் அது. அந்நாளில், கறையான் அரித்த ஓலைச் சுவடிகளில் தெளிவின்றி எழுதியிருந்த எழுத்துக்களைக் கண்நோவு காணும்படி படித்தாக வேண்டும். அந்த ஓலைச்சுவடிகளும் கிடைப்பது கடினம். ஊர் ஊராகச் சென்று, யார் யாரிடம் எந்த ஓலைச்சுவடியிருக்கிறதென்று அறிந்து அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கற்றாகவேண்டும்.

அய்யர் அவர்கள் தம் இளம்பிராயத்தில் அவ்வாறெல்லாம் பிரயாசைப்பட்டுப் படித்ததனால்தான், தமிழ்மொழிக்கு வேறு எவராலும் செய்யப் பெறாத மகோபகாரம் செய்தல் சாத்தியமாயிற்று. அவர்கள் வடமொழிக்கு வியாஸ பகவானும், தமிழ் மொழிக்கு அகஸ்திய முனிவரும் எத்தகைய தொண்டு செய்தார்களென்று சொல்லப்படுகிறதோ, அவ்வளவு சிறப்பான தொண்டை இந்நாளில் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தமிழுக்குச் செய்திருக்கிறார்கள்.

அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற பழைய தமிழ் நூல்களின் ஜாபிதாவைப் பாருங்கள்:-

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதருரை, நன்னூல் சங்கர நமச்சிவாயருரை, தக்கயாகப்பரணி, பாசவதைப் பரணி, திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், திருக்காளத்திநாதருலா, திருப்பூவண நாதருலா, தேவை உலா, மதுரைச் சொக்கநாதருலா, கடம்பர்கோயில் உலா, சங்கரலிங்க உலா, தமிழ்விடுதூது, வண்டுவிடுதூது, தென்றல்விடுதூது, திருவாவடுதுறைக்கோவை, திருமயிலைத் திரிபந்தாதி, கூழை அந்தாதி, பழனிப்பிள்ளைத் தமிழ், திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டு, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், தியாகராஜ லீலை.

தமிழ்ச் செல்வம், தமிழ்ச் செல்வம் என்று நாமெல்லாம் பெருமையடித்துக்கொள்கிறோம்; அய்யவர்களின் அரிய முயற்சிகள் இல்லாமற் போயிருந்தால், ‘உங்களுடைய தமிழ்ச் செல்வம் எங்கே?’ என்று கேட்பவர்களுக்கு, ‘எங்கேயோ பூமியில் புதையுண்டு கிடக்கிறது; தோண்டிப்பார்த்தால் ஒருவேளை அகப்படலாம்’ என்றே பதில் சொல்ல வேண்டியிருந்திருக்கும்.

அய்யர் அவர்கள், தாம் இளம்பிராயத்தில் தமிழ் நூல் கற்பதற்காகப் பட்ட சிரமங்களை எண்ணி, அத்தகைய கஷ்டம் இனி வரும் சந்ததிகளுக்கு ஏற்படக்கூடாதென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

பழைய ஓலைச்சுவடிகளிலிருந்து பாடபேதங்களை ஆராய்ந்து புத்தகம் பதிப்பித்தல் எவ்வளவு சிரம சாத்தியமான காரியம் என்பது தெரியுமா? எல்லையற்ற பொறுமையும், உழைப்புத் திறமையும், அறிவுத் தெளிவும் அதற்கு வேண்டும். அந்தத் தொண்டின் அருமையை அறிந்திருப்பவர்கள், அய்யர் அவர்கள் பதிப்பித்த ஒவ்வொரு புத்தகத்துக்காகவும் அவருக்குத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஞாபகச் சிலை நிறுவவேண்டும் என்று சொல்வார்கள்.

பொதுஜன ஸ்வாமி! தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் அத்தகைய பரோபகாரம் செய்திருக்கும் - இன்னமும் செய்துவரும் - பெரியாருக்குச் சமீபத்தில் 80-ஆவது வயது பூர்த்தியாகப்போகிறது. இந்த விசேஷ சம்பவத்தை நாளது மார்ச்சு மாதம் 6-ஆம் நாளன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்காகத் தமிழன்பர்கள் சிலர் ஏற்பாடு செய்துவருகிறார்கள். அன்றைய தினம் அய்யர் அவர்களுடைய உருவப்படம் ஒன்றைப் புதிய சர்வகலாசாலை மண்டபத்தில் திறந்து வைக்கவும், அய்யர்

அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். மேற்படி வைபவத்துக்கு இஷ்டமித்ர பந்துக்களுடன் உம்மை அழையாவிட்டாலும் நீர் வந்துசேர வேண்டியது.

ஆமாம், சந்தேகம் என்ன? தமிழ் யார் வீட்டுச் சொத்து? மற்றவர்களுக்குள்ள பாத்தியதை தமிழில் நமக்கும் உண்டு. தமிழ்த்தாய் நம் எல்லாருக்குந்தான் தாய். எனவே, அய்யர்வாள் விஷயத்திலும் நம் எல்லாருக்கும் சமமான பாத்தியதை உண்டு.

இப்படிக்கு
அன்பன், விகடன்.

@@@@@@@@@@@@@@

உயர்திருவாளர் தமிழ் அன்பர் அவர்களுக்கு விகடன் வரையும் விகிதமாவது:-

தங்களுடைய அழைப்புக்கடிதம் பெற்றேன். மெத்த மெத்த சந்தோஷம். அய்யர் அவர்களுடைய எண்பதாம் வயதுப் பூர்த்தியைத் தாங்கள் விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

நம்முடைய காலத்தில், நம் கண் முன்னால், தமிழ் மொழிக்குப் பெருமையளித்தவர்களுக்குள் இரண்டு பேர் சிறந்து விளங்குகிறார்கள். ஒருவர், தேசீயகவி சுப்பிரமணிய பாரதி; மற்றவர் மகாமகோபாத்தியாய சாமிநாதையர்.

பாரதியார் வாடாமலர்களைத் தொடுத்துத் தமிழ்த்தாய்க்குப் பாமாலை சூட்டினார்; புதிய நாகரிகமுறையில் அழகிய சின்னஞ்சிறு ஆபரணங்களைச் செய்து அணிவித்தார்.

அய்யர் அவர்களோ, காணாமற்போயிருந்த தாயின் பழைய ஆபரணங்கள் பலவற்றைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தார்; துருப்பிடித்துக் கிடந்த நகைகளை யெல்லாம் துருவெடுத்துச் சுத்தம் செய்து மெருகிட்டு அளித்தார்.

எனவே, இரண்டுபேரும் ஒவ்வொருவகையில் தமிழ்த்தாய்க்கு மகத்தான சேவை செய்திருக்கிறார்கள்.

ஆனால் பாரதியார் ஒரு தவறு செய்தார்; திடீரென்று யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவர்பாட்டுக்கு இறந்து போய்விட்டார்! என்ன அவசரமோ தெரியவில்லை?

“ஏதடா! நாம் செய்த சேவையைத் தமிழர்கள் அறிந்து பாராட்டுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டாமா?” என்று அவருக்குச் சற்றும் தெரியாமல் போயிற்று.

ஆனால் அய்யர் அவர்கள் அத்தகைய தவறைச் செய்யவில்லை. அவர்கள் தமிழர்களின் மதாந்த குணத்தை நன்கறிந்தவர் போலிருக்கிறது. “நம்முடைய தொண்டின் பெருமையை இந்தத் தமிழர்கள் அறியவேண்டுமானால் 80 வயதுக்குமேல் ஜீவித்தே தீரவேண்டும்” என்று இளம்பிராயத்திலேயே தீர்மானித்திருப்பார் போலிருக்கிறது.

எப்படியிருந்தாலும், நம்முடைய அதிர்ஷ்டந்தான். அவருடைய எண்பத்தோராவது வயதிலாவது அவரைக் கௌரவப்படுத்த வேண்டுமென்று நமக்குத் தோன்றியது பெரிய காரியமல்லவா?

ஏதோ, இவ்வளவு தாமதமாகத் தொடங்கியிருக்கும் காரியத்தை அதற்கேற்ற பெருமையுடன் சிறப்பாக நடத்தி வைப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
நண்பன், விகடன்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@

தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே.சாமிநாதையர் அவர்கள் சமுகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக்கொள்வது.

பெரியவாள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாயிருக்கிறது, இவன் யார் கொடுப்பது என்றா? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள் ‘நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது ஔவையாருக்கு எப்படி ‘தமிழ்ப் பாட்டி’ என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் ‘தமிழ்த் தாத்தா’ என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு ‘த்’ களையும் நீக்கிவிட்டால் தாங்கள் ‘தமிழ் தாதா’ ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அநுசரித்து அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக் கணக்கானவர்களுக்குப் பயன்படும்படி செய்த தங்களை, ‘தமிழ்தாதா’ என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

மூன்றாவதாக, 'ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பது போலத் தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கி, தமிழ் தா! தா!' தமிழ் நூல்களைத் தா! தா! என்று கேட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள் (மேற்படி சிலேடை என் சொந்தமல்ல இரவல்தான் என்பதையும் பெரியவாளிடத்திலே தெரிவித்துக்கொண்டுவிடுகிறேன்.)

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரித்தே தீரவேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னமோ அந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன்.

ஏனென்றால், 'மகாமகோபாத்தியாயர்', தாக்ஷிணாத்யகலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்களுடைய தமிழ் வசனநடையைப் போல் எளிதாயிருக்கின்றது.

நல்லவேளை, ஞாபகம் வந்தது. தங்களுடைய தமிழ் வசனநடையைப் பற்றித்தான் ஒன்று கேட்கவேண்டுமென்றிருக்கிறேன். அதென்ன, தாங்கள் அவ்வளவு பெரிய தமிழ்ப் புலவராயிருந்துகொண்டு எவ்வளவு எளிய தமிழ்நடை எழுதுகிறீர்கள்?

என் நண்பர் ஒருவர் தங்களைப்பற்றி நிந்தாஸ்துதியாக ஒன்று சொல்வது வழக்கம்:- 'இந்த அய்யர்வாள் தமிழுக்கு ரொம்ப துரோகம் செய்திருக்கிறார்கள். இவர்கள் வெளியிடும் பழந்தமிழ்க் காவியங்களில் அரும்பத அகராதி ஒன்று சேர்த்திருக்கிறார்களா? அந்த அரும்பத அகராதிகளை வைத்துக்கொண்டு கடுமை கடுமையான வார்த்தைகளைக் கோத்து இந்த நாளில் சிலர் தமிழ் எழுதுகிறார்கள்!' என்று.

அப்படியாகத் தங்களுடைய புத்தகங்களின் உதவியினால் அநேகர் பல் உடைந்து, காது கிடுகிடாய்க்கும்படியான தமிழ்நடை யெல்லாம் எழுதும்போது, தாங்கள் மட்டும் எனக்கெல்லாங்கூட விளங்கும்படியான வெள்ளைச் சொற்களையே உபயோகிக்கிறீர்களே, அது ஏன்? நானும் தங்களுடைய கட்டுரைகளை எல்லாம் படித்தேன்; தாங்கள் எழுதிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரத்தையும் படித்தேன். எனக்கு விளங்காத வார்த்தை ஒன்றுகூட இல்லை. இது தங்களுடைய கௌரவத்துக்குக் குறைவு என்று தாங்கள் நினைக்கவில்லையா?

போகட்டும்; தங்களுக்குச் சமீபத்தில் 80-வயது நிரம்பப்போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா? எனக்கு என்னமோ நம்பிக்கையில்லை. பார்த்தால் பாலியமாய்த் தோன்றுகிறதே? தாங்கள் செய்யும் வேலையைப் பார்த்தாலும் அவ்வளவு வயதானவராக நினைக்கக்கூடவில்லையே?

எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், தாங்கள் ஒரே மூர்த்தன்னியமாய்த் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் ஒருவேளை வயதுக் கணக்கை மறந்திருக்கலாமென்று.

உண்மையாகவே தங்களுக்கு 80 வயது பூர்த்தியாகிற விஷயத்தில் அதை எப்படிச் சாதித்தீர்கள் என்னும் இரகசியத்தைத் தயைசெய்து தெரிவித்துவிடுங்கள். எனக்கென்னமோ, தமிழ் மக்களாகிய நாங்கள் செய்த பூர்வஜன்ம சுகிர்தந்தான் தங்களது நீடித்த ஆயுளுக்குக் காரணம் என்று தோன்றுகிறது.

எதுவாயிருந்தாலும், மார்ச்சு மாதம் 6-ஆம் தேதியன்று தங்களுடைய பேரன் பேத்திகள் எல்லாரும் தங்களுக்குத் திருஷ்டி கழித்துக் கொட்டுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இது தங்கள் காதுக்கும் எட்டியிருக்குமென்று நம்புகிறேன்.

ஏதோ, உருவப்படமாம்; உபசாரப் பத்திரமாம்; தங்களுக்கு இதெல்லாம் உபத்திரவமாய்த்தானிருக்கும். ஆனாலும் பேரன் பேத்திகளின் மனத்திருப்திக்காகத் தாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடைசியாக ஒன்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது மார்ச்சு மாதம் 6-ஆம் நாள் வைபவங்கள் முடிந்து 7-ஆம் நாள் பிறந்ததோ இல்லையோ, உடனே இந்த வயது விவகாரங்களை யெல்லாம் மறந்துவிடுங்கள். நீங்கள் பாட்டுக்குத் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருங்கள். தப்பித் தவறி வயதைப் பற்றி ஞாபகம் வந்தால், 81 என்பதைத் திருப்பி வைத்து 18 என்று எண்ணிக்கொள்ளுங்கள். என்றும் பதினாறு வயதாயிருந்த மார்க்கண்டனைப்போல் தாங்களும் 18 வயதுக்குமேல் போகாமலே இருந்துவிடுங்கள்.

ஏனெனில், தாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கின்றன. தமிழ்த்தாய் இன்னமும் கையில் ஏராளமான பழைய நகைகளை வைத்துக்கொண்டு காத்திருக்கிறாள். அவைகளையும் தாங்கள் மெருகிட்டுத் தரவேண்டுமாம். எப்படியும் ஸ்திரீ யல்லவா? அசாத்திய நகை ஆசை! நிற்க. தங்களிடமிருந்து பேரன் பேத்திகளாகிய நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிற இன்னும் ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. எங்களுக்குக் கதை கேட்பதில் மிகவும் பிரியம். தங்கள் சொந்தக் கதையை முழுதும் பூரணமாய்க் கேட்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் சரித்திரத்தில் ஒருவாறு எங்களுக்கு ஆசை காட்டியிருக்கிறீர்கள். ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், ஸ்ரீமான்கள் வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, மகாவைத்தியநாத

ஐயர், இராமஸ்வாமி சிவன் முதலிய தமிழ்ப் பெரியார்கள் வாழ்ந்த அக்காலத்தைப் பற்றி மேற்படி சரித்திரத்தில் படித்த பிறகு அதற்குப் பிந்திய காலத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கிறோம். அந்த ஆவலைப் பூர்த்திசெய்தல் தங்கள் பொறுப்பு.

தங்களுடைய சுயசரிதத்தை எழுதினால், அது பெரும்பாலும் தமிழ் மக்களின் சரித்திரமாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஏதோ நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன், அப்புறம் தங்கள் விருப்பம்.

இங்ஙனம், அடியேன்,
விகடன்.
ஆனந்த விகடன், 12-2-35

(1898, ஜூலை, மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், முதல் பதிப்பு வெளிவந்தது; முதன் முதலாக உ.வே.சா. உரை எழுதி வெளியிட்ட நூல் இதுவாகும்; 1924, ஜூலை, சிதம்பரம், மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றல், 1937, ஜூலை, 16, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 80-ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்குதல்)

Source: https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagam-july19/37637-2019-07-18-07-59-01

(😊)(😊)(😊)##########(😊)(😊)(😊)

தமிழ்த்தொண்டு

உ.வே.சாமிநாதையர் (1855–1942), 'தமிழ்த்தாத்தா' எனப் போற்றப்படுபவர். அழிந்துபோகும் நிலையில் இருந்த ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்து, பல பண்டைய தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள், சங்க நூல்களை அச்சுப் பதிப்பித்து தமிழுக்கு மீட்டுத் தந்தார். இவர் சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு என 90-க்கும் மேற்பட்ட அரிய நூல்களைப் பதிப்பித்து, தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றியுள்ளார்.

உ.வே.சா-வின் முக்கிய தமிழ் பணிகள்:

- **ஓலைச்சுவடி சேகரிப்பு & பதிப்பு:** 42 ஆண்டுகளுக்கும் மேலாக வீடு வீடாகச் சென்று ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அவற்றை அச்சுப் பதிப்பித்தார்.

- **பதிப்பித்த முக்கிய நூல்கள்:** *சீவகசிந்தாமணி* (1887), *பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு*, மற்றும் பல புராணங்கள்.

- **முதல் நூல்:** இவர் முதன்முதலில் பதிப்பித்த நூல் *வேணுவனலிங்க விலாசச் சிறப்பு* (1878) ஆகும்.

- **என் சரித்திரம்:** தனது வாழ்க்கை வரலாற்றை 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் ஆனந்த விகடனில் தொடராக எழுதினார்.

- **நூலகம்:** இவரின் சேகரிப்பில் இருந்த அரிய சுவடிகள், சென்னை அடையாறில் உள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவரது அரும்பணியால் 19-ஆம் நூற்றாண்டில் மறைந்து போன பல தமிழ் இலக்கியங்கள் புத்துயிர் பெற்றன.

தமிழுக்கு புத்துயிர்

உ. வே. சாமிநாத ஐயர் (உ.வே.சா) அழிந்துபோன பழந்தமிழ் ஓலைச்சுவடிகளை, குறிப்பாக சங்க இலக்கியங்களை, தேடித்தேடிப் பதிப்பித்து தமிழுக்கு புத்துயிர் அளித்தவர் ஆவார். 90-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சிட்ட இவர், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களையும், புறநானூறு, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க நூல்களையும் பதிப்பித்ததனால், "தமிழ்த் தாத்தா" என்று போற்றப்படுகிறார்.

உ.வே.சா அவர்களின் முக்கிய தமிழ்த் தொண்டுகள்:

- **பழந்தமிழ் இலக்கியப் பதிப்பு:** அழிவின் விளிம்பிலிருந்த சங்க கால இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் மற்றும் சிற்றிலக்கியங்கள் உட்பட 90-க்கும் மேற்பட்ட நூல்களை தேடி, ஆராய்ந்து, பிழைகளைத் திருத்திப் பதிப்பித்தார்.

- **சுவடிகள் சேகரிப்பு**

  தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்குச் சென்று, ஓலைச்சுவடிகளைத் தேடி, அவற்றை பாதுகாத்து, 3000-க்கும் மேற்பட்ட ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்தார்

- **முக்கிய நூல்கள்:** சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, ஐங்குறுநூறு, பரிபாடல் போன்ற நூல்களை அச்சு வடிவில் கொண்டு வந்தார்.

- **ஆராய்ச்சி மற்றும் உரை:** பழந்தமிழ் இலக்கியங்களுக்கு சிறந்த விளக்கங்களும், வரலாற்றுச் செய்திகளும், பின்னூட்டங்களும் அளித்து, அவற்றை இன்றைய தலைமுறைக்கு எளிமையாகக் கொண்டு சேர்த்தார்.

- **கல்விப் பணி:** *அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழாசிரியராகப் பணிபுரிந்து, பல அறிஞர்களை உருவாக்கியதுடன், தனது வாழ்க்கை வரலாற்றையும், பழந்தமிழ் இலக்கிய வரலாற்றையும் எழுதி பதிவு செய்தார்.*

அவரது அயராத முயற்சியால் மட்டுமே இன்று நாம் பழந்தமிழ் இலக்கியங்களை வாசிக்க முடிகிறது.

வாழ்க்கை வரலாறு

"தமிழ்த் தாத்தா" என்று அன்போடு அழைக்கப்படும் **உ.வே.சாமிநாதையர் (உ.வே.சா - 1855–1942)**, *அழியும் நிலையில் இருந்த பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடித் தேடி, 90-க்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் பதிப்பித்து தமிழுக்கு உயிர் கொடுத்தவர். 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை மீட்டெடுத்த பெருமை இவரையே சாரும்.*

தமிழ்த்தாத்தா உ.வே.சா வாழ்க்கை வரலாறு:

- **பிறப்பு:** *பிப்ரவரி 19, 1855 அன்று திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அருகே உள்ள* ***உத்தமதானபுரம்*** *என்னும் சிற்றூரில், வேங்கட சுப்பையர்-சரஸ்வதி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.*

- **ஆசிரியர்:** *இவர் தமிழ் இலக்கியங்களை* ***மீனாட்சி சுந்தரம் பிள்ளை*** *என்பவரிடம் கற்றுத் தேர்ந்தார்*

  பணி: *செந்தமிழ்ச் சொற்பொழிவாளர், பதிப்பாசிரியர், தமிழறிஞர் என பன்முகத்தன்மை கொண்டவர்.*

- **பதிப்பித்த முக்கிய நூல்கள்:** *சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, புறநானூறு உள்ளிட்ட பல சங்க இலக்கியங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து அச்சு வடிவத்திற்கு மாற்றினார்.*

- **தமிழ்த்தாத்தா பெயர் காரணம்:** *ஓலைச்சுவடிகளில் புதைந்து கிடந்த பழந்தமிழ் இலக்கியங்களை தேடித்தேடி கண்டுபிடித்து, பிற்காலச் சந்ததியினர் பயன்பெறும் வகையில் அச்சிட்டு, தமிழுக்கு அரும்பணியாற்றியதால் "தமிழ்த் தாத்தா" என்று அழைக்கப்படுகிறார்.*

- **படைப்புகள்:** *3,000-க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப்படிகளைச் சேகரித்து, 90-க்கும் மேற்பட்ட புத்தகங்களைப் பதிப்பித்தார்.*

- **மறைவு:** *ஏப்ரல் 28, 1942-ல் காலமானார்.*

இவரது விடாமுயற்சியால், மறைந்து போகவிருந்த பழந்தமிழர்களின் வரலாறு மற்றும் கலாச்சாரம் மீண்டும் நிலைபெற்றது.

முதலில் பதிப்பித்த நூல்

உ.வே.சாமிநாதையர் (உ.வே.சா) முதன்முதலில் பதிப்பித்த நூல் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு ஆகும். இது **1878**-ஆம் ஆண்டு அல்லது 1887-ல் அவர் தனது 23-வது வயதில் பதிப்பித்து வெளியிட்டார். இது தியாகராச செட்டியாரின் உதவியுடன் பதிப்பிக்கப்பட்டது.

முக்கியத் தகவல்கள்:

- **முதல் நூல்:** வேணுவனலிங்க விலாசச் சிறப்பு (1878).
- **முதல் காப்பியம்:** சீவக சிந்தாமணி (1887).
- **பணி:** அவர் 90-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளை நூல் வடிவமாகப் பதிப்பித்துள்ளார்.

உ.வே.சா அவர்கள் சங்க இலக்கியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் போன்ற பல்வேறு நூல்களைப் பதிப்பித்து 'தமிழ்த் தாத்தா' என்று அன்போடு அழைக்கப்படுகிறார்.

ஆசிரியர் குறிப்பு

உ.வே.சாமிநாதையர் (1855–1942), 'தமிழ்த்தாத்தா' என்று அன்போடு அழைக்கப்படும் சிறந்த தமிழறிஞர், பதிப்பாசிரியர் மற்றும் ஆய்வாளர் ஆவார். அழிந்துபோகும் நிலையில் இருந்த பழந்தமிழ் இலக்கிய ஓலைச்சுவடிகளைத் தேடி, அவற்றை அச்சிட்டுப் பதிப்பித்தவர். இவரது அரும்பணியால் சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட பல சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தன.

உ.வே.சா - ஆசிரியர் குறிப்பு:

- **பெயர்:** உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் சாமிநாதன் (சுருக்கமாக உ.வே.சா).
- **பிறப்பு:** பிப்ரவரி 19, 1855; தஞ்சை மாவட்டம் பாபநாசத்திற்கு அருகிலுள்ள உத்தமதானபுரம்.
- **பெற்றோர்:** வேங்கடசுப்பையர் - சரசுவதி அம்மாள்.
- **ஆசிரியர்:** மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.
- **இயற்பெயர்:** வேங்கடரத்தினம், குருவால் இடப்பட்ட பெயர் - சாமிநாதன்.
- **சிறப்புப் பெயர்கள்:** தமிழ்த்தாத்தா, மகாமகோபாத்தியாய.

முக்கியப் பணிகள்:

- ஏட்டுச்சுவடிகளைப் படித்து, ஒப்பிட்டு, முழுப்பொருள் விளங்கப் பதிப்பித்தார்.

- சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு போன்ற பழந்தமிழ் நூல்களை முதன்முதலில் பதிப்பித்தார்.
- சுமார் 3000-க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்தார்.
- தனது சுயசரிதையை 'என் சரித்திரம்' என்ற பெயரில் ஆனந்த விகடனில் தொடராக எழுதினார்.

பணி மற்றும் சாதனைகள்:

- கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.
- அறப்பணி: ஏட்டுச்சுவடிகளைத் தேடி அலைந்து பழந்தமிழ் இலக்கியங்களைப் புதுப்பித்தார்.
- விருது: இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, இவருக்கு 'மகாமகோபாத்தியாய' பட்டம் வழங்கப்பட்டது.

அழிவின் விளிம்பில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களை தன் வாழ்நாள் உழைப்பால் மீட்டெடுத்து, நவீனத் தமிழுக்குக் கொடையாக வழங்கிய பெருமை இவருக்கு உண்டு.

உ. வே சா கட்டுரைகள்

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் (1855-1942) பழந்தமிழ் இலக்கியங்களை ஏட்டுச்சுவடிகள் மூலம் தேடிக் கண்டுபிடித்துப் பதிப்பித்ததோடு, இலக்கியச் சுவைமிக்க பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். நல்லுரைக்கோவை (4 பாகங்கள்), நினைவு மஞ்சரி (2 பாகங்கள்), நான் கண்டதும் கேட்டதும் போன்றவை அவரது மிக முக்கிய கட்டுரைத் தொகுப்புகளாகும்.

உ.வே.சா-வின் முக்கிய கட்டுரைகள் மற்றும் உரைநடை நூல்கள்:

- **நல்லுரைக்கோவை (1-4 பாகங்கள்):** இதில் பல்வேறு இலக்கிய நயங்கள், அறிஞர்களின் வரலாறுகள் பற்றிய கட்டுரைகள் உள்ளன.
- **நினைவு மஞ்சரி (1-2 பாகங்கள்):** தனது வாழ்க்கை அனுபவங்கள், சந்தித்த புலவர்கள் மற்றும் இலக்கியச் சம்பவங்களை விவரிக்கும் கட்டுரைகள்.
- **நான் கண்டதும் கேட்டதும்**

  அவர் நேரில் பார்த்த நிகழ்வுகள் மற்றும் கேள்விப்பட்ட அரிய செய்திகளைப் பற்றிய கட்டுரைத் தொகுப்பு.
- **புதியதும் பழையதும்:** பழைய இலக்கிய மரபுகளையும் புதிய கால மாற்றங்களையும் ஒப்பிடும் கட்டுரைகள்.

- **பதிப்புப் பணியில் நான்**: ஏட்டுச்சுவடிகளைத் தேடி அலைந்த நாட்களையும், பதிப்புப் பணியில் எதிர்கொண்ட சவால்களையும் விவரிக்கும் கட்டுரைகள்.

கட்டுரைகளின் முக்கிய அம்சங்கள்:

- தமிழ் இலக்கியங்களில் உள்ள அரிய தகவல்களை எளிய தமிழில் விளக்கினார்.
- பண்டைய புலவர்கள், கோவில்கள், மற்றும் சமூக நிலை பற்றிய தகவல்களைப் பதிவு செய்தார்.
- உரைநடை இலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளித்து, தமிழ் வாசகர்களுக்குப் பழந்தமிழ் அறிவை எளிமையாகக் கொண்டு சேர்த்தார்.

உ.வே.சா-வின் கட்டுரைகள், அவர் எழுதிய **என் சரித்திரம்** எனும் சுயசரிதையுடன் இணைந்து தமிழின் முக்கிய உரைநடை இலக்கியச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

உரையாசிரியர் உ.வே.சா.

இரா.வெங்கடேசன்
பிரிவு: உங்கள் நூலகம் - டிசம்பர் 2019
வெளியிடப்பட்டது: 27 டிசம்பர் 2019

(உ.வே.சாமிநாதையருக்கு 'மணிமேகலை' பௌத்த சமயக் காப்பியம் என்பதை உணர்த்தி, அதன் உரை ஆக்கத்திற்குப் பேருதவி செய்த கும்பகோணம் கல்லூரி சமஸ்கிருத பண்டிதர் மளூர் உ.வே.ரங்காசாரியர்)



டாக்டர் உ.வே.சாமிநாதையர் அரை நூற்றாண்டு காலம் ஆசிரியராகவும், முக்கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகப் பதிப்பாசிரியராகவும் இருந்து விளங்கியவர். அயராத பேருழைப்பின் வழியே இந்த இரு துறைகளிலும் புகழ்பெற்று விளங்கியவர் சாமிநாதையர்.

கல்லூரி ஆசிரியர் பணிக்கு இடையில் பழந்தமிழ் நூற்பதிப்பு பணிகளைச் செய்து வந்த அவர், உரையில்லாத தமிழ் நூல்கள் சிலவற்றிற்கு உரையெழுதிப் பதிப்பித்து வெளியிட்டு உரையாசிரியராகவும் திகழ்ந்திருக்கிறார்.

பிற்காலத்தில் தியாகராச செட்டியார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற அறிஞர்களின் வரலாறுகளை எழுதி வெளியிட்டு உரைநடை நூலாசிரியராகவும் புகழ் பெற்று விளங்கியிருக்கிறார். ஆசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், நூலாசிரியர் என்று பல நிலைகளில் அவர் பெருமை பெற்று விளங்கியிருப்பது அவரது சிறப்புகளுள் ஒன்றாகும்.

சாமிநாதையர் உரையாசிரியராக இருந்து விளங்கிய வரலாறு அவர் பதிப்பித்து வெளியிட்ட மணிமேகலைப் பதிப்பிலிருந்து தொடங்குகிறது. 1898இல் வெளிவந்த மணிமேகலைப் பதிப்பிற்கு எழுதிய உரையே சாமிநாதையரின் முதல் உரையாகும். முதல் உரை எழுதியது குறித்துப் பின்னாளில் இப்படி எழுதியிருந்தார் சாமிநாதையர்:

முதல் முதலாக நான் உரையெழுதிய நூல் மணிமேகலை. எனது உரை எளிய நடையில் அமைந்தமை பற்றிப் பலர் பாராட்டினர். பல விஷயங்களை விளக்குகின்றதென்று பலர் புகழ்ந்தனர். கிறிஸ்டியன் காலேஜில் தமிழாசிரியராக இருந்த வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், "யான் இம் மணிமேகலைப் பதிப்பைப் பற்றி முகமனாவொன்றும் எழுதுகின்றிலேன். மிகவும் அற்புதமாயிருக்கின்றது. யான் விரும்பியாங்கே குறிப்புரையும் பிறரால் இது வேண்டும் இது வேண்டாவென்று சொல்லப்படாதவாறு செவ்வனே பொறித்திருக்கும் பெற்றிமையை யுன்னுந் தோறு மென்னுள்ளங் கழிபேருவகை பூக்கின்றது. இப்போழ்தன்றே யெந்தஞ் சாமிநாத வள்ளலைக் குறித்துக் குடையும் துடியும் யாமும் எம்மனோரும் ஆடிய புகுந்தாம். இன்னும் எம் மூரினராய் நின்று நிலவிய நச்சினார்க்கினிய நற்றமிழ்ப்பெருந்தகை போன்று பன்னூற்பொருளையும் பகலவன் மானப்பகருமாறு பைந் தமிழமிழ்தம் பரிவினிற்பருகிய பண்ணவர் பெருமான் எந்தம் மீனாட்சிசுந்தர விமலன் நுந்தமக்கு வாணாள் நீட்டிக்குமாறு அருள்புரிவானாக' என்று எழுதினார் (என் சரித்திரம்).

மணிமேகலையில் தொடங்கிய உரையாக்கப் பணி, வாழ்நாளின் இறுதிவரையில் தொடர்ந்திருக்கிறது. அவ்வப்போது தாம் பதிப்பித்த சில நூல்களுக்குக் குறிப்புரையும், சில நூல்களுக்கு அரும்பதவுரையும் எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிடும் பணியைச் சாமிநாதையர் செய்து வந்திருக்கிறார். சாமிநாதையரின் உரை நூல்கள் காப்பியம், சங்க இலக்கியம், சிற்றிலக்கியம் எனும் வகைப்பாடுகளுள் அடங்கிக் கிடக்கின்றன. அவர் உரை எழுதிய நூல்கள்,

அரும்பதவுரை காப்பியம்

- கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் அருளிச்செய்த மணிமேகலை, 1898, 1921, 1931

சிற்றிலக்கியம்

- திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக்கோவை, 1903

- திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சூரைமாநகர்ப் புராணம், 1904
- திருப்பூவணம் கந்தசாமிப் புலவரியற்றிய திருப்பூவணநாதருலா, 1904, 1923
- சேறைக்கவிராசா பிள்ளை இயற்றிய திருக்காளத்திநாதருலா, 1904, 1925
- திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் ஶ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருவாரூர்த் தியாகராச லீலை, 1905, 1928
- அந்தக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றத்து உலா, 1905
- திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய மண்ணிப்படிக்கரைப் புராணம், 1907
- வீரைநகர் ஆனந்தக்கூத்தர் இயற்றிய திருக்காளத்திப்புராணம், 1912
- திருக்கைலாய பரம்பரைத் திருவாவடு துறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருப்பெருந்துறைப்புராணம் - 1892; முதல் பதிப்பு; அரும்பதவுரை இல்லை; 1913, இரண்டாம் பதிப்பில் அரும்பதவுரை எழுதியமைக்கப்பட்டுள்ளது.
- பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் இயற்றிய தேவையுலா, 1907 மறு அச்சு, 1911, இரண்டாம் பதிப்பு, 1925
- திருவாவடுதுறையாதீனத்துத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருவாவடுதுறைக் கோவை, 1926

குறிப்புரை காப்பியம்

- கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை, 1924, 1935
- உதயணகுமார காவியம், 1935

சிற்றிலக்கியம்

- திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மகாவித்வான் ஶ்ரீகச்சியப்ப முனிவர் இயற்றிய கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது, 1888, முதல் பதிப்பில் குறிப்புரை எழுதியமைக்கவில்லை, 1931 இரண்டாம் பதிப்பில் குறிப்புரை உள்ளது
- செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், 1906, 1927
- திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் ஶ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய தனியூர்ப்புராணம், 1907

- மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது, 1930, 1932
- மாயூரம் இராமையர் இயற்றிய மாயூரமென்று வழங்குகின்ற திருமயிலைத் திரிபந்தாதி, 1930
- சொக்கநாதப் புலவர் இயற்றிய மதுரைச்சொக்கநாதர் தமிழ்விடு தூது, 1930
- புராணத்திருமலைநாதர் இயற்றிய மதுரைச் சொக்கநாதருலா, 1931
- கடம்பர்கோயில் உலா, 1932
- சின்னப்ப நாயக்கர் இயற்றிய பழனிப்பிள்ளைத்தமிழ், 1932
- காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, 1933
- கொட்டையூர் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், 1932
- பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை இயற்றிய மதுரை மும்மணிக்கோவை, 1932
- சங்கர நயினார் கோயிற் சங்கரலிங்க உலா, 1933
- சங்கர நயினார் கோயில் அந்தாதி, 1934
- திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய விளத்தொட்டிப் புராணம், 1934
- துறைமங்கலம் சாமிநாததேசிகரென்னும் வீரசைவக் கவிஞர் இயற்றிய பழமலைக்கோவை, 1935
- திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய ஆற்றூரர்ப்புராணம், 1935
- திருவாவடுதுறையாதீனத்துத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைக்கோவை, 1935
- சிராமலைக்கோவை, 1937
- எல்லப்ப நயினார் இயற்றிய திருவாரூர்க் கோவை, 1937
- அந்தக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றத்து உலா, 1938
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளைவிடுதூது, 1938, 1941
- திருத்தணிகைக் கந்தப்பையர் இயற்றிய தணிகாசலப் புராணம், 1939
- தொல்காப்பியத்தேவர் இயற்றிய திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், 1940
- குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள், 1939
- வீரராகவகவி இயற்றிய வில்லைப்புராணம், 1940



திருப்பூவண நாதருலா.

வே. சாமிநாதையரால்,



மணிமேகலை மூலமும்,

வே. சாமிநாதையரெழுதிய

பாண்டித்துரைத்தேவரவர்கள்

1898.



குறுந்தொகை

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

1937

பதவுரை, விசேடவுரை சங்க இலக்கியம்

- குறுந்தொகை, 1937 என்ற வகைகளில் அமைந்திருக்கின்றன.

சாமிநாதையர் 21.10.1880இல் சேலம் இராமசாமி முதலியாரைச் சந்திக்கச் சென்றபோது, இராமசாமி முதலியார் மணிமேகலைச் சுவடியை இவரிடம் கொடுத்துப் பதிப்பிக்கச் சொல்லிய வரலாறு அனைவரும் அறிந்த ஒன்றாகும். முதலியார் கொடுத்த மணிமேகலை மூலபாடச் சுவடியைக் கையில் வைத்துக் கொண்டு மேலும் பல மணிமேகலைச் சுவடிகளைத் தேடித் திரட்டி ஒப்புநோக்கி ஆராய்ந்து உரை எழுதி 1898இல் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். ஏறத்தாழ பதினெட்டு ஆண்டு கால உழைப்பு, ஆராய்ச்சியின் விளைவாக மணிமேகலைப் பதிப்பு வெளிவந்திருக்கிறது.

சேலம் இராமசாமி முதலியாரிடமிருந்து மூலம் பாடம் மட்டுமிருந்த மணிமேகலைச் சுவடியைப் பெற்று வந்தது முதற்கொண்டு இந்நூலுக்குரிய உரைப் பிரதியைத் தேடும் முயற்சியில் சாமிநாதையர் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறார். தேடுதலில் வேறு பல பழந்தமிழ் நூற்சுவடிகள் கிடைத்தனவேயன்றி மணிமேகலை உரைப் பிரதி அவருக்கு எங்கும் கிடைக்கப் பெறவில்லை. சென்னை, தஞ்சை முதலிய நகரங்களில் இருந்த பழைய கையெழுத்துப் புத்தக சாலைகளிலும் தேடிப் பார்த்திருக்கிறார்; அங்கு வேறு பல பழந்தமிழ் நூற்சுவடிகளே கிடைத்தன; மணிமேகலை உரைப்பிரதி கிடைக்கப் பெறவில்லை. வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் பலரைப் பத்திரிகை வாயிலாக இதைப் பற்றி எழுதியும் கேட்டிருக்கிறார்; அவ்வாறு கேட்கப்பட்டவர்களுள், கொழும்பிலிருந்த யாழ்ப்பணத்து நல்லூர் கைலாசப் பிள்ளையவர்கள், தமது கையாலெழுதிய

மூலப்பிரதி ஒன்றை அனுப்பி வைத்தாரேயன்றி உரைப் பிரதியைத் தேடிக் கண்டு அனுப்பி வைக்க அவரால் இயலவில்லை.

சாமிநாதையர், பாரிஸ் நகரத்திலிருந்த ஜூலியன்வின்ஸன் என்பவருக்குக் கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறார். அவர் 'இந்நகரத்தில் கையெழுத்துப் புத்தக சாலையில் மணிமேகலை மூலப்பிரதி ஒன்று மட்டுமே உள்ளது' என்று தெரிவித்து மாதிரிக்காக அதிலிருந்து பதிகப் பகுதியை மட்டும் படியெடுத்து எழுதி அனுப்பியிருக்கிறார். அவராலும் மணிமேகலை உரைப் பிரதியைத் தேடித் தர இயலவில்லை. அன்பர்கள் பலரும் 'கிடைக்கவில்லை' என்ற விடையை மட்டுமே அளிக்க முடிந்ததே அன்றி இது குறித்துச் சாமிநாதையருக்கு ஒன்றும் செய்ய இயலவில்லை.

சாமிநாதையர், மணிமேகலை உரைப் பிரதியைத் தேடிப் பெறுவதில் பல்வேறு முயற்சிகளைச் செய்து முடித்த பின்னர் மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டு முடிப்பது என்று முடிவு செய்திருக்கிறார். இதை அறிந்த சாமிநாதையரின் அன்பர்கள் பலர் அவ்வாறு வெளியிடுதல் வேண்டாம், உரை எழுதியே வெளியிட வேண்டுமென்று இவரிடம் வேண்டுகோள் வைத்துள்ளனர். அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தாமே அந்நூலுக்கு உரையெழுதி வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இது குறித்து மணிமேகலையின் முகவுரையில் இப்படி எழுதியிருக்கிறார் அவர்,

எவ்விடத்தும் இந்நூலுக்கு உரையகப்படாமையாலும், உரை முன்பு உண்டென்று ஒருவாற்றாலும் விளங்காமையாலும் இனி மூலத்தை மட்டுமாவது வெளிப்படுத்த வேண்டுமென்று நிச்சயித்துப் பதிப்பிக்கத் தொடங்கிய பொழுது, தமிழ்ப் பாஷாபிமானிகளாகிய அன்பர்களிற் சிலர், 'உரையெழுதியே இதனை வெளிப்படுத்த வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறினமையின், அவர்கள் சொல்லை மறுத்தற்கஞ்சி, இது புலவர் திலகர்கள் செய்தற்குரிய அரிய காரியமென்று கருதாமல், "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யென்பெனு நறவமாந்தி, மூங்கையான் பேச லுற்றானென்னயான் மொழிப லுற்றேன்" என்று பெரியோர் கூறியதற்கு இலக்கியமாக, தக்க நூலாராய்ச்சியும் எண்ணியவற்றைச் சுவைபயக்கும்படி நல்ல நடையில் விளங்கவெழுதும் வன்மையுலில்லாத யான், "மணிமேகலை நூனுட்பங்கொள்வதெங்கன்" என்று ஆன்றோரால் நன்கு பாராட்டப்பட்டுள்ள இந்நூற்கு அரும்பதவுரையென்ற ஏதோவொன்றை எழுதத் தொடங்கினேன்.

மணிமேகலைச் செய்யுளுள் உள்ள சொற்கள் பெரும்பாலானவற்றிற்குப் பொருள் நன்றாக விளங்கிக் கிடந்த காரணத்தால், அரிய சொற்களுக்கு மட்டுமே பொருள் தரும் பணியைச் சாமிநாதையர் செய்திருக்கிறார். ஆங்காங்குள்ள செய்யுட் தொடர்களை ஒத்தவைகளாக மணிமேகலையிலும் வேறு பல நூலிலும் காணப்பட்ட செய்யுள் தொடர்களோடு அவ்வவ்விடத்தில் அமைத்துக் காட்டி

அவற்றின் இடங்களை விளங்கச் செய்தும், பொருள் விளங்காத இடங்களில் கேள்விக்குறியை (?) அமைத்தும் உரைக் குறிப்பைத் தந்திருக்கிறார்.

கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட பாடபேதங்களை எடுத்துக் காட்டி அவற்றுள் இன்றியமையாத சிலவற்றிற்கு மட்டுமே பொருளைப் புலப்படுத்தியும், எல்லோருக்கும் எளிதிற் பொருள்விளங்குதற் பொருட்டு வடசொற்களைப் பெரும்பாலும் விரவுவித்தும் உரை எழுதிச் செல்லும் வழக்கத்தைச் சாமிநாதையர் பின்பற்றியிருக்கிறார்.

சாமிநாதையரின் மணிமேகலை ஆராய்ச்சிப் பணிக்கும், உரை ஆக்கப் பணிக்கும் பெருந்துணையாக இருந்து, அவ்வப்போது ஊக்கமளித்து வந்தவர் கொழும்பு நகரத்துப் பொ. குமாரசாமி முதலியார். மணிமேகலை உரையாக்கத்தின்போது ஏற்பட்ட ஐயங்களுக்கு இலங்கையிலுள்ள பௌத்தவித்தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீஸுமங்களரவர்களைக் கொண்டு விடைகள் எழுதியனுப்பிப் பேருதவி செய்தவரும் குமாரசாமி முதலியாரே ஆவார்.

சாமிநாதையருக்கு மணிமேகலையில் ஏற்பட்ட ஐயங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்ள பேருதவி செய்த மற்ற இரு அன்பர்கள், பெருகவாழ்ந்தான் உ.வே. அரங்காசாரியர் அவர்களும், கும்பகோணம் கல்லூரி சமஸ்கிருத பண்டிதராகிய திருமலை ஈச்சம்பாடி உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களும் ஆவர். இவற்றுள் உ.வே. அரங்காசாரியாரே மணிமேகலை இன்ன சமயத்தைச் சார்ந்ததென்பதே தெரியாதிருந்த சாமிநாதையருக்குப் ‘பௌத்த சமய’ நூலென்று தெரியப்படுத்தினார். பாளிபாஷையில்தான் பெரும்பான்மையான பௌத்த மத நூல்கள் உள்ளனவென்று ரங்காசாரியர் சாமிநாதையருக்குத் தெரிவித்துமிருந்தார்.

மணிமேகலை பௌத்த சமயக் காப்பியம் என்பதால் படிப்பவர்களுக்கு விளங்கும்படி, பௌத்த சமயக் கொள்கைகளை விரிவாக எழுதிச் சேர்க்க வேண்டுமென்று சாமிநாதையரின் அன்பர்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டமையால், பௌத்தர்களால் மும்மணிகளென்று பாராட்டப்படும் புத்ததர்ம சங்கங்களின் விவரணங்களாகப் புத்த சரித்திரமும் பௌத்த தருமமும் பௌத்த சங்கமும் என்ற பகுதி, மேற்கூறிய மஹூர், உ. வே. ரங்காசாரியர் அவர்களின் உதவியால் இயற்றி, மணிமேகலைப் பதிப்பிற்கு அங்கமாகப் பதிப்பித்திருக்கிறார். சாமிநாதையர், பிற்காலத்தில் இவற்றை மட்டும் தனி நூலாகப் பல முறைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார் என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

மணிமேகலையில் வரும் அரிய செய்திகளுக்கும், சொற்களுக்கும் தமது புலமைத் திறத்தாலும், பௌத்த சமய அறிஞர்களின் துணைகொண்டும் இவர் எழுதிய குறிப்புரையால் உரையாசிரியர் என்ற நற்பெயரைச் சாமிநாதையர் பெற்று

விளங்கினார். பல நூல்களை ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டிருந்த அனுபவம் மணிமேகலை உரை ஆக்கத்திற்குப் பேருதவியாக இருந்திருக்கிறது.

மணிமேகலைக்குப் பின்னர் சாமிநாதையர் உரை எழுதிய நூல் சீகாழிக்கோவை என்பது தெரிகிறது. 1903ஆம் ஆண்டு மகாவித்துவான் மீனாட்சி சுந்தர பிள்ளை இயற்றிய சீகாழிக்கோவை நூலுக்கு அரும்பதவுரை எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். சீகாழியிற் கோயில் கொண்டெழுந்தருளிக்கும் பிரமபுரேசர் மீது மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய 531 செய்யுட்கள் அடங்கிய நூல் சீகாழிக்கோவையாகும்.

'இந்நூற் செய்யுட்களுள் ஒவ்வொன்றனுடைய நுட்பங்களையும் பிறவற்றையும் தனித்தனியே விளக்கியெழுதப்புகின் மிகவிரியுமென்றஞ்சியே சுருக்கமாக இந்நூற்கு அரும்பதவுரை எழுதியிருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கும் சாமிநாதையர் அரும்பதவுரைப் பகுதியை மூலத்திற்கு அடுத்ததாகத் தனியே அமைத்துத் தந்திருக்கிறார்.

சாமிநாதையர், 1904ஆம் ஆண்டு, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய சூரைமாநகர்ப் புராணத்திற்கும், திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய திருப்பூவணநாதருலா நூலிற்கும், சேறைக்கவிராச பிள்ளை இயற்றிய திருக்காளத்திநாதருலா நூலிற்கும் அரும்பதவுரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

சாமிநாதையர், சீகாழிக்கோவை நூலில் அரும்பதவுரைப் பகுதியைத் தனியே அமைத்திருந்ததைப் போன்றே இவ்விரு நூல்களிலும் அரும்பதவுரைப் பகுதியைத் தனியே அமைத்துத் தந்திருக்கிறார். இதுபோன்று பல சிற்றிலக்கிய நூல்களுக்குக் குறிப்புரை எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார் என்பது இங்கு நினைத்தற்குரியது. சாமிநாதையரின் உரை நூல்களை ஒருங்கு வைத்து நோக்குகின்றபொழுது சிற்றிலக்கிய நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதியிருப்பது தெரிகிறது. குறிப்புரையைச் சில நூல்களில் இறுதியாகவும், சில நூல்களில் அவ்வவ்பாட்டிற்குக் கீழே அடிக்குறிப்பாகவும் அமைத்துத் தந்திருக்கிறார்.

சாமிநாதையர் உரை எழுதிய காப்பிய நூல்களுள் இரண்டாவது நூல் பெருங்கதையாகும். பெருங்காப்பிய நூலான மணிமேகலைக்கும் பல சிற்றிலக்கிய நூல்களுக்கும் உரை எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிட்ட பேரனுபவம் பெருங்கதை உரையாக்கத்திற்குத் துணை நின்றுள்ளன. 1924ஆம் ஆண்டு இவர் உரை எழுதிப் பதிப்பித்து வெளியிடப் பெற்ற பெருங்கதைப் பதிப்புப் பலரின் கவனத்தைப் பெற்றது. பத்துப்பாட்டுப் பதிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த (1889இல் பத்துப்பாட்டு முதல் பதிப்பு வெளிவந்திருக்கிறது) காலத்தில் அந்நூற் சுவடியைத் தேடிப் போன இடத்தில் 'கொங்குவேண்மாக்கதை' என்ற பெயரிட்ட பழஞ்சுவடியாக இந்தப் பெருங்கதைச் சுவடி சாமிநாதையருக்குக்

கிடைத்திருக்கிறது. பெருங்கதைச் சுவடி கிடைத்து ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் கழித்துப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். இந்தப் பெருங்காலப் பரப்பில் அவ்வப்போது ஓய்வு நேரங்களில் பெருங்கதை ஆராய்ச்சிப் பணியைச் சாமிநாதையர் செய்து வந்திருக்கிறார்.

மூலத்தை மட்டும் பதிப்பித்து முடித்த பின்னர், எழுதித் தொகுத்து வைத்திருந்த குறிப்புகள் எல்லாம் வீண் போகாதபடி அவற்றை ஒழுங்குபடுத்திக் குறிப்புரை என்று எழுதியமைத்ததாகப் பெருங்கதை முதல் பதிப்பில் குறிப்பிட்டிருக்கிறார். முதல் பதிப்பில் (1924) மூலத்திற்குப் பின்னர் குறிப்புரைப் பகுதியைத் தனியாக அமைத்துப் பதிப்பித்திருந்த சாமிநாதையர் இரண்டாம் பதிப்பில் (1935) அவ்வப்பக்கத்தின் அடிக்குறிப்பாகச் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறார்.

குறிப்புரையில், ஒவ்வொரு சிறிய பாகத்தின் முதலில் கருத்தும், இன்றியமையாத இடங்களில் சொற்களுக்குப் பொருளும், வாக்கியங்களுக்கும் கருத்துக்களுக்கும் பெருங்கதை நூலிலிருந்தும், பழைய நூல்களிலிருந்தும், பிற்காலத்து நூல்களிலிருந்தும் ஒத்த பகுதிகளும் வருகையிடங்களும் தரப்பட்டுள்ளன.

கதைப் போக்கை நன்கு தெரிந்து கொள்வதற்கு ஏற்றவாறு, உதயணனுடைய சரித்திரச் சுருக்கம் வசன நடையாக எழுதப் பெற்று இந்நூலுக்கு அங்கமாகப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. சாமிநாதையர், மணிமேகலைப் பதிப்பிலும் இதுபோன்று வசனநடை பகுதியை எழுதியமைத்திருப்பது நினைவு கொள்ளத்தக்கது.

பெருங்கதையிலுள்ள வடநூல் கருத்துக்களைச் சாமிநாதையருக்குத் தெரிவித்தும் வேறுள்ள வடநூல்களைப் படித்துப் பொருள் கூறியும் உதவியவர் ஸ்ரீநிவாஸநல்லூர், ஷி. ராமசந்திர சாஸ்திரி என்பவர். பல்வேறு இடங்களுக்குச் சென்று முயன்று உதிதோய காவ்யத்தைப் பெற்று வந்து சாமிநாதையருக்கு உதவியவர், செஞ்சியைச் சார்ந்த விளாத்தியென்னும் கிராமத்திலுள்ள கணிதம் சின்னத்தம்பி சாஸ்திரியார். சாமிநாதையர் இவ்விருவரின் பேருதவியால் பெருங்கதைக்குக் குறிப்புரை எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

சாமிநாதையர் உரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்ட ஒரே சங்க இலக்கிய நூல் குறுந்தொகையாகும். சாமிநாதையரின் உரை ஆக்கத்தில் முன்வைத்து நோக்கத்தக்கதும் குறுந்தொகை உரை மட்டுமேயாகும்.

நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்

என்பது நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுளின் ஒரு பகுதி. இதில் 'பேராசிரியர் தம்முடைய கல்வித் திறனும் அறிவு வன்மையும் உலகினர் அறியும்படி குறுந்தொகைக்குப் பொருள் எழுதினார்' என்பதும், இருபது செய்யுட்களுக்கு மட்டும் எழுதவில்லை என்பதும், அந்த இருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதினார் என்பதும் கூறப்படுகின்றன. நச்சினார்க்கினியர் உரை வகுத்த நூல்களைத் தொகுத்துரைக்கும் செய்யுளாகிய,

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும் - சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே

என்பதிலும் நச்சினார்க்கினியர் 'குறுந்தொகையுள் ஐஞ்ஞான்' கிற்கு உரைகண்ட செய்தி காணப்படுகின்றது. தொல்காப்பியம் அகத்திணையியலில்,

உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே (46)

என்னும் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் ஏனையுவமம் வந்த செய்யுளுக்குக் குறுந்தொகையில் உள்ள 'யானே யீண்டை யேனே' (குறுந். 54) என்பதைக் காட்டி, 'பேராசிரியரும் இப்பாட்டில் மீனெறிதூண்டி லென்றதனை ஏனையுவம மென்றார்' என எழுதியிருக்கிறார். இதனால் பேராசிரியர் குறுந்தொகைக்கு உரை எழுதியிருந்தது புலப்படுகின்றது. குறுந்தொகைக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர் என்ற இரு உரையாசிரியர்களால் எழுதப்பட்ட பழைய உரை இப்பொழுது நமக்குக் கிடைக்கப் பெறாமல்போனது தமிழுக்கு நேர்ந்த பெரும் இழப்புகளுள் ஒன்றாகும். உ.வே. சாமிநாதையர் குறுந்தொகைக்கு உரை எழுதி வெளியிட்டது அந்த இழப்பை ஈடு செய்யும் வகையில் அமைந்ததாகக் கொள்ளலாம். சாமிநாதையரின் உரை ஆக்கத்தில் சிறந்து விளங்கி நிற்பது குறுந்தொகை உரை ஆகும்.

சாமிநாதையர் பல ஆண்டுகளாகவே குறுந்தொகைக்கு உரை எழுதிப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்திருக்கிறார். இடையில் வாணியம்பாடி உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்த தி.சௌ. அரங்கசாமி ஐயங்கார் 1915ஆம் ஆண்டு குறுந்தொகைக்கு உரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். இதன் பின்னர் 1933ஆம் ஆண்டு புரசவாக்கம் ஸர் எம். ஸி. டி. உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்த வித்துவான் சோ. அருணாசல தேசிகரவர்கள் குறுந்தொகை மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டிருந்தார்.

நெடுங்காலமாகக் குறுந்தொகை ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த சாமிநாதையருக்கு மேற்கண்ட இருவரின் குறுந்தொகைப் பதிப்பாக்கம் சிறிது ஊக்கம் தளரும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் குறுந்தொகை ஆராய்ச்சியை இடைநிறுத்திவிட்டுப் பிற நூல் ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத்தியிருக்கிறார்.

பழைய உரை இல்லாமையால் புதிய உரை எழுதி இந்நூலை வெளியிட வேண்டுமென்ற கருத்து, சில தமிழ் அன்பர்களுக்கு இருந்ததைச் சாமிநாதையர் உணர்ந்திருக்கிறார். அன்பர்கள் பலரும் குறுந்தொகைப் பதிப்பை வெளியிட வேண்டிய அவசியம் குறித்து இவரை அடிக்கடி தூண்டியும் வந்துள்ளனர். பல ஆண்டுகளாக உழைத்துத் தொகுத்து வைத்திருந்த குறிப்புக்கள் வீணாகாமல் இருக்கும் பொருட்டுக் குறுந்தொகையை வெளியிட வேண்டும் என்ற கருத்து சாமிநாதையருக்கு ஏற்பட்டிருக்கிறது. குறுந்தொகை ஆராய்ச்சியை மீண்டும் தொடங்கி தொடர்ந்து செய்து வந்திருக்கிறார். குறிப்புக்களும் ஒப்புமைப் பகுதிகளும் உரைப் பகுதிகளும் முறையாக எழுதித் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது இவரோடு இருந்து பழகுபவர்கள் பலர் இந்த ஆராய்ச்சிக்கு உதவியாக இருந்துள்ளனர்.

சாமிநாதையரின் குறுந்தொகை உரை பதவுரை, விசேடவுரை என்ற இரு நிலைகளில் அமைந்து காணப்படுகின்றது. இந்த உரை அமைப்பு குறித்துச் சாமிநாதையர் இப்படி விளக்கியுரைத்திருக்கிறார்.

“**பதவுரை :** அந்வயப்படுத்திப் பொருள் விளக்குதற்குரிய சொற்களைப் பெய்து பதவுரை எழுதப்பட்டுள்ளது; பல விடங்களில் விளி முன்னத்தால் வருவித்தெழுதப்பட்டது. சில செய்யுட்களுக்கு ஒருவாறு உரை யெழுதினும் முடிபு முதலியன தெளிவாக இன்மையின் என் மனத்திற்குத் திருப்தி உண்டாகவில்லை.

விசேடவுரை : பதசாரங்களும், இலக்கணச் செய்திகளும், பொருள் விளக்கங்களும், வரலாறுகளும் இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளன. உள்ளுறையுவமம், இறைச்சி யென்னும் இரண்டும் குறிப்பெனவே குறிக்கப்பட்டுள்ளன”.

1898ஆம் ஆண்டு மணிமேகலைக்கு உரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்ட சாமிநாதையர், அதன் பின்னர் ஏறத்தாழ நாற்பதுக்கும் மேலான நூல்களுக்கு உரை எழுதியமைத்துப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். குறிப்புரை, அரும்பதவுரை, பதவுரை, விசேடவுரை எனும் வகைகளில் அவரது உரை வகைகள் அமைந்திருக்கின்றன. தமிழின் ஆகச் சிறந்த நூல்களை ஆராய்ந்து குறிப்புகள் எழுதிப் பதிப்பித்திருந்த பேரனுபவம் உரை ஆக்கத்திற்குப் பெருந்துணை புரிந்துள்ளன. குறுந்தொகைக்கு உரை எழுதத் துணிந்தது குறித்து ஓரிடத்தில் இப்படி எழுதியிருப்பார் சாமிநாதையர்,

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரை எழுதிய இந்நூலுக்கு உரை எழுதும் தகுதி என்பாற் சிறிதுமில்லை என்பதையும் என் முதுமையாலும் பலவேறு வகையான முட்டுப்பாடுகளாலும் எனக்கு உண்டாகி உள்ள தளர்ச்சியையும் நன்கு உணர்ந்திருப்பினும் இளமை தொடங்கி இவ்வுலகில் யாதினும் சிறந்ததாக எண்ணி வாழ்ந்து வருதற்குக் காரணமாகிய தமிழிடத்துள்ள அன்பும், எங்ஙனமேனும் இறைவன் இம் முயற்சியை நிறைவேற்றி அருளுவான் என்ற துணிவும் இப்பதிப்பில் என்னை ஈடுபடச் செய்தன (குறுந்தொகை முகவுரை)

பழந்தமிழ் நூல்களுக்குச் சாமிநாதையர் எழுதிய உரைகள், தமிழ் உரை மரபை உள்வாங்கி எழுதப் பெற்றவையாக அமைந்திருக்கின்றன. சாமிநாதையரின் பழந்தமிழ்நூற் பாடல்களுக்கான உரையை ஆராய்ந்து நோக்கிய அளவில் இலக்கணக் குறிப்புகளைக் குறித்துக் காட்டுவதிலும், பிற நூல் கருத்துக்களை ஒப்பிட்டுக் காட்டுமளவிலும், பாடபேதங்களைச் சுட்டிக் காட்டும் முறையிலும், இலக்கண உரைக் கருத்தைத் தழுவிச் செல்லும் முறையிலும் சிறந்து விளங்கி நிற்கின்றன. பிற்காலத்தில் எழுதப்பட்ட உரைகளாயினும் தமிழ் உரை நெறியினை அடியிற்றியிருத்தலைக் காண முடிகின்றது. குறுந்தொகை, மணிமேகலை, பெருங்கதை நூல்களுக்குச் சாமிநாதையரின் காலத்திற்குப் பின்னர் பலரும் பலவகை உரைகளை எழுதி அமைத்துப் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அந்த உரைகளெல்லாம் சாமிநாதையரின் உரையின் சுருக்கமாகவும் விரிவுமாகவே அமைந்துள்ளன என்பதை மறுத்தற்கில்லை. இந்த ஒரு தன்மையைச் சாமிநாதையர் உரையின் சிறப்புமாகவும், தனித்தன்மையாகவும் சுட்டலாம்.

Source:
https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagam-dec-19/39382-2019-12-27-05-25-22

@@@@@@@@@@@@@@@@@@@@@@

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY

உ.வே.சா. வின் உரைநடை நூல்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் புதிய தமிழ் உரைநடை மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை உருவாக வேண்டும் என்று பாரதியார், உ.வே.சா. போன்றோர் அயராது பாடுபட்டனர்.

> "தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷம் ஆகவில்லை... ஆதலால் இப்போதே வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சி செய்ய வேண்டும்"

என்ற கருத்துடைய பாரதியார் உரைநடை நூல்களையும் எழுதத் தொடங்கினார்.

பாரதியாரைப் போலவே **நினைவு மஞ்சரி** என்னும் நூலின்முதல்பாக முன்னுரையில் உரைநடையின் எளிமை பற்றியும், அக்காலமக்களின் விருப்பம் பற்றியும் உ.வே.சா. வும் பின்வருமாறு கூறியுள்ளார்.

> "காலத்திற்கும் நாகரீகத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப ஜனங்களுடைய கருத்துக்களும் விருப்பங்களும் மாறிவருகின்றன,,, செய்யுளைக்காட்டிலும் வசனம் மூலமாக ஜனங்கள் விஷயங்களை மிகவும் சுலபமாகத் தெரிந்து கொள்ள இயல்வது தான்"

என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து அவர்கால இலக்கிய நடையையும், மக்களின் விருப்பத்தையும், உரைநடையின் வளர்ச்சியையும் அறிந்துகொள்ள முடிகிறது. காலத்தின் தேவைக்கேற்ப உரைநடை அமையவேண்டிய திறம் குறித்து உ.வே.சா. சிந்தித்திருக்கிறார்.

கட்டுரை நூல்கள்

எளிய தமிழில் பொருளைத் தெளிவாகவும் நயம் பொருந்தவும், புலப்படுத்தும் ஒரே நோக்குடன் இவர் உரைநடை நூல்களை இயற்றினார். உ.வே.சா., சிறந்த கட்டுரையாசிரியர், அவர் எழுதிய கட்டுரைகள் **நல்லுரைக்கோவை** (4 பாகங்கள்), **நினைவு மஞ்சரி** (2 பாகங்கள்), **நான் கண்டதும் கேட்டதும்** எனும் நூல்களாக வெளிவந்தன, **புதியதும் பழையதும், மணிமேகலை கதைச்சுருக்கம், புத்தசரிதம், திருக்குறளும் திருவள்ளுவரும், மத்தியார்ச்சுன மான்மியம்** என்பன அவர் எழுதிய பிற கட்டுரை நூல்கள். மேலும்சில செய்திகளைக் கூட்டிக் கதைகள் போல எழுதியுள்ளார். அவற்றுள் நடந்தவைகளும் அவர் கேட்டவைகளும் எனப் பல திறத்தன உள. இவர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் பிறரும் அறிந்து மகிழும் வண்ணம் சுவைபட எழுதியுள்ளார். **சிறந்த குருபக்தி, சுவாமி இருக்கிறார், மாம்பழப்பாட்டு** போன்ற கட்டுரைகள் நகைச்சுவை தோன்ற எழுதப்பட்டனவாகும். **என்ன வேண்டும்? சங்கராபரணம் நரசையர், அவன் போய்விட்டான்** போன்ற கட்டுரைகள் படித்து இன்புறத்தக்கன. முத்தமிழ் சாராத வேறு பொதுவான செய்திகளையும் உ.வே.சா. எழுதியுள்ளார்.

வரலாற்று நூல்கள்

ஐயர் எழுதிய உரைநடை நூல்களை இருவகையாகப் பிரிக்கலாம். வாழ்க்கை வரலாறுகள் ஒருவகை; மற்றொருவகை ஏடுதேடிய வரலாறுகள். வாழ்க்கை வரலாற்று நூல்கள் மொத்தம் ஏழு. அவை:

(1) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்- பகுதி-1

(2) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்- பகுதி-2

(3) மகாவைத்தியநாதையர்,

(4) கனம் கிருஷ்ணையர்,

(5) கோபால கிருஷ்ண பாரதியார்,

(6) என் சரித்திரம்,

(7) வித்துவான் தியாகராசச் செட்டியார்

தனித்தனியே சிலருடைய வரலாறுகள் நூல்வடிவில் எழுதியதையன்றிக் கட்டுரை வடிவிலும் பலருடைய வரலாறுகளை எழுதியுள்ளார். புதுக்கோட்டையில் திவானாக இருந்த சேஷையா சாஸ்திரியார், பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார், இசைப்புலவர் ஆனை ஐயா, சுப்பிரமணிய பாரதியார் முதலிய பலரைப்பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

நூல்களின் சுவைத்திறம்

எந்த நிகழ்ச்சியைக் கூறினாலும் அதைப் படிப்பவர் மனத்தில் பதியும்படி சுவையுடன் விரித்தெழுதுவது சாமிநாதையர் இயல்பு. இவரது உரைநடை நூல்களில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் இதைக் காணலாம்.

> "தெளிவான நடையில் எல்லோருக்கும் விளங்கும் சொற்களைப் பெய்து உயிரோவியத்தைப் போலத் தாம் கூறுவதை எழுதும் ஆற்றல் ஐயருக்கு இருந்தது. சிறிய வகுப்பில் படிக்கும் பிள்ளை முதல் பெரும்புலவர் வரையில் அவருடைய கட்டுரைகளைப் படித்து மகிழலாம். அவரவர்கள் தகுதிக்கு ஏற்றபடி அவற்றின் சுவையை உணரலாம்"

என்று அவர் மாணவர் கி.வா. ஜகந்நாதன் பாராட்டியுள்ளார். மேலும் எஸ்.டி. காசிராசன் என்பவர்,

> "பாட்டியற்றும் வன்மை, உரை காணும் திறம், உரைநடை எழுதும் ஓட்டம், கேட்பவர் உளங்கொள எடுத்துரைக்கும் பேச்சாற்றல், நகைச்சுவை ஆகிய இவை ஒருங்கே அமைந்து விளங்கியமை அவர் தம் பலதிறத் தொண்டுகளுக்கும் அணிக்கு அணி செய்வது போல் விளங்கா நின்றன"

என்று பாராட்டியுள்ளார்.

கவித்துவத் தலைப்பு

உரைநடை நூல்களில் தாம் எழுதியுள்ள கட்டுரைகளுக்கு இவர் அருமையான தலைப்புகள் இடுவார். அத்தலைப்புகளே செய்தியின் சுவையைக் கூட்டும்; கட்டுரையைப் படிக்கத் தூண்டும். சுவடிகளைப் பதிப்பிப்பதற்காக இவர் ஏடு தேடிப் பல ஊர்களுக்கும் செல்வதுண்டு. அவ்வாறு சென்று தேடிவரும் பொழுது. **பத்துப்பாட்டு**ச் சுவடியின் ஒரு பகுதியான முல்லைப்பாட்டு அடங்கிய ஏடொன்று கிடைத்தது. அது கிடைத்த போது இவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நிலவு ஒளி வீசும் இரவில் அது கிடைத்ததால், 'நிலவில் மலர்ந்த முல்லை' என்ற அருமையான தலைப்பிட்டுக் கலைமகள் மாத இதழில் விரிவாக எழுதினார். **நல்லுரைக்கோவை** இரண்டாம் பாகத்தில் அது இடம் பெற்று நூலாய் வெளிவந்தது. அந்நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறுவதைக் காணலாம்.

“என் நண்பர்களுடன் நான் ஆகாரம் செய்து கொண்ட வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தேன், நிலா ஒளி நன்றாக வீசியது. அப்போது லட்சுமணக் கவிராயர் மிகவும் வேகமாக நாங்கள் இருந்த இடம் வந்து ‘இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். இந்த ஒன்றுதான் என் மாமனாரிடம் உள்ளது. பார்த்துவிட்டுத் திருப்பியனுப்பி விடுவதாக வாங்கி வந்திருக்கிறேன்’ என்று ஒரு சுவடியைக் கொடுத்தார். எனக்கிருந்த ஆவலினாலும் வேகத்தினாலும் நிலா வெளிச்சத்திலேயே அதைப் பிரித்துப் பார்த்தேன். சட்டென்று ‘முல்லைப்பாட்டு’ என்ற பெயர் என் கண்ணிற்பட்டது. அப்போது எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. திருமுருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுக்கள் வரிசையாக இருந்தன”.

முல்லைப்பாட்டு கிடைத்த மகிழ்ச்சியையும், அவருடைய கவித்துவப் பண்பையும் ‘நிலவில் மலர்ந்த முல்லை’ என்ற தலைப்பு வெளிப்படுத்துகிறது.

Source:

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1021-html-p1021444-24726

உ.வே.சா.நூலகம்

சென்னை பெசண்ட் நகரில் அமைந்துள்ள உ.வே.சா நூல் நிலையம் (1943-ல் நிறுவப்பட்டது), தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையரின் அரிய தமிழ் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் 40,000-க்கும் மேற்பட்ட அரிய நூல்களின் களஞ்சியமாகும். இது பிரம்மஞான சபையின் (Kalakshetra) ஒரு பகுதியாக, தமிழ் இலக்கியப் புதையல்களைப் பாதுகாத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கி வருகிறது.

முக்கிய சிறப்பம்சங்கள்:

- **அமைவிடம்:** சென்னை, பெசண்ட் நகர், அருண்டேல் கடற்கரை சாலை.
- **சேகரிப்புகள்:** 2,200-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள், 3,000-க்கும் மேற்பட்ட கையெழுத்துக் கடிதங்கள் மற்றும் நாட்குறிப்புகள்.
- **பராமரிப்பு:** தமிழ்நாட்டின் தொன்மையான ஓலைச்சுவடிகள், அரிய வகை புத்தகங்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப்படுகிறது.
- **பயன்பாடு:** ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்யவும், அரிய நூல்களைப் படிக்கவும் அறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு இது ஒரு மிகச்சிறந்த இடமாகும்.

இந்த நூல் நிலையம், உ.வே.சா. அவர்களின் அரிய பதிப்புகளைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுகிறது.

Welcome to
Dr.U.Ve.Swaminatha Iyer Library, Chennai

https://uvesalibrary.org/

This Library was started in the year 1943 in memory of eminent Tamil scholar and researcher Dr.U.Ve.Swaminatha Iyer. It has a significant collection of more than 3,000 letters written by other scholars to Dr.U.Ve.Swaminatha Iyer, diaries written by him, 1,832 books and 939 manuscripts collected by him. Moreover, this library has ancient rare printed books and letters from the year 1923 onwards and these valuable collections are being digitized and preserved in CDs.











Collections

1. Palm Leaves
2. Paper Manuscript
3. Books
4. Journals
5. Dr. U.Ve.Sa. Letters Received by them.
6. Dr.U.Ve.Sa. Diaries

Palm Leaf Manuscripts

Almost 2170 Plam Leaf Manuscripts consisting Pattu-pattu, Ettu-thogai, Pathinenkeezh Kanakku, Agapporul Vilakkam, Agaradhi Nigandu, Arichandra Puranam, Saminatham, Sekizhar Puranam, Thonnool, Small literatures, Leaves on Medicine, Kamba Ramayanam, Many Temple Sthala Puranams, Veerachoziyam, Tholkappiyam new explanatory notes, Perunkadhai, Ramayanam, Mahabharatham, Bhagavat Gita, Periya Puranam, Ilakkana Kothu are available in the library. Most of them are almost 350 years old and above. The Veerachoziyam text is different and comparably new from the original Perunadevanar Text. The original written script of the Tamil Scholar Shri Mahavidwan Meenakshi Sundaram Pillai, on Seevaga Chintamani and Nachinarkiniyar are available in this library.

Handwritten Paper Manuscripts

Agananooru Arumpadha Agaradhi (Encyclopedia) – 3 Volumes, Thevara Arumpadha Agaradhi, Pulavar Varalaaru (Poets' Biographies), Notes on Kamba Ramayana, many individual songs written by Dr U. Ve. Swaminatha Iyer and his famed disciples like Ki.Va. Jagannathan, S.Ku. Ganapathi Iyer are all written on Kadukkai inks on Palm Leaves. (Decoction Ink made from Terminalia Chebulia seeds).

Letters

The 3000 plus letters written by many Tamil Scholars to Shri U.Ve.Sa like Julien Vinsone, G.U.Pope, Nelliappa Kavirayar, Ira.Pi. Sethupillai, Manonmaneeyam Sundaram Pillai, Si.Vai. Damodharam Pillai, Vaiyapuri Pillai are all maintained in this library running to almost 8000 pages.

Printed Books

Some 41116 printed books which include Thirukkural Visagapperumal Iyer's commentary on Thirukkural (1830), Sivapunniya Thelivu (1836), Thonnool Vizakkam (1838) a printed book on hand made paper, Thiruvengaik kovai (1839) are most remarkable collections.

Magazines

Old magazines like Janavinodhini, Viveka Chintamani, Gnana Bodini, Viveka Bhodini, Chakravarthini, Vidya Bhanu, Puduvai Kalaimagal, Jana Abhimani, Senthamizh, Tamil pozhil, Senthamizh Selvi, Kalaimagal, Ananda Vikatan, Gnana Bhandam, Sri Kumara Gurubarar, Balajotidam, Sengunda Mitran, Vedanta Deepikai, Thirukkoil, Arya Dharmam are some notable collections.

Diaries

The diaries of Dr U.Ve. Swaminatha Iyer dating from 1893 to 1939 is preserved here.

Publications

The 288 printed books of Dr .U.Ve.Sa. Library.

Rare Collections

The things used by Dr. U.Ve.Swaminatha Iyer and the gifts and copper plates given to him by the then Pontiff of the Thirupanandhal Mutt are all preserved here. Many researchers, scholars flock the library for references. At least 2000 students and scholars take notes and data from this library.

Publications

Publication Details

Email : druvslibrary@gmail.com

Phone No. 044-2491 1697

Mr.V.Krishnamoorthy Cell No. 80720 70668

Mrs. S.Sathiyavani Cell No. 97102 91465

விலைப்பட்டியல்

வ.எண்	நூல்கள்	விலை
1	நற்றிணை மூலமும் உரையும்	500
2	குறுந்தொகை மூலமும் உரையும்	600
3	ஐங்குறுநூறு	200
4	பதிற்றுப்பத்து	240
5	பரிபாடல்	200
6	கலித்தொகை	900
7	புறநானூறு	500
8	பத்துப்பாட்டு	600
9	சிலப்பதிகாரம்	500
10	மணிமேகலை	320
11	ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்	400
12	என் சரித்திரம்	500
13	வித்துவான் தியாகராச செட்டியார்	100
14	சங்கீத வித்துவான்கள் சரித்திரம்	80
15	சங்கீத மும்மணிகள்	180
16	உதயணன் சரித்திரச் சுருக்கம்	45
17	The Story of Udayana	12
18	என் ஆசிரியப்பிரான்	200
19	உ.வே.சாமிநாதையர் கடிதக் கருவூலம்-தொகுதி 1	600
20	நான் கண்டதும் கேட்டதும்	120
21	திருவள்ளுவரும் திருக்குறளும்	35
22	நல்லூரைக்கோவை	280
23	நினைவு மஞ்சரி	200
24	சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்	120
25	ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம்	40
26	சைவ சித்தாந்த உரைநடை	80
27	உ.வே.சாமிநாதையர் அணிந்துரைகள்-சிறப்புப்பாயிரங்கள்	180
28	கம்பராமாயணம் 6 காண்டங்கள், 9 தொகுதிகள்	6000
29	தமிழ்நெறி விளக்கம்	60
30	புறப்பொருள் வெண்பா மாலை	150
31	காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்	100
32	பழனிப் பிள்ளைத்தமிழ்	30

33 திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் 80

34 திருவானைக்கா அகிலாண்டநாயகிப் பிள்ளைத்தமிழ் 60

35 திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் 60

36 அபிநயதர்ப்பணம் 100

37 உமையம்மை திருப்புகழ் 35

38 ஒரு துறைக்கோவை இரண்டு 70

39 கற்பகவல்லி நாயகி மாலை 35

40 திருமயிலை திரிபந்தாதி 25

41 துறைசை மாசிலாமணி ஈசர் அந்தாதி 15

42 தூதுநூல்கள் - 7 175

43 மதுராபுரி அம்பிகை மாலை 33

44 மாலை ஐந்து 30

45 மூன்று பணவிடு தூது நூல்கள் 45

46 கிருஷ்ணலீலை 95

47 திருத்தலங்கள் வரலாறு 400

48 திருக்கன்றாப்பூர்ப் புராணம் 30

49 வில்லைப்புராணம் 80

50 மண்ணிப்படிகரைப் புராணம் 80

51 வீரவனப்புராணம் 45

52 தனியூர் புராணம் 45

53 விளத்தொட்டிப் புராணம் 60

54 திருநாகைக்காரோணப் புராணம் 600

55 சூரைமாநகர்ப் புராணம் 100

56 தென்திருப்பேரை மகரநெடுங்குழைக்காதர் பாமாலை 40

57 பதிபசு பாசப் பனுவல் 135

58 திருவிடைமருதூர் உலா 55

59 தில்லையுலா60

60 மூவூருலா 42

61 நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி 100

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்

எண்.2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 600 090.

மின்னஞ்சல் : druvslibrary@gmail.com

தொலைபேசி எண். 044-2491 1697, கைபேசி எண். 080720 70668, 0 97102 91465

சில நூல்கள்

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் (U.Ve.Sa) சங்க இலக்கியங்களை அச்சு வடிவில் பதிப்பித்ததோடு, பல சுயசரிதை மற்றும் இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது முக்கிய புத்தகங்கள்: **என் சரித்திரம்**, **மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்**, **நான் கண்டதும் கேட்டதும்**, **நல்லுரைக் கோவை**, மற்றும் **பழையதும் புதியதும்**.

உ.வே.சா அவர்களின் குறிப்பிடத்தக்க புத்தகங்கள்:

- **என் சரித்திரம்**: இது அவரது சுயசரிதை நூல், உ.வே.சா.வின் வாழ்க்கை மற்றும் அக்காலச் சூழலை விவரிக்கும் மிக முக்கிய நூல்.
- **மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்**: அவரது ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு.
- **நான் கண்டதும் கேட்டதும் புதியதும் பழையதும்**

  இலக்கிய நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களின் தொகுப்பு
- **நல்லுரைக் கோவை**: கட்டுரைகளின் தொகுப்பு.
- **பதிப்பித்த சங்க இலக்கியங்கள்**: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல் போன்றவை.

புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்:

- கலைச்சுவடு, அடையாளம், டிஸ்கவரி புக் பேலஸ் போன்ற பதிப்பகங்கள்.
- Project Madurai மற்றும் Dr.U.Ve.Swaminatha Iyer Library (uvesalibrary.org) இணையதளங்களில் சில புத்தகங்கள் வாசிக்கக் கிடைக்கின்றன.
- Amazon.in, Pustaka, Panuval.com போன்ற ஆன்லைன் கடைகளில் வாங்கலாம்.

TNPSC தேர்வு

உ.வே.சாமிநாதையர் (1855–1942) பண்டைத் தமிழ் இலக்கியங்களைத் தேடிப் பதிப்பித்த "தமிழ்த் தாத்தா" என அழைக்கப்படும் சிறந்த தமிழறிஞர் ஆவார். கும்பகோணம் அருகே பிறந்த இவர், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களை முதன்முதலில் பதிப்பித்தார். 3000-க்கும் மேற்பட்ட சுவடிகளைச் சேகரித்த உ.வே.சா, பன்முகத்திறன் கொண்ட பதிப்பாளர்.

TNPSC தேர்வுக்கான முக்கியக் குறிப்புகள்:

- **பிறப்பு:** பிப்ரவரி 19, 1855, உத்தமதானபுரம் (கும்பகோணம்).
- **சிறப்புப் பெயர்கள்:** தமிழ்த் தாத்தா, மகாமகோபாத்தியாய.
- **ஆசிரியர்:** மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.
- **பதிப்பித்த முதல் காப்பியம்:** சீவகசிந்தாமணி (1887).
- **பதிப்பித்த நூல்கள் (முக்கியமானவை):** பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல்.
- **சுவடி சேகரிப்பு:** 3000-க்கும் மேற்பட்ட ஏட்டுச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப்படிகளைச் சேகரித்தார்.
- **நூல் நிலையம்:** உ.வே.சா நூல் நிலையம் (1943 - அடையாறு).
- **சுயசரிதை:** 'என் சரித்திரம்' (ஆனந்த விகடனில் தொடராக வெளியானது).
- **படைப்புகள்:** நினைவு மஞ்சரி, பிழையற எழுதுவது எப்படி?.

TNPSC கேட்கும் வினாக்கள்:

- உ.வே.சா-வின் ஆசிரியர் யார்?
- உ.வே.சா முதலில் பதிப்பித்த காப்பியம் எது?
- "தமிழ்த் தாத்தா" என்று அழைக்கப்படுபவர் யார்?
- உ.வே.சா சேகரித்த ஓலைச்சுவடிகள் தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளன?

அவர் 1942 ஏப்ரல் 28-ல் மறைந்தார்.

பதிப்பித்த ஆண்டுகள்

உ.வே.சாமிநாதையர் (உ.வே.சா) சங்க இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள் என 90-க்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவர் முதன்முதலில் 1878-இல் 'வேணுவனலிங்க விலாசச் சிறப்பு' பதிப்பித்தார். சீவகசிந்தாமணி (1887), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894) போன்றவை இவரது முக்கிய பதிப்புகள்.

.வே.சா பதிப்பித்த முக்கிய நூல்கள் மற்றும் ஆண்டுகள்:

- **1878:** வேணுவனலிங்க விலாசச் சிறப்பு (முதல் நூல்)
- **1887:** சீவகசிந்தாமணி
- **1889:** பத்துப்பாட்டு
- **1892:** சிலப்பதிகாரம்
- **1894:** புறநானூறு

- **1898:** மணிமேகலை
- **1903:** ஐங்குறுநூறு
- **1904:** பதிற்றுப்பத்து
- **1931:** பரிபாடல்

பிற பங்களிப்புகள்:

- என் சரிதம் (சுயசரிதை - 1950-இல் புத்தகமாக வெளிவந்தது).
- பழைய சுவடிகளைத் தேடி பதிப்பித்ததன் மூலம் தமிழ் இலக்கியத் தொன்மையை நிலைநாட்டினார்

பதிப்பித்த நூல்கள்

உ.வே. சாமிநாதையர் (உ.வே.சா) சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், மற்றும் சிற்றிலக்கியங்கள் உட்பட 90-க்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1878-ல் வேணுவனலிங்க விலாசச் சிறப்புடன் தொடங்கிய அவரது பணி, சீவக சிந்தாமணி (1887), பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, மற்றும் புறநானூறு போன்ற முக்கிய நூல்களை அச்சிட்டு உலகிற்குத் தந்தது.

உ.வே.சா பதிப்பித்த முக்கிய நூல்களின் வகைப்பாடு:

- **காப்பியங்கள்:** சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம்.
- **பத்துப்பாட்டு:** பத்துப்பாட்டு (மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்).
- **எட்டுத்தொகை:** புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து.
- **புராணங்கள்:** பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், திருப்பெருந்துறைப் புராணம்.
- **சிற்றிலக்கியங்கள்:** தக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி, திருமயிலை திரிபந்தாதி, சங்கர நயினார் கோயில் அந்தாதி, திருவிடைமருதூர் உலா.
- **இலக்கணம்:** தொல்காப்பியம் (புதிய உரை விளக்கம்), வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், நன்னூல்.
- **தனிப்பாடல்கள்:** தனிப்பாடல் திரட்டு.

சிறப்பு அம்சங்கள்:

- ***முதல் பதிப்பு:*** *வேணுவனலிங்க விலாசச் சிறப்பு* (1878).
- ***சுவடி சேகரிப்பு:*** 3000-*க்கும் மேற்பட்ட ஏட்டுச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்தார்.*
- ***சுயசரிதை:*** *என் சரித்திரம்* (1950).

இவர் பழைய ஏட்டுச்சுவடிகளைத் தேடி அலைந்து, பல ஆண்டுகளாக அழிந்துபோகும் நிலையில் இருந்த இலக்கியங்களைப் பதிப்பித்து, தமிழுக்கு உயிர் கொடுத்ததால் "தமிழ்த் தாத்தா" என்று அழைக்கப்படுகிறார்.

தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் தமிழ்ப்பணி

அறிமுகம்

> **"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு**
> **முன்தோன்றிய மூத்த குடி".**

எனச் சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடி மக்களின் வரலாறும் பண்பாடும் மிகத் தொன்மை வாய்ந்தவை. அதற்கேற்ப தொன்மை மிக்க இலக்கிய இலக்கண வளத்தையும் கொண்டது நம்தாய்மொழியாகிய தமிழ். பனை ஓலையில் ஒளிந்திருந்த பசுந்தமிழை வண்ண வண்ணமையால், சித்திர எழுத்தால், பன்னிறத்தாளில் கொலுவீற்றிருக்கக் கண்டு நாம் இன்று மகிழ்கிறோம். அந்த நூல்கள் எவ்வாறு நமக்குக் கிடைத்தன என்று நாம் அறிவோமா! இன்று இணையக் கணினி வழியாக நாம் அனைத்து பாடங்களையும் தேடிக் காண முடிகிறது என்றால், இதற்கு முன் அவை எப்படி பாதுகாக்கப்பட்டது என்பதனை அறிவோமா! டாக்டர் உ.வே.சா. அவர்கள் இல்லையென்றால் நமக்கு சங்க இலக்கியங்கள் எதுவுமே கிடைத்திருக்க மாட்டா என்று தான் கூற வேண்டும். அவரால் தமிழ் போற்றி பாதுகாக்கப்பட்டது, இன்றும் நீடுழி வாழ்ந்து வருகின்றது என்பது தான் உண்மை.

உ.வே. சாமிநாதய்யர் இளமை மற்றும் கல்வி

உ.வே.சா அவர்கள் கும்பகோனத்திற்கு அருகில் உள்ள "சூரியமூலை" என்னும் கிராமத்தில் 1855ம் ஆண்டு பிறந்தார். உ.வே.சாவின் தந்தையார் சங்கீதத்தில் சிறந்த பண்டிதர். தமிழும் நன்கு கற்றவர். தந்தை தான் முதலாசிரியராக நிகண்டு, சதகம், நீதி நூல்கள் அந்தாதிகள் முதலான நூல்களைக் கற்றுக்கொடுத்தார். முதலில் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்று, பின்னர் பல தமிழ் அறிஞர்களிடம் சென்று தமிழ்ப்பாடம் கேட்டார்.அக்காலத்தில் பேரும் புகழும் பெற்ற

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் கல்வி கற்க விரும்பி, மாயூரம் சென்று, அவரிடம் மாணவராக சேர்ந்தார்.

உ.வே.சாவின் ஆசிரியப் பணி

உ.வே.சா. தனது ஆசான் பிள்ளையவர்கள் காலத்திற்குப்பின் திருவாடுதுறையிலிருந்து பாடம் சொல்லிக் கொடுக்குமாறு மகா சந்நிதானம் கூறவும் அவ்வாறே அவரும் மடத்திலேயே தங்கினார். நான்கு ஆண்டுகள் அங்கு தங்கிப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பின்னர், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அங்கு பணியாற்றும் காலத்தில் தமிழ்ப்பற்று மிக்க சேலம் இராமசாமி முதலியார் நீதிபதியாக இருந்தார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உ.வே.சா தாம் கற்ற இலக்கியங்களைப் பற்றிக் கூறினார்.

குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூர் அந்தாதி, திருவரங்க அந்தாதி, அழகர் அந்தாதி, கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்றெல்லாம் கூறியதோடு, அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத்தமிழில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என ஐயர் தாம் கற்றவைகளைப் பற்றிக் கூறினார்.

இவ்விதமாக ஒரு நீண்ட பட்டியலைக் கூறவும், நீதிபதி, ஐயரிடம் நிதானமாக "இதெல்லாம் நீங்கள் படித்து என்ன பயன்?" என்று கேட்டார். நீதிபதி இவ்விதம் கேட்டு விட்டாரே என்று எண்ணியவராய் தாம் படித்த இன்னும் சில நூல்கள் பற்றியும் கூறத் தொடங்கினார். திருவிளையாடற் புராணம், மயூரப் புராணம் போன்றவற்றுடன் இராமாயணத்தை முழுவதும் ஒரு முறைக்கு இருமுறை படித்ததாகவும் கூறினார்.

இவ்விதம் ஐயர் கூறவும், அவர் கூறியதைப் பற்றி பொருட்படுத்தாமல் "சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? என்று கேட்டதும் ஐயர் உண்மையில் திகைத்துப் போனார். "புத்தகங்கள் கிடைக்கவில்லை, கிடைத்ததும் அவைகளையும் படிக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்" என்று கூறிச்சமாளித்தார்.

உ.வே.சா அவர்களின் தமிழ்நூல் தேடல்பணி

சேலம் இராமசாமி முதலியார் அவர்கள், ஐயர் அவர்களிடம் சிந்தாமணித்தாள் ஏடு ஒன்றைக் கொடுத்து, "சிந்தாமணி மிகவும் சிறந்த நூலாகும் கம்பராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் இந்தக்

காவியம் தான் வழிகாட்டி. இதைப் படித்துப் பொருள் கண்டு விளக்கினால் உங்களுக்கும் நன்மை எனக்கும் இன்பம் பயக்கும்" என்று கூறினார்.

இவ்விதம் நீதிபதி கூறியதிலிருந்து ஐயர் சிந்தாமணியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். இதை அவர் நன்றியுடன் கூறவும் செய்துள்ளார். பின்னா ஊர் ஊராகச் சென்று பல துயரங்களை அனுபவித்து, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் வெற்றி பெற்றார். ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த போதே பிற நூல்களைப் பற்றி அவருக்குக் கிடைத்த குறிப்புகளையும், பிறவற்றையும் அவர் குறித்துக்கொண்டு வந்ததால் அவருக்குத் தாம் மேற்கொண்ட பணி இலகுவாயிற்று.

உ.வே.சாவின் தமிழ்ப் பற்று

சாமி அவர்கள் தமிழைக் கசடறக் கற்றார், தமிழ் இலக்கியங்களை எங்கும் பரவச் செய்ய அரும்பாடுபட்டார். தமிழால் வளர்ந்தார். அந்த அமிழ்தினினுமினிய தமிழைப் பெரிதும் போற்றி நன்றியுணர்வுடன் கூறும் அடிகள் நெஞ்சத்தைத் தொடுவனவாகும். தமிழ் மொழியை எவ்விதம் வளர்க்கக் கருதினார் என்பதையும் அவர் வாய் மொழியிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்கவே கடைக்கண் பார்.

உ.வே.சாவின் தமிழ்நூல்கள் பதிப்புப்பணி

உ.வே.சா அவர்கள் தம் ஆசிரியருடைய வரலாற்றை மிக விரிவாக எழுதியுள்ளார். இவருடைய பதிப்புக்கள் பிழையற்றவை, விரிவான முன்னுரைகளோடும், ஆய்வுரைகளோடும் கூடியவை, மேனாட்டுப் பதிப்புக்கள் போன்ற அமைப்புடையவை. பத்துப்பாட்டு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் அடியாருக்கு நல்லாருரை, மணிமேகலை, பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல், திருவிளையாடல் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். புதியதும் பழையதும், கண்டதும், கேட்டதும், நினைவு மஞ்சரி முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

உ.வே.சா பெற்ற பட்டங்களும், பாராட்டுகளும்

தமிழுக்காக அருந்தொண்டாற்றியமையால் 1906ம் ஆண்டு இவருக்கு "மகாமகோ பாத்தியாயர்" என்ற பட்டத்ததை அன்றைய அரசு அளித்து

மகிழ்ந்தது. பின்னர் "தாட்சிணாத்திய கலா நிதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகம்அவருடைய அரும் பெரும் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1932-ல் "டாக்டர்" பட்டமளித்துப் பெருமை கொண்டது.

இவ்விதம் தமிழ் இலக்கியம் சிறக்க பெருந்தொண்டாற்றி வந்த ஐயரவர்களின் சலியாத உழைப்பைப் பெரிதும் பாராட்டி ஜி.யு.போப் அவர்கள் கடிதம் எழுதிப் பெரிதும் போற்றியுள்ளார். பேராசிரியர் ஜீலியன் வின்சோன் என்னும் பிரெஞ்சு அறிஞர் சிந்தாமணிப் பதிப்பைப் பாராட்டிப் பாரிசிலிருந்து கடிதம் எழுதி மகிழ்ந்துள்ளார். அப்போது தமிழகத்தில் வாழ்ந்து வந்த பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார் போன்றோர் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர்.மேடைப் பேச்சில் அலுப்புத்தட்டாமல் பேசும் ஆற்றல் பெற்றவராகவும் ஐயர் அவர்கள் திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பெருமகனார் ஏடு தேடும் முயற்சியில் ஈடுபட்டு அல்லும் பகலும் பாடுபட்டதை உலகம் அறியும். அதை நாமக்கல் கவிஞர் இவ்விதம் கூறுகிறார்:

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்தலைந்தே ஊருராய்த் திரிந்து நாடிச்
செல்லாத்த ஏடுகளைத் தேடித் தேடிச
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கி
சோர்வறியா(து) உழைத்த ஒரு சாமி நாதன்
இல்லையெனில் அவன் பதித்த தமிழ்நூ லெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்தி டாதே.

முடிவுரை

தமிழ்த்தாத்தா என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த உ.வே.சா. அவர்கள் உண்மையில் தமிழைப் பெரிதும் பேணிக் காத்தார் என்று தான் கூற வேண்டும். தமிழ் பண்பாட்டுடன் சிறந்த முறையில் வாழ்ந்து வந்த சாமி நாத ஐயர் நல்ல மாணவர் பரம்பரையையும் உருவாக்கித் தமிழின் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாளெல்லாம் உழைத்து வந்தார். தமிழ் உள்ளவரை இந்தத் தமிழத் தாத்தாவின் புகழும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.


முனைவர்.ஆ.இராஜேஸ்வரி
உதவிப் பேராசிரியர்
கலைத்திட்ட வரைவு, மதிப்பீட்டுத்துறை
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை-97.

Source:
https://tnteu.ac.in/admin/file_storage/cms/9439990.pdf

https://www.tamilvu.org/library/nationalized/pdf/92-ki.va.ja/tamilthatha(223).pdf

என் சரித்திரம்

[01] https://www.tamilvu.org/library/lA471/html/lA471cnt.htm
[02] https://books.kalachuvadu.com/catalogue/en-sarithiram_664/
[03] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0544_01.pdf



உ.வே. சாமிநாதையரின் "என் சரித்திரம்" அவரது அரிய ஏட்டுச்சுவடி தேடல், தமிழ்ப் பதிப்புப்பணி மற்றும் வாழ்க்கை அனுபவங்களை விவரிக்கும் சுயசரிதை நூல். 19-ஆம் நூற்றாண்டின் சமூக, கல்வி மற்றும் இலக்கியச் சூழலை விளக்கும் இந்நூல், 'ஆனந்த விகடனி'ல் தொடராக வெளியாகி, தமிழின் மிகச்சிறந்த தன்வரலாற்று நூலாகப் போற்றப்படுகிறது.

என் சரித்திரம் - சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** "தமிழ்த் தாத்தா" என்று அழைக்கப்படும் டாக்டர் உ.வே. சாமிநாதையர்.
- **பொருள்:** ஓலைச்சுவடிகளில் சிதறிக் கிடந்த சங்க இலக்கியங்கள், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களை அவர் வீடு வீடாகச் சென்று தேடிக் கண்டுபிடித்து, அச்சில் ஏற்றிய சுவாரசியமான அனுபவங்கள்.
- **உள்ளடக்கம்:**

அவரது இளமைக்காலம், ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடனான உறவு, தமிழ் கற்றல், மற்றும் பதிப்புப் பணியில் அவர் சந்தித்த தடைகள், சிரமங்கள்

- **வரலாற்று ஆவணம்:** 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவிய தமிழகத்தின் சமூக, கலாச்சார, மற்றும் கல்வியியல் வரலாற்றைப் பிரதிபலிக்கிறது.
- **நிறைவு:** 1942-இல் உ.வே.சா.வின் மறைவால் பாதியில் நின்றாலும், பின்னர் அவரது மாணவர் கி.வா. ஜகந்நாதன் மூலமாக நூல் முழுமைபெற்று, 1950-இல் வெளியானது.


உ.வே.சா.வின் பிறப்பு (1855) முதல் 1889-ஆம் ஆண்டு வரையிலான வாழ்க்கை நிகழ்வுகளை இந்த நூல் விவரிக்கிறது.

உ.வே.சா. மடல்கள்

https://tamildigitallibrary.in/view-blogs/TXpZPUF0b1phdG96MHRvOQ--

Author Name: சே.பச்சைமால் கண்ணன்

Published on: Feb 20 2026



உ.வே.சா. மடல்களைக் காண இங்கே சொடுக்கவும்

தென்கலைச் செல்வர் (தட்சிணக் கலாநிதி), பெரும் பேராசிரியர் (மகாமகோபாத்தியாய) என்னும் பட்டங்களைப் பெற்றவர் உ.வே. சாமிநாதையர். அவரை இன்று தமிழ்த் தாத்தா என்று அழைக்கின்றனர். நாம் தமிழ்ப் பாட்டன் என்றே சொல்லலாம்.

உ.வே. சாமிநாதையர் சிறந்த தமிழ்ப் பற்றாளராக விளங்கினார். தமிழ்நாட்டில் ஆசிரியர், பேராசிரியர் ஆகியோரின் புலமைக்குச் சான்றளிப்பவராகத் திகழ்ந்தார். அதுமட்டுமல்லாமல் மன்னர்களின் அரண்மனைகளிலும், சைவ வைணவ மடங்களிலும், வறுமைக்குள்ளான புலவர்களின் மரபினரிடமும் இருந்த தமிழ் இலக்கியங்களைக் கொண்ட ஓலைச்சுவடிகள் செல்லரித்தும், தீக்கிரையாகியும், ஆற்றுவெள்ளத்தில் இடப்பட்டும் அழிவதைக் கண்டு அவர் உள்ளம் வாடியது. அதனால் அழியும் நிலையில் இருந்த ஓலைச்சுவடிகளை அரிதின் முயன்று தேடிக் கண்டுபிடித்துப் படியெடுத்ததுடன், அவற்றை அச்சிற்பதிப்பித்து நூலாகக் கொண்டுவந்தார். எழுத்தாணியால் ஓலையில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள், அறிவுக் கருவூலங்கள் அனைத்தையும் அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பமான அச்சுப்பொறி உதவியுடன் அவற்றை மரக்கூழால் செய்த தாளில் அச்சிற்பதிப்பித்த அரிய பணியைச் செய்த பெருமைக்குரியவர் அவர். அவரின் அருமுயற்சியால்தான் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்கு எனச் சங்க இலக்கிய நூல்களைப் படிக்கும் வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம். அதனால் அவரைத் தமிழ்ப் பாட்டன் என்று அழைப்பது மிகப் பொருத்தமாகும்.

உத்தமதானபுரம் வேங்கட சுப்பையரின் மகனாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1855ஆம் ஆண்டு பிப்பிரவரி 19ஆம் நாள் பிறந்த சாமிநாதையர் 1942ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் தமது 87ஆம் அகவையில் காலமானார்.

திருவாவடுதுறை ஆதீனத் தமிழ்ப் பள்ளியில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்று கும்பகோணம் அரசு கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகவும், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி எண்ணற்ற மாணவர்கள் அறிவு விளக்கம் பெறுவதற்கு விளக்காகவும் தூண்டுகோலாகவும் இருந்தவர் உ.வே. சா.

அந்நாளில் அவரின் கட்டுரைகள் பள்ளி கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் கற்றுத் தேறியுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்கான வினாத்தாள்களை அவர் உருவாக்கியுள்ளார். தெற்கே திருவனந்தபுரத்தில் இருந்து மேற்கே மங்களூர் வரையும் வடகிழக்கே புவனேசுவரம் வரைக்கும் அந்நாளில் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர்கள் பலரும் வியந்த மதித்த பெரும்பேராசிரியராக உ.வே.சா. விளங்கினார். அது மட்டுமல்லாமல் இலங்கை, பர்மா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் அவர் பதிப்பிக்கும் நூல்களைப் படித்து இன்புறும் தமிழார்வலர்கள் இருந்தனர்.

உ.வே.சாமிநாதையர் மடல்கள் என்னும் தலைப்பிட்ட இந்தத் தொகுப்பில் 1877 ஆம் ஆண்டு முதல் அவர் காலம் வரை எழுதப்பட்ட இரண்டாயிரத்து அறுநூற்றுக்கும் மேற்பட்ட மடல்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அவருக்குக் கல்வியாளர்களும், குறுநில மன்னர்களும், தமிழார்வலர்களும் எழுதியவை. அந்நாளில் தமிழ்நாட்டில் பெரும் கல்வியாளர்களாக விளங்கிய மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், சுத்தானந்த பாரதியார், வ.உ.சிதம்பரம்பிள்ளை, ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், இராமநாதபுரம் மன்னர், மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர், அரியலூர்ப் பண்ணையார், சேற்றூர், சிவகிரி, ஊற்றுமலை, சிங்கம்பட்டி பண்ணையார்கள், கவிராயர்கள், மடங்களில் தலைமையேற்றிருந்த தம்பிரான்கள், இலங்கைத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், அந்நாளில் நீதிமன்றங்களில் கோலோச்சிய நயன்மையாளர்கள் எழுதிய மடல்களும் உள்ளன.

ஐயரின் மாணவராகத் தமிழ்படித்துப் பின்னாளில் சென்னை மாகாணத் தலைமை அமைச்சராக உயர்ந்த சுப்பராயன், ஆங்கிலேயராட்சியில் மத்தியச் சட்டமன்றத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த காங்கிரஸ் அரசால் இந்தி திணிக்கப்பட இருந்தது குறித்து ஐயரின் கருத்தறிய விரும்பி எழுதிய மடலும் இந்தத் தொகுப்பில் உள்ளது. உ.வே.சாமிநாதையரின் மகன் கல்யாணசுந்தரம் ஐயருக்குப் பிறர் எழுதிய மடல்கள், உ.வே.சாமிநாதையர் தம் நண்பர்களுக்கும் தமிழ்ச் சங்கத்தாருக்கும் எழுதிய மடல்கள் ஆகியனவும் இந்தத் தொகுப்பில் உள்ளன.

இவற்றை வெறும் மடல்கள் என்று கருதிவிட முடியாது. அந்நாளில் நிலவிய கல்வி, சமூக, பொருளாதாரச் சூழலை நாம் அறிந்துகொள்ள உதவும் வரலாற்றுச் சான்றுகளாக இவை உள்ளன. தனக்குக் கல்வி பயிற்றுவித்த பெருமதிப்புக்குரிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மனைவி காவேரியம்மாளுக்கு உ.வே.சாமிநாதையர் எழுதிய மடல்களில் இருந்து அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு ஐயர் பணம் அனுப்பியுள்ளது தெரியவருகிறது. இதேபோல் ஐயரின் 75ஆம் ஆண்டு விழா, 80ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதும், அவ்விழாக்களைக் குழு அமைத்து நடத்தியதும் அதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் பொருளுதவி செய்திருப்பதும் இந்த மடல்களின் வாயிலாகத் தெரியவரும் செய்திகள்.

அந்நாளில் கல்வியிற் சிறந்த பெரியோர் சங்க இலக்கியப் பாடல்களில் தங்களுக்கு ஏற்படும் ஐயங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு விளக்கம் வேண்டி ஐயருக்கு மடல்கள் எழுதியுள்ளனர். அவற்றுக்குப் பெரும்பாலும் விடையிறுத்து மடல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அன்றைய சென்னை மாகாணத்திலும் இலங்கையிலும், திருவிதாங்கூர், கொச்சி நாடுகளிலும், மைசூரிலும் பள்ளி கல்லூரிகள், தமிழ்ச் சங்கங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற விழாக்களில் பங்கேற்க ஐயரை அழைத்து மடல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுக்கு அவர் பதில் எழுதியுள்ளார். பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், இராமநாதபுரம் அரண்மனை ஆகியவற்றுடன் மிக நெருங்கிய நல்லுறவை ஐயர் பேணி வந்துள்ளார்.

அந்நாளில் ஆசிரியப் பணியில் கிடைத்த ஊதியம், மன்னர்கள், வணிகர்கள், தமிழார்வலர்கள் ஆகியோரிடம் கிடைத்த பொருளுதவி ஆகியவற்றைக் கொண்டு சங்கத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பணியைத் தளராமல் செய்துள்ளார் ஐயர். இது இந்தத் தொகுப்பில் உள்ள பெரும்பாலான மடல்களில் கிடைக்கும் செய்தியாகும். 1956ஆம் ஆண்டு மொழிவழி மாநிலமாகத் தமிழ்நாடு உருவானது. அதற்கு முன் எங்கெல்லாம் தமிழ் வழங்கியது, தமிழ் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதை அறிய உ.வே.சாமிநாதையர் மடல்கள் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றன.

இன்று ஒருவர் கற்ற கல்விக்கும் அவரின் மொழிப் புலமைக்கும் சான்றளிக்கப் பல பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஐயர் வாழ்ந்த பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் தென்னகத்திலேயே ஒரேயொரு பல்கலைக்கழகம்தான் இருந்தது. அது சென்னைப் பல்கலைக்கழகம். அதன்கீழ் இன்றைய தமிழ்நாடு உட்பட அன்றைய சென்னை மாகாணத்தின் பகுதிகள் இருந்தன. திருவிதாங்கூர், கொச்சி, மலபார், கொங்கணம், கருநாடகம், ஆந்திரம், தெலங்கானம், கலிங்கம் என அதன் பரப்பல் விரிந்திருந்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர் பணிக்கு ஆளெடுத்தபோது உ.வே.சாமிநாதையரிடம் புலமைக்கான சான்று பெற்றிருந்தவர்களைத் தேர்வுசெய்தனர். இதற்காக அவரிடம் பரிந்துரைச் சான்று பெற வேண்டிப் பலர் எழுதிய மடல்களும் உள்ளன. சிறந்த பாக்களையும் நூல்களையும் எழுதியோர் அவற்றை வெளியிடுமுன் ஐயரின் பார்வைக்கு அனுப்பிப் படித்துத் திருத்தவும், அந்நூலைப் பாராட்டி ஒரு சாற்றுக்கவி எழுதவும் வேண்டி எழுதிய மடல்களும் உள்ளன.

படித்தவர், நயன்மையாளர், கல்வியாளர், பண்ணையார், மன்னர், ஆசிரியர், பேராசிரியர் என மடல்கள் எழுதிய அனைவரும்

உ.வே.சாமிநாதையர் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தது அவர்களின் மடல்கள் வாயிலாகத் தெரிய வருகிறது. அந்நாளில் கல்வியறிவு பெற்றிருந்தோர் மட்டுமே ஐயருக்கு மடல்கள் எழுதியதாகக் கருத முடியாது. இருப்பினும், ஐயருக்கு மடல்கள் எழுதியவர்களைக் கொண்டு எந்தெந்தச் சமூகத்தினரில் எவ்வளவுபேர் படித்திருக்கக் கூடும் என்று சமூகத்தின் கல்வி மதிப்பீடும் செய்ய முடிகிறது.

கணினி இல்லாத அக்காலத்தில் ஒரு நூலைப் பதிப்பிக்க ஓலைச்சுவடியைப் படித்து, அதில் இல்லாத பகுதியை மற்றொரு சுவடியில் படித்து எழுதிக்கொண்டு அச்சுக்கோத்து அச்சிட்ட தாள்களை நூல்களாகக் கட்டி அஞ்சல் வழியாக அனுப்பிவைப்பது என்று ஒரு பதிப்பகத்தாரின் பணி எத்தகையதாக இருந்திருக்கும் என்பதையும், அதற்குரிய பணத்தை எந்தெந்த வழிகளில் எல்லாம் அனுப்பினர் என்பதையும் இந்தத் தொகுப்பில் உள்ள பல மடல்களின் வாயிலாக உணர முடிகிறது.

ஓலைச்சுவடிகளில் உறங்கிக் கிடந்த தமிழ் இலக்கியப் புதையல்களைத் தேடிக் கண்டுபிடித்துப் படித்துத் தாளில் அச்சிட்டுத் தமிழ்நாடு மட்டுமின்றி உலகெல்லாம் தமிழ்மணம் கமழச் செய்தவர் உ.வே.சாமிநாதையர். செல்பேசி, மின்னஞ்சல், விரைவான போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்திலேயே அவர் தமிழ்நாட்டில் உள்ளோரை அஞ்சல் வழியே எவ்வாறு தொடர்புகொண்டுள்ளார்? ஓலைச்சுவடிகளை வாங்க எங்கெல்லாம் நடந்துள்ளார்? நூலை அச்சிட்டபின் மூலநூலான ஓலைச்சுவடியை எப்படித் திருப்பிக் கொடுத்துள்ளார்? என்கிற நிகழ்வுகளெல்லாம் இந்த மடல்களைப் படிக்கும்போது நம் மனக்கண் முன் காட்சிகளாக விரிகின்றன. ஐயருடன் நாமும் உலவுவது போலும், ஐயர் பேராசிரியராக இருந்த கல்லூரியில் எதிரில் அமர்ந்து நாம் கல்வி கற்பது போலவும் மெய்ந்நிகர் உணர்வு இந்த மடல்களைப் படிக்கும்போது நம் ஒவ்வொருவரின் மனத்திலும் தோன்றும். கிடைத்தற்கரிய கருவூலமான இந்தத் தொகுப்பு தமிழருக்கான பெருஞ்செல்வமாகும்.

<u>சென்னை வாழ்க்கை</u>

(1903-1942)

[முனைவர் இரா. வெங்கடேசன்]

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jan21/41596-18





உ.வே. சாமிநாதையர் முதன் முதலாகச் சென்னைக்குப் பயணம் மேற்கொண்டு (1885) பதிப்பித்த'மத்தியார்ச்சுன மான்மியம்' நூலின் முகப்புப் பக்கமும், மாநிலக் கல்லூரிப் பணி வாய்ப்பின் பொருட்டுச் சென்னை வந்து (1903) முதலில் வாடகைக்கும், பின்னர் சொந்தமாகவும் விலைக்கு (1909)வாங்கிக் குடியிருந்த வீட்டின் முகப்புப் பக்கமும்.

(😊) (😊)

உ.வே.சாமிநாதையரின் முதல் சென்னைப் பயணம் நூற்பதிப்பின் பொருட்டு அமைந்தது வரலாற்றுச் சிறப்புக்குரியதாகும். சாமிநாதையருக்கு 'ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம்' எனும் நூலை எழுதிப் பதிப்பித்து வெளியிடும் சூழல் 1885ஆம் ஆண்டு வாய்த்தது.

கும்பகோணம் மகாமகம் நடந்து முடிந்த பின்னர் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரைப் பார்க்க வந்திருந்த, திருவாவடுதுறை ஆதீனக்காறுபாறும், திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க சுவாமி ஆலய விசாரணைக் கருத்தருமாகிய சுப்பிரமணியத் தம்பிரான் என்பவர் திருவிடைமருதூர் தலப் பெருமையை சுருக்கமாக வசன நடையில் எழுதித்தர வேண்டுமென்று தேசிகர் முன்னிலையில் சாமிநாதையரைக் கேட்டுக்கொண்டார்.

தம்பிரான் கேட்டுக்கொண்டபடி மத்தியார்ச்சுன மான்மியம் என்ற நூலைச் சாமிநாதையர் எழுதி அளித்தார். சாமிநாதையர் வசனநடையில் எழுதிய முதல் நூல் இதுவாகும். சாமிநாதையர் நூலை எழுதி முடித்த பின்னர் அச்சுச் செலவு முழுவதையும் தம்பிரானவர்களே ஏற்றுக்கொண்டார்.

திருவிடைமருதூரைப் பற்றி சிவக்கொழுந்து தேசிகர் இயற்றியிருந்த புராணத்தை அடிப்படையாகக் கொண்டு திருவிடைமருதூர் தலச் சிறப்பை எழுதி முடித்தார் சாமிநாதையர். நூலை விரைந்து அச்சிட்டு முடித்து திருவிடைமருதூர் கோயில் திருவிழாவில் வெளியிடவேண்டுமென்பது தம்பிரானின் முடிவாக இருந்தது. அந்தக் காலத்தில் விரைவாக நூலை அச்சிடும் வசதி திருவாவடுதுறையிலோ, கும்பகோணத்திலோ இல்லை.

அதனால் சென்னைக்குத் தக்கவர் ஒருவரை அனுப்பி அச்சுப் பணியை விரைந்து முடித்து வருவதென முடிவு செய்யப்பட்டது. சாமிநாதையரையே சென்னைக்கு அனுப்பிவைத்து நூலச்சுப் பணியை முடித்துவர வேண்டும் என்று தம்பிரானும் தேசிகரும் ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

சாமிநாதையர் தேசிகர் கட்டளையின்படி அச்சுப் பணிக்காகக் கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொண்டார். இது சாமிநாதையர் மேற்கொண்ட முதல் சென்னைப் பயணமாகும்.

சாமிநாதையர் சென்னைக்கு வந்த பின்னர் 'ஜீவரக்ஷாமிர்தம்' என்ற அச்சுக் கூடத்தில் மத்தியார்ச்சுன மான்மிய நூலை அச்சிடக் கொடுத்துவிட்டு அச்சுப் பணியைக் கவனித்துக்கொண்டு, சென்னை, எழும்பூரிலிருந்த சேலம் இராமசாமி முதலியாரை அவ்வப்போது சென்று சந்தித்துச் சீவகசிந்தாமணி நூலாராய்ச்சிப்பணியிலும் ஈடுபட்டு வந்தார்.

சந்திப்பின்போதெல்லாம் சாமிநாதையரிடம் சீவகசிந்தாமணியை அச்சிட்டு முடித்துவிடுங்கள் என்று இராமசாமி முதலியார் வற்புறுத்திக்கொண்டே இருந்திருக்கிறார்.

முதன்முதலாகச் சென்னைக்குப் பயணம் மேற்கொண்ட அனுபவம் குறித்துப் பின்னாளில் இப்படி எழுதி மகிழ்ந்தார் சாமிநாதையர்.

மத்தியார்ச்சுன மான்மியம் பதிப்பிப்பதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தாலும், என்னுடைய நோக்கம் அந்நகரத்தையும் அங்குள்ள அறிஞர்களையும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதே.

இராமசுவாமி முதலியாருடைய பேருதவியால் அந்நோக்கம் மிக எளிதில் கைகூடியது. ஒவ்வொரு நாளும் முதலியார் பிற்பகலில் தம் கோச்சு வண்டியில் என்னை அழைத்துக் கொண்டு புறப்படுவார்.

பிரஸிடென்ஸி காலேஜ், காஸ்மொபாலிடன் கிளப் முதலிய இடங்களுக்குப் போய் அங்குள்ளவர்களும் வருபவர்களுமாகிய கனவான்களில் ஒவ்வொருவரையும் எனக்குப் பழக்கம் பண்ணி வைப்பார். அவர்கள் கௌரவத்தை எனக்கு எடுத்துரைப்பதோடு என்னைப் பற்றியும் அவர்களிடம் சொல்வார்.

அவருடைய உதவியினால் நான் ஜட்ஜ் முத்துசாமி ஐயர், ஸர். வி. பாஷ்யமையங்கார், ஸ்ரீநிவாச ராகவையங்கார், பம்மல் விஜயரங்க முதலியார், ரகுநாதராயர் முதலிய பல கனவான்களுடைய பழக்கத்தைப் பெற்றேன் (என் சரித்திரம், ப.565).

மாநிலக் கல்லூரிக்குச் சென்று பூண்டி அரங்கநாத முதலியாரையும், தொழுவூர் வேலாயுத முதலியாரையும் சந்தித்திருக்கிறார்.

அவர்களிருவரும் சாமிநாதையருக்கு மிகவும் நெருங்கிய நண்பர்களானார்கள். சென்னையிலிருந்த சேஷகிரி சாஸ்திரியாரையும், தமிழ்ப் பண்டிதர் கிருஷ்ணமாச்சாரியரையும் கண்டு பேசி மகிழ்ந்திருக்கிறார்.

புரசபாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலியார், சோடசாவதானம் சுப்பராய செட்டியார், கதிர்வேற் கவிராயர், காஞ்சீபுரம் இராமசுவாமி நாயுடு, கோமளீசுவரன் பேட்டை இராசகோபாலபிள்ளை, சூளை அப்பன் செட்டியார், சூளை சோமசுந்தர நாயகர், திருமயிலை சண்முகம் பிள்ளை முதலிய வித்துவான்களையும் இந்தச் சென்னைப் பயணத்தின்போது சந்தித்து மகிழ்ந்திருக்கிறார்.

சோடசாவதானம் சுப்பராய செட்டியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணவராக இருந்தவர் என்பதால் செட்டியாரும் இவரும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்ட வரலாற்றையும், சிறப்புக்களையும் பேசி மகிழ்ந்துள்ளனர்.

சாமிநாதையர் சென்னை நகரத்தில் பார்க்க வேண்டிய பொருட்காட்சிச் சாலை, கடற்கரை, கோயில்கள், புத்தகசாலைகள், சர்வகலாசாலை முதலியவற்றையும் இந்த முதல் பயணத்திலே சென்று பார்த்திருக்கிறார். வித்துவான்களையும் அறிஞர்களையும் பார்த்துப் பழகியது கிடைத்தற்கரிய பெரிய பயனாக உணர்ந்திருக்கிறார்.

சென்னைப் பயணம் சாமிநாதையருக்குப் பல வகையிலும் பயனுள்ளதாக இருந்ததை மேற்கண்ட அவருடையக் குறிப்பு புலப்படுத்துகிறது. மத்தியார்ச்சுன மான்மிய அச்சுப் பணிகளை முடித்துக் கொண்டு சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருவிடை மருதூருக்குச் சென்று சுப்பிரமணிய தேசிகரிடம் புத்தகப் பிரதிகளை ஒப்பித்துவிட்டுச் சென்னைப் பயணம் குறித்து பேசி மகிழ்ந்திருக்கிறார் சாமிநாதையர்.

1885ஆம் ஆண்டிற்குப் பின்னர் பலமுறை நூற்பதிப்பு வேலையின் பொருட்டுச் சென்னைக்கு வந்துசென்றிருக்கிறார் சாமிநாதையர். 1903ஆம் ஆண்டு சென்னையிலேயே வந்து குடியேறும் வாய்ப்பொன்று சாமிநாதையருக்கு ஏற்பட்டது.

சாமிநாதையர் கும்பகோணம் கல்லூரியிலிருந்து பணிமாறுதலடைந்து 1903, நவம்பர் மாதத்தில் சென்னை, மாநிலக் கல்லூரியில் ஆசிரியர் பணியை ஏற்றார். அப்போது

கல்லூரி முதல்வராக இருந்தவர் ஜே. பி. பில்டர்பெக் எனும் ஆங்கிலேயர். 1903 முதல் 1919 வரை 16 ஆண்டுகள் மாநிலக் கல்லூரியில் ஆசிரியர் பணியை ஆற்றியிருக்கிறார் சாமிநாதையர்.

கல்லூரிப் பணிவாய்ப்பின் பொருட்டுச் சென்னைக்கு வந்த சாமிநாதையர் மாநிலக் கல்லூரிக்கு அருகாமையிலிருந்த திருவல்லிக்கேணி திருவேட்டீசுவரன் பேட்டையில் மாதம் 20 ரூபாய்க்கு ஒரு வாடகை வீட்டில் குடியேறினார்.

அங்கிருந்து கல்லூரிக்குச் சென்று வந்துகொண்டிருந்த சாமிநாதையர் 1909ஆம் ஆண்டு வாடகைக்குக் குடியிருந்தஅந்த வீட்டையே விலைக்கு வாங்கினார். வீட்டின் அப்போதைய விலை ரூ. 4,400/-.

தமக்குக் கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியர் பணி கிடைக்கக் காரணமாகயிருந்த தியாகராச செட்டியாரின் நினைவாக அந்த வீட்டிற்குத்'தியாகராச விலாசம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார் சாமிநாதையர்.

சாமிநாதையர் 1903ஆம் ஆண்டு முதல் 1919ஆம் ஆண்டு வரையில் 16 ஆண்டுகள் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆசிரியர் பணியை ஆற்றியிருக்கிறார். 1919ஆம் ஆண்டு கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அதன் பின்னர் இடையில் 1924 முதல் 1927ஆம் ஆண்டு வரையில் சிதம்பரம் மீனாட்சிக் கல்லூரி முதல்வர் பணி வாய்ப்பின் பொருட்டு மூன்றாண்டுகள் மட்டும் சிதம்பரத்தில் தங்கியிருந்த சாமிநாதையர் இறுதிக் காலம் வரையில் திருவேட்டீசுவரன் பேட்டையிலிருந்த 'தியாகராச விலாசம்' இல்லத்திலேயே வாழ்ந்திருந்தார்.

இரண்டாம் உலகப் போரின் பொருட்டுச் சென்னையிலிருந்து பலரும் இடம்பெயர்ந்தபோது இறுதியாகச் சில நாட்கள் மட்டும் திருக்கழுக்குன்றம் சென்று திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து மறைந்தார் சாமிநாதையர்.

39 ஆண்டு காலம் சாமிநாதையர் சென்னையில் வாழ்ந்திருக்கிறார் (1903-1942). இந்தக் காலப்பகுதியில் நூற்பதிப்புப் பணி, கட்டுரையாக்கப் பணி, பாடநூலாக்கப் பணி என ஏராளமான பணிகளைச் சாமிநாதையர் செய்து முடித்திருக்கிறார்.

சாமிநாதையர் சென்னையில் வாழ்ந்த காலப்பகுதியில்தான் மகாமகோபாத்தியாயர் (1906), திராவிடவித்யாபூஷணம் (1917), தாஷிணாத்யகலாநிதி (1925), இலக்கியப் பேரறிஞர் - D.Litt (1932) முதலான பட்டங்களைப் பெற்று விளங்கினார். சென்னை தியாகராசவிலாச இல்லத்தில் சதாபிஷேக விழாவையும் (1935, ஆகஸ்டு, 3) கண்டு மகிழ்ந்தார்.

பின்னிணைப்பு

உ.வே.சாமிநாதையரின் சென்னை வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

1903, நவம்பர், கும்பகோணம் கல்லூரியிலிருந்து பணிமாறுதல் பெற்று வந்து சென்னை மாநிலக் கல்லூரியில் ஆசிரியர் பணியை ஏற்றார்; அப்போது கல்லூரி முதல்வராக இருந்தவர் ஜே. பி. பில்டர்பெக் என்ற ஆங்கிலேயர். 31 -3 -1919 வரை 16 ஆண்டுகள் இக்கல்லூரியில் பணியாற்றினார்

1903, (சுபகிருது - தை) தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருவாவடுதுறைக் கோவையின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1903, சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களுக்காகப் பத்துப்பாட்டினுள் ஐந்தாவதாகிய முல்லைப்பாட்டு மூலத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார். இதன் மூன்றாம் பதிப்பு 1927இல் வெளிவந்தது

1903, திரிசிரபுரம் மஹாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்த்து இயற்றிய வீரவனப்புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்

1903, மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக் கோவைக்கு அரும்பதவுரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்

1904, ஜனவரி, திருவேட்டீசுவரன் பேட்டை பிள்ளையார் கோவில் தெருவில் மாதம் 20 ரூபாய் வாடகையில் ஒரு வீட்டை ஏற்பாடு செய்து குடியேறினார்

1904,ஜூன், பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், முதல் பதிப்பை வெளியிட்டார்

1904, (குரோதி - புரட்டாசி) சேறைக்கவிராச பிள்ளை இயற்றிய திருக்காளத்தி நாதருலா நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்

1904, (குரோதி - கார்த்திகை) திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய திருப்பூவண நாதருலா, முதல் பதிப்பை வெளியிட்டார்

1904, திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற சூரைமாநகர்ப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்

1904, சேறைக்கவிராச பிள்ளையால் இயற்றப்பெற்ற திருக்காளத்தி நாதருலாவின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1905, ஜனவரி, 13, மயிலாப்பூர், பென்னாத்தூர் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப் பள்ளியின் தொடக்கவிழாவில் பங்கேற்று வரவேற்புப் பத்திரம் வாசித்தார்

1905, மார்ச்சு, 24, வெள்ளிக் கிழமை, இவரது தாயார் திருமதி சரஸ்வதியம்மாள் மறைவுற்றார்

1905, இவரது மணிமேகலைக் கதைச்சுருக்கம், சென்னைப் பல்கலைக்கழக எப். ஏ. வகுப்புக்குப் பாடமாக வைக்க ஏற்பாடானது

1905, அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருவாருலாவின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1905, சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. வகுப்பு மாணவர்களுக்காகப் புறப்பொருள் வெண்பாமாலையின் முதல் நான்கு படலங்களை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார்

1905, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருவாரூர்த் தியாகராசலீலையைப் பதிப்பித்து வெளியிட்டார், இதன் இரண்டாம் பதிப்பை 1928இல் வெளியிட்டார்

1906, ஜனவரி, 1, அரசாங்கத்தார் மகாமகோபாத்தியாயர் (பெரும்பேராசிரியர்) என்ற பட்டத்தை இவருக்கு அளித்து மரியாதை செய்தனர்

1906, மார்ச்சு, 17, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மகாமகோபாத்தியாயர் பட்டம் பெற்றதற்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது; பாரதியார் இவ்விழாவில் கலந்துகொண்டு இவரைப் பாராட்டி கவிதை எழுதி படித்தார்

1906, ஜூலை, 12, வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். பாண்டித்துரைத் தேவர் இப்பதிப்பிற்கு ரூபாய் 200/- அளித்தார்

1906, செப்டம்பர், 29, உ.வே. சாமிநாதையரின் தமிழ்மொழிப் பற்றைப் பாராட்டி இந்தியா இதழில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குறிப்பொன்றை எழுதி வெளியிட்டார்

1906, அக்டோபர், 13, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ் மாணவர்கள் சங்கத்து ஆண்டு விழாவில் உரையாற்றினார்

1906, செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர்நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பை 1927இல் வெளியிட்டிருக்கிறார்

1907, டிசம்பர், சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1907, சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களுக்காகச் சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை: அடியார்க்கு நல்லாருரை, புறநானூறு: மூலமும் உரையும் (200 - 266), பத்துப்பாட்டு: பொருநராற்றுப்படை நச்சினார்க்கினியருரை ஆகிய இவைகள் குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பித்து வெளியிட்டார்

1907, தொல்காப்பியத் தேவர் இயற்றிய திருப்பாதிரிப்புலியூர் கலம்பகத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்; இதன் இரண்டாம் பதிப்பை 1908இல் வெளியிட்டிருக்கிறார்

1907, திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய தனியூர்ப்புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்

1907, பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் இயற்றிய தேவையுலாவின் முதல் பதிப்பை வெளியிட்டார்; இதன் இரண்டாம் பதிப்பு, 1925இல் வெளிவந்தது

1907, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய மண்ணிப்படிக்கரைப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்

1908, சித்தப்பா மகள் திருமணத்திற்காகக் குடும்பத்தாருடன் ஸ்ரீரங்கம் சென்று வந்திருக்கிறார்

1908, செப்டம்பர், 14, வ. உ. சிதம்பரம் பிள்ளை, கோயம்புத்தூர்ச் சிறையிலிருந்து தாம் செய்துவரும் திருக்குறள் ஆராய்ச்சி தொடர்பான ஐயங்களுக்கு விடைகேட்டு இவருக்குக் கடிதம் எழுதினார்

1908, (பிலவங்க - தை) திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்; 1919 (காளயுக்தி - மாசி) இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது

1909, ஆகஸ்டு, 5, தமது புத்தக ஆராய்ச்சிச் செலவுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதாகத் தீர்மானித்து அரசு வழங்கிய உத்தரவு இவருக்குக் கிடைக்கப்பெற்றது

1909, ஆகஸ்டு, 23, சென்னைப் பல்கலைக்கழக பி. ஏ. வகுப்பு மாணவர்களுக்காகச் சிறுபாணாற்றுப்படை நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்

1909, சென்னை, திருவல்லிக்கேணியில் சொந்தமாக வீடு வாங்கி, தமக்கு வேலைபெற்றுத் தந்த தியாகராச செட்டியார் நினைவாகத் 'தியாகராச விலாசம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார்; வீட்டின் விலை ரூ 4,400/-

1909, ரதசப்தமியில் திருவாவடுதுறை மடத்தில் நடைபெற்ற குருபூஜை விழாவில் கலந்துகொண்டார்

1909, மே, 21, பாரிஸிலிருந்து ஜூலியன் வின்சன், சீவகசிந்தாமணியின் இரண்டாம் பதிப்பைக் கண்டு பாராட்டி இவருக்குக் கடிதம் எழுதினார்

1910, ஆகஸ்டு, 22, சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றினார்

1910, திருக்கைலாயப்பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1910, சென்னையில் நடைபெற்ற திராவிட பாஷா சங்கக் (Dravidian Board of Studies, Madras University) கூட்டத்தில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்

1911, டிசம்பர், 12, ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவினையட்டி ரூ.100/- காரனேஷன் பென்ஷன் ஆண்டுக்கொருமுறை வழங்குவதற்கான அரசு உத்தரவு இவருக்குக் கிடைக்கப் பெற்றது

1911, சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. வகுப்பு மாணவர்களுக்காகப் புறநானூற்றின் 101 - 125-ஆம் பாடல்களை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார்

1912, ஜனவரி, 21, கவர்னர் 'கார்மைக்கேல்' பிரபு சென்னை மாநிலக் கல்லூரிக்கு வருகைபுரிந்தார்; அவருக்குத் தமிழ்ச் சுவடிகளைக் காட்டி, சுவடியில் எப்படி எழுதுவது என்பதை விளக்கியுடைத்தார்; அப்படியே தமிழ் வகுப்பிற்கும் அழைத்துச் சென்று காட்டினார்

1912, ஏப்ரல், திருக்காளத்திப் புராணத்தை அச்சிட்டு வெளியிட்டார்; காளத்தியில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டார்

1912, செப்டம்பர், 18, திருக்காளத்திப் புராணம் நன்முறையில் அச்சிட்டு நிறைவேறியது பற்றி, காளஹஸ்தி சென்று ஒருவாரம் அங்கேயே தங்கியிருந்து தரிசனம் செய்தும், கிரிப்பிரதட்சிணமும் செய்தார்

1912, நவராத்திரி விழாவுக்கு வரவேண்டுமென்று இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் அழைப்பை ஏற்று இராமநாதபுரம் சென்றுவந்தார்

1912, சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. வகுப்பு மாணவர்களுக்காக மலைபடுகடாம் மூலத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்

1913, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதிக் குழு உறுப்பினராக இருந்து செயல்பட்டார்

1914, தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருத்தணிகைத் திருவிருத்தத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்

1915, பிப்ரவரி, 2, 60ஆம் வயது நிறைவுற்றது; துணைவியாருடன் திருக்காளத்தி சென்று தரிசனமும் கிரிப்பிரதட்சிணமும் செய்துவிட்டு வந்தார்

1915, ஜூலை 10, திருவண்ணாமலைக்குச் சென்று ஸ்ரீரமண மகரிஷியைத் தரிசித்தார்

1915, புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1916, மே, 6, 7, திருக்காட்டுப் பள்ளிக்கு அருகில் உள்ள இளங்காடு என்னும் ஊரில் நடைபெற்ற நற்றமிழ்ச் சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தார்

1917, ஜனவரி, 31, காசி, பாரத தர்ம மகா மண்டலத்தார் ‘திராவிட வித்யாபூஷணம்’ (திராவிடக் கலையழகன்) எனும் பட்டத்தை இவருக்கு வழங்கினார்கள்

1917, மார்ச்சு, 1, காசி, சர்வகலாசாலையின் (பல்கலைக்கழகம்) தேர்வுக் குழு உறுப்பினராக நியமனம் பெற்றார்

1917, மே, 8, மனைவி ‘மதுராம்பாள்’ மறைவுற்றார்

1918, மார்ச்சு, 30, சென்னைக்கு வந்திருந்த பாலகங்காதர திலகரைச் சந்தித்தார்

1918, மே, 15, புதுச்சேரியில் நடந்த சங்கர ஜெயந்தி விழாவில் தலைமை வகித்துச் சிலப்பதிகாரத்தைப் பற்றி உரை நிகழ்த்தினார்; அவ்விழாவிற்கு வந்திருந்த பாரதியாரைச் சந்தித்து மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றபோது தம்மைப் பற்றிப் பாடிய பாடல்களுக்காக நன்றி தெரிவித்தார்

1918, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1918, பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும் முதல் பதிப்பை வெளியிட்டார்

1918, ஜூன், 1, பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் முதல் பதிப்பை வெளியிட்டார்

1919, மார்ச்சு, 31, சென்னை மாநிலக் கல்லூரி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்

1919, ஏப்ரல், 1, சென்னைக்கு வந்திருந்த மகாகவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களைச் சந்தித்தார், அன்று மாலையில் தாகூர் அவர்கள் இவரின் வீட்டிற்கு வந்து இல்லம் வந்து பழந்தமிழ் சுவடிகளைப் பார்வையிட்டார்

1920, ஜனவரி, 1, கும்பகோணம் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய ஜே. எம்.ஹென்ஸ்மேன் யாழ்ப்பாணத்திலிருந்து மெட்ராஸ் மெயில் வழியாக இவருக்கு ஒரு கடிதம் எழுதினார்

1920, ஏப்ரல், 14, சிதம்பரம் கோவில் சம்பந்தமான வழக்கொன்றிற்காகத் தீட்சிதர்களுக்கு ஆதரவாகச் சிதம்பரம் சப்கோர்ட்டில் சாட்சியம் அளித்தார்

1920, ஏப்ரல், 15, திருவாவடுதுறை மடத்தில் 17ஆம் பட்டத்திலிருந்து விளங்கிய அம்பலவாண தேசிகர் மறைவிற்குப் பின்னர் 18ஆம் ஆதீனத் தலைவர் பொறுப்பேற்கும் நிகழ்ச்சிக்குச் சென்றார்; அதுமுதல் சிலகாலம் மடத்திலேயே தங்கியிருந்தார்

1920, திருவாவடுதுறையில் இருந்த இவர் நவராத்திரி நாளன்று மடத்தில் ‘சுப்பிரமணிய தேசிகர் கலாசாலை’ யைத் தொடங்கினார்

1920, ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1920, பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1920, சிலப்பதிகாரம் மூலமும் அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1920, மாணவர்களுக்காகச் சிலப்பதிகாரம் - புகார்க்காண்டத்திலுள்ள இந்திரவிழவூரெடுத்த காதையை மட்டும் குறிப்புரை எழுதியமைத்து அச்சிட்டு வெளியிட்டார்

1921, மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1922, சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1922, ஜனவரி, 14இல் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வருகைபுரிந்ததின் நினைவாகப் புலவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் விருதுகள் அளிக்கப்பட்டன. இவருக்கும் ‘கில்லத்’ பட்டம் அளிக்கப்பட்டது

1923, புறநானூறு மூலமும் பழைய உரையும், இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1923, உதயணன் சரித்திரச் சுருக்கத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1923, திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய திருப்பூவணநாதருலாவின் முதல் பதிப்பு வெளியிட்டார்; இதன் இரண்டாம் பதிப்பு, 1923இல் வெளிவந்தது

1924, பிப்ரவரி, 18, பெருங்கதை மூலமும் அரும்பதவுரையும் முதல் பதிப்பை வெளியிட்டார்

1924, புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1924, ஜூலை, சிதம்பரம், மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றார், 1927ஆம் ஆண்டு வரை அந்தப் பணியில் இருந்தார்

1924, டிசம்பர், 22-24, சென்னையில் நடைபெற்ற மூன்றாவது ஓரியண்டல் மகாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தார்

1924, ஜூன் 8, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 24-ஆவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துப் பொற்கிழி பெற்றார்

1925, பௌத்த மதத்துள் மும்மணிகள் என்று வழங்குகின்ற புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் நூலின் ஐந்தாம் பதிப்பை வெளியிட்டார்

1925, பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும், முதல் பதிப்பை வெளியிட்டார்

1925, அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருவாருலாவின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1925, சேறைக்கவிராச பிள்ளை இயற்றிய திருக்காளத்தி நாதருலாவின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1925, ஆகஸ்டு, 5, புதுக்கோட்டை, சன்மார்க்க சபையின் 16ஆவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்கினார்

1925, ஜூன், 8, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 25-வது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் ரூ. 5000/- பொற்கிழி பெற்றார்; பொற்கிழி வழங்கினவர்கள் பெயர்களை அதே ஆண்டு வெளிவந்த நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரைப் பதிப்பு முன்னுரையில் குறிப்பிட்டு நன்றி பாராட்டினார்; அதே விழாவில் காஞ்சி காமகோடிபீடத் தலைவர் சங்கராச்சாரிய சுவாமிகள் 'தாஷிணாத்யகலாநிதி' (தெற்கத்திய கலைச் செல்வன்) என்ற பட்டத்தை இவருக்கு அளித்தார்

1926, ஜனவரி, 10, ஞாயிறு, சிதம்பரத்திலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொண்டார்

1926, அக்டோபர், 15, மீனாட்சி கல்லூரியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கு வருகைபுரிந்த கவர்னர் கோஷன் துரை அவர்களைப் பாராட்டி வரவேற்புப் பத்திரம் வாசித்து அளித்தார்

1926, பௌத்த மதத்துள் மும்மணிகள் என்று வழங்குகிற புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் நூலின் ஆறாம் பதிப்பை வெளியிட்டார்

1926, உதயணன் சரித்திரச் சுருக்கத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1926, திருக்கைலாயப்பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1926, திருவாவடுதுறை ஆதீனத்துத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருவாவடுதுறைக்கோவையைப் பதிப்பித்து வெளியிட்டார்

1927, பிப்ரவரி, 21, மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் சேது சம்ஸ்தான வித்வான் ரா.ராகவையங்கார், “கம்பர் கூறும் பெண்பாலியல்பு” என்னும் பொருள் பற்றி ஆற்றிய சொற்பொழிவிற்கு தலைமை தாங்கினார்

1927, பிப்ரவரி, பிற்காலத்தில் இவருக்குப் பெருந்துணையாக இருந்து விளங்கிய கி.வா. ஜகந்நாதையர் சந்திப்பு

1927, சிலப்பதிகாரம் மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1927, மார்ச்சு, 11, மீனாட்சி தமிழ்க் கல்லூரி முதல்வர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார்

1927, மார்ச்சு, 18, சிதம்பரத்திலிருந்து சென்னைக்குத் திரும்பினார்

1927, நவம்பர், 1, 10, 12, 16, 18; டிசம்பர், 6, 9, 12, 14, 17ஆம் நாட்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்றினார்; இந்தச் சொற்பொழிவிற்காகப் பலகலைக்கழகத்தார் ரூ. 500/- சன்மானம் அளித்தனர். இந்தத் தொகையைக் கொண்டுதான் சென்னையில் தாம் வசித்துவந்த தியாகராச விலாசத்திற்கு மின் விளக்குப் போடச் செய்தார்; இது நடந்தது கார்த்திகை மாதம்

1928, ஏப்ரல், 4, 5, டி.கே.சி. அழைப்பின்பொருட்டுத் திருநெல்வேலியில் தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கம்பன் விழாவிற்குத் தலைமை தாங்கினார்; கி.வா.ஜ. உடன் சென்று வந்தார்

1928, ஜூன், 6, திருப்பனந்தாள் மடத்தில் நடைபெற்ற குமரகுருபரர் திருநாளாவில் கலந்துகொண்டார்

1928, செப்டம்பர், 2, மாயூரநாதர்கோயில் மகாகும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டார்

1929, ஏப்ரல், 9, திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டார்

1929, சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் நூலின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1929, செப்டம்பர், 15, சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சி பெறுபவருக்குத் திருப்பனந்தாள் மடத்தின் சார்பில் ஆயிரம் ரூபாய் பரிசளிக்கும் திட்டத்தின் முதல் விழா கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் இவரது தலைமையில் நடைபெற்றது; இவரின் மாணவர் மாணாக்கர் வி. மு. சுப்பிரமணிய ஐயர் முதல் பரிசைப் பெற்றார்

1929, ஆகஸ்டு, 16, இராஜ இராஜேசுவர சேதுபதியின் மைந்தர் சண்முகநாத சேதுபதியின் பட்டாபிஷேக விழாவில் கலந்துகொண்டார்; அப்போது முகவையிலிருந்த இராகவையங்கார் வீட்டில் தங்கியிருந்து அவர் இயற்றியிருந்த 'பாரி காதை'யைக் கி.வா.ஜ. படிக்கச் சொல்லிக் கேட்டறிந்திருக்கிறார்

1929, டிசம்பர், 8, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 28-ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்துகொண்டார்; சென்னை மாநிலக் கவர்னராக இருந்த கனம் நார்மன் எட்வர்டு மார்ஷ்பாங்க்ஸ் விழாவிற்குத் தலைமை தாங்கியுள்ளார்

1929, சுயாட்சிக் கட்சியின் சார்பில், சென்னை மாகாண முதல்வராக இருந்த ப. சுப்பராயன் அவர்கள் வீட்டிற்கு வந்து இவரைச் சந்தித்துவிட்டுச் சென்றார்

1930, ஜனவரி, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி மூலமும் உரையும் முதல் பதிப்பை வெளியிட்டார்

1930, பிப்ரவரி, 27, 28, வியாழன், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் 'பாரதமும் திராவிட பாஷைகளும்' எனும் தலைப்பில் ம.வீ. ராமானுஜாசாரியார் ஆற்றிய சொற்பொழிவில் பங்கேற்றார்; திருச்சி சாரநாதையங்கார், தாவுத்ஷா உள்ளிட்ட அன்பர்களை அங்குச் சந்தித்தார்

1930, மார்ச்சு, 10, பேரர் (சா.கல்யாணசுந்தரமையரின் மகன்) சுப்பிரமணியத்திற்குத் திருமணம் நடைபெற்றது

1930, மார்ச்சு, 21, சென்னை, வில்லிவாக்கத்தில் நடைபெற்ற திருமுறை விழாவில் கலந்துகொண்டார்

1930, சொக்கநாதப் புலவர் இயற்றிய மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது முதல் பதிப்பை வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பு 1932இல் வெளிவந்தது

1930, மாயூரத்திலிருந்த இராமையர் இயற்றிய மாயூரமென்று வழங்குகின்ற திருமயிலைத் திரிபந்தாதி இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1930, சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. வகுப்பு மாணவர்களுக்காக சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் - ஊர்க்காண் காதை, அடைக்கலக்காதையைப் பதிப்பித்து வெளியிட்டார்

1931, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1931, மணிமேகலை மூலமும் உ.வே.சா. அரும்பதவுரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1931, பத்துப்பாட்டு மூலம் முதல் பதிப்பை வெளியிட்டார்

1931, திருவாவடுதுறையாதீனத்து மகாவித்வான் ஸ்ரீகச்சியப்ப முனிவர் இயற்றிய கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1931, புராணத்திருமலைநாதர் இயற்றிய மதுரை சொக்கநாதருலா பதிப்பை வெளியிட்டார்

1932, ஜனவரி, 11, சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்ப் பேரகராதித் திட்டக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்

1932, ஜனவரி, 13, துறைசைக்குப் பயணம் மேற்கொண்டார்.ஜனவரி, 14, 15, 16 ஆகிய மூன்று நாட்களும் துறைசையிலேயே தங்கியிருந்து ஜனவரி 16 அன்று நடைபெற்ற துறைசைக் குருபூஜையில் கலந்துகொண்டுவிட்டு ஜனவரி 18அன்று துறைசையிலிருந்து திருவிடைமருதூருக்குப் பயணம் மேற்கொண்டார்

1932, பிப்ரவரி, 7, களவியற் காரிகை நூலினை இவரது வீட்டிற்கு வந்து எஸ். வையாபுரிப்பிள்ளை அளித்துவிட்டுச் சென்றார்; பிப்ரவரி 10ஆம் தேதியன்றும் தினகர வெண்பா கேட்பதற்கு வையாபுரிப்பிள்ளை இவரது வீட்டிற்கு வந்து சென்றார்

1932, பிப்ரவரி, 7, ஆர்.எஸ். சுப்பலக்ஷ்மியம்மாள் என்பவர் இவரது வீட்டிற்கு வந்து சந்தித்துத் தாம் செய்யும் தமிழ் போர்டில் ஆலோசகராக இருக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்

1932, மார்ச், 18, கி.வா. ஜகந்நாத ஐயர், வி.மு. சுப்பிரமணிய ஐயர் இருவருடன் திருவான்மியூர்க்குப் பயணம் மேற்கொண்டார்

1932, ஏப்ரல், 15, மயிலாப்பூரில் நடைபெற்ற வான்மீகி நாள் விழாவில் கலந்துகொண்டார்

1932, ஏப்ரல், 17, மு.ராகவையங்கார் இவரது வீட்டிற்கு வந்து சந்தித்தார்; ஏப்ரல், 25, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி வந்து சந்தித்துவிட்டுச் சென்றார்

1932, ஏப்ரல், 26, எஸ். வையாபுரிப்பிள்ளை இவரது வீட்டிற்கு வந்து மூன்று அச்சிட்ட தினகர வெண்பா பிரதிகளைக் கொடுத்துவிட்டுச் சென்றார்; இரவு மன்னார்குடிக்குப் பயணம் மேற்கொண்டார்

1932, ஏப்ரல், 27, மன்னார்குடி சென்றடைந்தார்; ஏப்ரல், 28, மன்னார்குடி கௌமார குருகுல ஆண்டு விழாவில் பங்கேற்று ‘பண்டைத் தமிழர்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இவருடன் முத்தையா முதலியார், த.வே. உமாமகேசுவரம் பிள்ளை,

டி.எஸ். கந்தசாமி பிள்ளை, ரெண்டாப் துரை, சபாபதிபிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தியுள்ளனர்

1932, ஜூன், 13, கி.வா. ஜகந்நாதன் திருமணத்தை நடத்தி வைத்தார்

1932, ஆகஸ்ட் 3, அன்று சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு 'டாக்டர்' (ஞிஷீநீtஷீக்ஷீ ஷீயீ லிவீtமீக்ஷீணீtuக்ஷீமீ) பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது

1932, கடம்பர் கோயில் உலா பதிப்பை வெளியிட்டார்

1932, சின்னப்ப நாயக்கர் இயற்றிய பழனிப்பிள்ளைத்தமிழ் பதிப்பை வெளியிட்டார்

1932, கொட்டையூர் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், முதல் பதிப்பை வெளியிட்டார்

1932, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய ஸ்ரீபத்மகிரி நாதர் தென்றல்விடுதூது பதிப்பை வெளியிட்டார்

1932, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய மதுரை மும்மணிக்கோவை முதல் பதிப்பை வெளியிட்டார்

1933, டிசம்பர், 23, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் (அப்போது பச்சையப்பன் கல்லூரி ஜார்ஜ் டவுனில் இருந்தது) நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டில் வரவேற்புரை ஆற்றினார்

1933, ஜனவரி, 13, அத்வைத சங்கத்தில் நிகழ்ந்த பொங்கல் விழாவில் கலந்துகொண்டார்

1933, ஜனவரி, 31, துறைக்குப் பயணம் மேற்கொண்டார். துறைசையில் பிப்ரவரி, 1ஆம் நாள் நடைபெற்ற ஸ்ரீநமச்சிவாய மூர்த்தி குருபூஜை நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்

1933, பிப்ரவரி, 9, ஆந்திரப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவில் உறுப்பினராக நியமித்ததற்கு உடம்பட்டுக் கடிதம் எழுதி அனுப்பினார்

1933, ஏப்ரல், 27, திருவான்மியூர் சென்று, கண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்த கணேசையரைச் சந்தித்துவிட்டுப் பின்பு மருந்தீஸ்வரர் கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்தார்

1933, மே, 8, சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமஸ்கிருதமொழிக் கூட்டத்திற்குச் சென்றுவந்தார்

1933, மே, 29, துறைசைக்குப் பயணம் மேற்கொண்டார்.அங்கிருந்து புறப்பட்டு ஜூன் 1 காலை குடந்தை சென்று ம.வீ. ராமானுஜாசாரியாரைச் சந்தித்தார். ஜூன், 3, பனசை, ஜூன், 4, திருவிடைமருதூர், ஜூன், 10, பனசையில் குமரகுருபர சுவாமிகள் குருபூஜையில் பங்கேற்றார்

1933, ஆகஸ்டு 1, சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் கவர்னருக்கு நடந்த தேநீர் விருந்தில் கலந்துகொண்டார்

1933, ஆகஸ்டு, 2, திருக்குற்றாலத்திற்குச் சென்று வந்தார்

1933, செப்டம்பர், 9, பங்களூருக்குப் (பெங்களூர்) பயணம் மேற்கொண்டார்

1933, டிசம்பர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தின் முதல்பாகத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1933, காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாவின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1933, சங்கரநயினார் கோயிற் சங்கரலிங்க உலாவின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1933, பாசவதைப் பரணி, குறிப்புரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்

1934, ஜனவரி, 16, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற ஆந்திரப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்; அங்கு வந்திருந்த வையாபுரிப்பிள்ளை, பெ.நா.அப்புஸ்வாமி ஐயர், பி.ஸ்ரீ. ஆசார்யர் ஆகிய மூவரையும் சந்தித்தார்

1934, பிப்ரவரி, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தின் இரண்டாம் பாகத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1934, பிப்ரவரி, 19, கும்பகோணம் கல்லூரி ஆண்டுவிழாவில் கலந்துகொண்டார்

1934, பிப்ரவரி, 25, ராமகிருஷ்ணமடம் உயர்நிலைப் பள்ளி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டார்

1934, பிப்ரவரி, 26, சென்னை, ரானடே ஹாலில் நடைபெற்ற தமிழன்பர் மாநாட்டில் கலந்துகொண்டார்

1934, பிப்ரவரி, 27, சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரி மாணவர் சங்க விழாவிற்குத் தலைமை தாங்கினார்

1934, மார்ச், 9, கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தமிழ்ச்சங்க ஆண்டு நிறைவுவிழாவிற்குத் தலைமை தாங்கினார்

1934, மார்ச், 15, கி.வா. ஜகந்நாதனுடன் இரயிலில் தஞ்சைக்குப் பயணம் மேற்கொண்டார்

1934, மார்ச், 16, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் நாண்மங்கல விழாவில் பங்கேற்றார்; பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோர் இந்த விழாவில் கலந்துகொண்டு உரை ஆற்றியுள்ளனர்

1934, மார்ச் 17, 18, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 23ஆம் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார்; விழாவில், சதாசிவபண்டாரத்தார், சோமசுந்தரபாரதியார்,

வேங்கடாசலம் பிள்ளை, ரா.வாசுதேவசர்மா, பி.ஸ்ரீ. ஆசாரியார் முதலியோர் உரையாற்றினர். மார்ச், 19, இரவு போட்மெயிலில் சென்னைக்குப் புறப்பட்டார்; உமாமகேசுவரம் பிள்ளை இரயிலடிக்கு வந்து வழியனுப்பிவைத்தார்; 20ஆம் தேதி காலையில் சென்னை வந்து சேர்ந்தார்; 21ஆம் தேதி, உமாமகேசுவரம் பிள்ளை முதலியவர்களுக்குக் கடிதம் எழுதினார்

1934, மார்ச், 24, சென்னை, அடையாறில் நடைபெற்ற வால்மீகி திருநாளுக்குச் சென்று வந்தார்

1934, மார்ச், 26, வேப்பேரி செயிண்ட் பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவிற்குத் தலைமைதாங்கினார்; கோதைநாயகி அம்மையார் ‘பாரதியாரின் கவிநயம்’ எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்

1934, ஏப்ரல், 13, தமிழ் அன்பர் மகாநாட்டுக் காரிய நிர்வாகச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார்

1934, ஏப்ரல், 20, சிதம்பரத்திற்குப் பயணம் மேற்கொண்டார்; ஏப்ரல், 21, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்; ஏப்ரல், 22, மாலை சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார்; ஏப்ரல், 23, மாலையில் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு ஏப்ரல், 24 காலை சென்னை வந்து சேர்ந்தார்

1934, ஏப்ரல், 27, மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வுத் தாட்கள் திருத்தும் பணியைச் செய்தார்

1934, ஏப்ரல், 30, சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்

1934, மே, 7, புதுக்கோட்டைக்குப் பயணம் மேற்கொண்டார்; மே, 8, மேலைச்சிவபுரி சென்று, மே, 9இல் நடைபெற்ற மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் வெள்ளிவிழா நிகழ்வில் பங்கேற்றார்; பழமலைப் பெரியசாமிபிள்ளை, நீ. கந்தசாமி பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் விழாவில் உரையாற்றினர்

1934, மே, 23, உயர்நீதிமன்ற நீதிபதி வரதாசாரியார் இல்லத் திருமண விழாவிற்குச் சென்று வந்தார்

1934, மே, 30, சென்னையிலிருந்து காரில் பனசை சென்று, மே, 31 அன்று நடைபெற்ற திருப்பனந்தாள் ஆதிகுமரகுருபர சுவாமிகள் குருபூஜை விழாவில் பங்கேற்றார்

1934, ஜூன், 18, கல்வெட்டுத்துறை அதிகாரி சீநிவாஸாராவின் உதவியால் சிம்லாவிலிருந்து இவர் வேண்டியிருந்த கல்வெட்டு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன; ஜூன் 19, அவர் இல்லம் சென்று நன்றி பாராட்டிவிட்டு வந்தார்

1934, ஜூன், 27, தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவரது இல்லத்திற்கு வந்து சந்தித்துவிட்டுச் சென்றார்

1934, ஜூலை, 16, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் இவரது இல்லத்திற்கு வந்து சந்தித்தார்

1934, ஜூலை, 25, சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியன்றிற்குத் தலைமை தாங்கினார்; கோதண்டராமையர் 'கலம்பகம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்

1934, ஜூலை, 31, சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்ப் பேரகராதிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்

1934, ஆகஸ்டு, 13, சென்னையிலிருந்து மதுரைக்குப் பயணம் மேற்கொண்டார். ஆகஸ்டு, 14, மதுரை சென்றடைந்து, ஆகஸ்டு 15 அன்று நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்க விழாவில் பங்கேற்றார். ஆகஸ்டு 17 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ச் சங்க விழாவில் பங்கேற்றார்

1934, ஆகஸ்டு, 19 மதுரையிலிருந்து ராமேஸ்வரம் புறப்பட்டுச் சென்று, அங்கிருந்து ஆகஸ்டு 21ஆம் தேதி தனுஷ்கோடி சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மீண்டும் ராமேஸ்வரம் வந்து சிலநாள் இருந்துவிட்டு ஆகஸ்டு 25ஆம் தேதி மதுரைக்கு வந்து சேர்ந்தார்

1934, ஆகஸ்டு 26ஆம் தேதி மதுரையிலிருந்து திருச்சிக்குப் புறப்பட்டு வந்து, ஆகஸ்டு 27ஆம் தேதி திருச்சியில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கழகத்தின் 13ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்றார்

1934, ஆகஸ்டு 28ஆம் தேதி மாலை திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரியில் நடைபெற்ற மாணவர் சங்க விழாவிற்குத் தலைமை தாங்கினார்

1934, செப்டம்பர், 9, பங்களூருக்குப் (பெங்களூர்) பயணம் மேற்கொண்டார்.அலசூர் சுப்பிரமணிய சர்மா இல்லத்தில் தங்கினார்; செப்டம்பர், 10, சென்ட்ரல் காலேஜில் நடைபெற்ற பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.பங்களூர்க் கோட்டை உயர்நிலைப் பள்ளி தமிழ்ப் பண்டிதர் செங்கல்வராய ஐயர் இவரை வந்து சந்தித்தார்.செப்டம்பர், 11, கே. ஆர்.சீனிவாசையங்கார், ஆர்.நரசிம்மாசாரியார் வீட்டிற்குச் சென்றுவந்தார்.மாலை அங்கிருந்து புறப்பட்டுச் செப்டம்பர், 12ஆம் தேதி சென்னை வந்தடைந்தார்

1934, அக்டோபர், 26, சென்னையிலிருந்து திருச்சிக்குப் பயணம் மேற்கொண்டார்

1934, புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், நான்காம் பதிப்பை வெளியிட்டார்

1934, சங்கர நயினார் கோயில் அந்தாதியின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1934, வலிவலமும்மணிக்கோவையைக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்

1934, டிசம்பர், கோயம்புத்தூரில் நடைபெற்ற, தனித் தமிழ் வித்துவான் தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றவருக்குத் திருப்பனந்தாள் மடத்தார் வழங்கும் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பு விழாவில் பங்கேற்றார்

1934, சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1934, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய விளத்தொட்டிப் புராணப் பதிப்பை வெளியிட்டார்

1935, உதயணன் சரித்திரச் சுருக்கம், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1935, பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும், இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1935, திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய ஆற்றூர்ப்புராணப் பதிப்பை வெளியிட்டார்

1935, மார்ச்சு, 6, (பவ - மாசி, புதன்கிழமை) 60ஆம் அகவை நாள். முற்பகலில் சென்னை தியாகராஜ விலாசத்தில் சதாபிஷேக முகூர்த்தம் (எண்பதாம் ஆண்டு நிறைவு விழா) நடைபெற்றது.அன்று மாலை 5-30 மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சதாபிஷேக விழா கோலாகலமாக நடத்தப்பெற்றது; விழாக் குழுவின் தலைவராக அன்றைய சென்னை மாகாண அமைச்சர் பி. டி.ராஜன் அவர்களும், உறுப்பினர்களாக டி. சிவராமசேதுப்பிள்ளை, பெ. நா. அப்புஸ்வாமி, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய மூவரும் கே.வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பொருளாளராகவும் இருந்தனர். சென்னைப் பல்கலைக்கழக செனட் மண்டபத்தில் இவரது திருவுருவப்படம் வைக்கப்பட்டு, ரூ. 3000/- பண முடிப்பும் வழங்கப்பட்டது

1935, பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1935, புறநானூறு மூலமும் பழைய உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1935, பெருங்கதை மூலமும் அரும்பதவுரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1935, உதயணகுமார காவியம் மூலமும் குறிப்புரையும், முதல் பதிப்பை வெளியிட்டார்

1935, தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைக்கோவைப் பதிப்பை வெளியிட்டார்

1935, துறைமங்கலம் சாமிநாத தேசிகரென்னும் வீரசைவக் கவிஞர் இயற்றிய பழமலைக்கோவைப் பதிப்பை வெளியிட்டார்

1935, மேலகரம் பண்டாரக்கவிராயர் இயற்றிய திரு இலஞ்சி முருகன் உலாவைக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்.

1936, ஜனவரி, 29, தெ.பொ.மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவரைச் சந்தித்துவிட்டுச் சென்றார்

1936, ஏப்ரல், 9, திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்க ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்

1936, மே, 3, தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு வந்தார்

1936, ஜூலை, 22, கிறித்துவக் கல்லூரியில் சொற்பொழிவாற்றினார்

1936, ஜூலை, 25, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்ப் பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்

1936, ஆகஸ்டு, 20, மாநிலக் கல்லூரி மாணவர் தமிழ்ச் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

1936, ஆகஸ்டு, 27, ஸ்ரீலக்ஷ்மணசாமி முதலியார் தலைமையில் நடைபெற்ற ஆயிர ரூபாய்ப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டார்

1936, செப்டம்பர், 3, இந்து உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆஸ்திகசபை கூட்டத்தில் கலந்து கொண்டார்; அச்சபையின் புரவலராக நியமனமும் பெற்றார்

1936, செப்டம்பர், 3, கவர்னர் தலைமையில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழக நூலகக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டார்

1936, செப்டம்பர், 6, சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரை அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்துவிட்டு வந்தார். அப்போது இவரது ‘வெங்கானூர்க் கோயிற்சிற்பம்’, ‘பரம்பரைக் குணம்’ ஆகிய இருகட்டுரைகளை இந்தியில் மொழிபெயர்த்துப் ‘பாரதீய சாகித்திய’ இதழில் வெளியிட இராஜாஜி அனுமதி கேட்டார்

1936, செப்டம்பர், 7, இரவு சென்னையிலிருந்து போட்மெயிலில் கி.வா.ஜகந்நாதன், அலமேலு ஆகிய இருவருடன் திருச்சிக்குப் பயணம் மேற்கொண்டார். 08.9.36 அன்று திருச்சி சென்று சேர்ந்து திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரைச் சந்தித்தார்

1936, அக்டோபர், 1, மகன் கல்யாணசுந்தரம் ஐயருக்கு ஆக்டிங் ஸ¨பர்வைசர் வேலை கிடைக்கப்பெற்றது.

1936, அக்டோபர், 2, அண்ணாமலைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வைச் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வுடன் ஒத்ததாகக் கருதவேண்டுமென்று வலியுறுத்தி நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்; எஸ். வையாபுரிப்பிள்ளையும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்

1936, அக்டோபர், 4, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பரிட்சகராக நியமிக்கப்பட்டிருப்பதாகக் கடிதம் வந்தது

1936, அக்டோபர், 13, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் பாடத்திட்டக் குழு உறுப்பினராக நியமனம் பெற்றார்; இவரது ‘தருமம் தலைகாக்கும்’ என்ற கட்டுரையைச் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ‘ஆங்கரை சுப்பையர்’ என்ற தலைப்பில் மொழிபெயர்த்து ‘ஹரிஜன்’ இதழில் வெளியிட்டார்

1936, அக்டோபர், 16, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் ஆனந்தவிகடன் ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தியும் இவரது வீட்டிற்கு வந்து சந்தித்துவிட்டுச் சென்றனர்

1936, அக்டோபர், 26, ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துவிட்டு வந்தார்

1936, அக்டோபர், 30, அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்ப் பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் பங்கேற்பதாகக் கி.வா. ஜகந்நாதனுடன் சிதம்பரம் புறப்பட்டுச் சென்று அக்டோபர், 31ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்

1936, நவம்பர், 7, பண்ணுருட்டி உபாத்திமைச் சங்கத்தில் உரையாற்றினார்

1936, நவம்பர், 12, சென்னை லயோலா கல்லூரி மாணவர் சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்; டி.என். சேஷாசலமையர் ‘மானிடப் பெருமை’ என்பது பற்றிப் பேசினார்

1936, நவம்பர், 16, சென்னையில் கலெக்டர் தலைமையில் நடைபெற்ற பட்டங்கள் அளிக்கும் தர்பாருக்குச் சென்று வந்தார்

1936, நவம்பர், 18, மாம்பலம் ராமகிருஷ்ணமிஷன் உயர்நிலைப் பள்ளியில் நரஸிம்மாசாரியார் செய்த சொற்பொழிவிற்குத் தலைமை தாங்கினார்

1936, நவம்பர், 28, திண்டிவனம் சென்று, திண்டிவனம் ஷண்முக நிலையத்தில் சொற்பொழிவாற்றினார்; மறுநாள் காலையில் (நவம்பர், 29) சுப்பிரமணிய செட்டியார் சத்திரத்தில் ‘நன்றியறிவு’ என்ற தலைப்பில் உரையாற்றினார்.மாலையில் வேதவல்லியம்மாள் சத்திரத்தில் ‘தமிழ் நூல்களும் திண்டிவனத்தைச் சார்ந்த ஊர்களும்’ என்ற தலைப்பில் உரையாற்றிவிட்டு நவம்பர், 30ஆம் நாள் காலையில் திண்டிவனம் ஸி.சி. பயிற்சிப் பள்ளியில் ஒரு பிரசங்கம் செய்தார். மாலையில் மயிலம் சென்று சிவஞானபாலைய தேசிகராதீனத்துத் தலைவரைச் சந்தித்துவிட்டுச் சாமி தரிசனம் செய்துவிட்டு டிசம்பர், 1ஆம் நாள் திண்டிவனம் கி.கி.வி. பள்ளியில் கி.வா.ஜ. ‘தமிழ்ப் பிரபந்தங்கள்’ என்னும் தலைப்பில் பேசிய கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். டிசம்பர், 2ஆம் நாள் திண்டிவனத்திலிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தார்

1936, டிசம்பர், 4, பிராமணக் குடும்பத்தில் பிறந்த, தென்னகத்தின் முதல் பட்டதாரியான ஸி.ஷி. சுப்பலக்ஷ்மி அம்மாள், இவருக்கு இரண்டு கண்ணாடி பீரோக்களை அனுப்பி உதவினார்

1936, டிசம்பர், 5, மயிலாப்பூர் சென்று ஆர்.எஸ். சுப்பலக்ஷ்மி, ஸ்வர்ணாம்பாள் ஆகியோர்களைச் சந்தித்துவிட்டு வந்தார்

1936, டிசம்பர், 7, சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கண்காட்சியில் இவரது புத்தகங்களை வைப்பதற்கு விண்ணப்பம் செய்துகொண்டார்

1936, டிசம்பர், 9, திருவனந்தபுரம் மகாராஜாவிற்குப் புத்தகங்கள் வாங்கிக்கொள்ள வேண்டியும், சில உதவிகள் செய்ய வேண்டியும் கடிதம் எழுதி அனுப்பினார்

1936, டிசம்பர், 14, காங்கிரஸ் கண்காட்சியில் சர்தார் வல்லபாய் படேல் கண்காட்சியைத் திறந்த வைத்தபோது அங்குச் சென்று வந்தார்; அங்கு ராஜாஜியைச் சந்தித்தார்

1936, டிசம்பர், 18, ஆனந்தவிகடன் அதிபர் எஸ்.எஸ். வாசன் அவர்களை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்தார்

1936, டிசம்பர், 23, சென்னை சங்கீத வித்வத் சபையின் (இன்று மியூசிக் அகாடெமி என்று அழைக்கப்படுவது) துவக்கவிழாவிற்குச் சென்று வந்தார்; வித்வத் சபையை ஸர்.சிவஸ்வாமி ஐயர் திறந்துவைத்தார்; உமையாள்புரம் சாமிநாதையர் தலைமை வகித்தார்.அங்கு, கே. ஸ்ரீநிவாஸன், கே. பாலசுப்ரமணிய ஐயர், பழமானேரி சாமிநாதையர், டி.எம்.கிருஷ்ணசாமி ஐயர், கே.வி. கிருஷணசாமி ஐயர், எஸ்.ஒய்.கிருஷ்ணசாமி ஐயர், பி.எஸ். சிவஸ்வாமி ஐயர் முதலியோர்களைச் சந்தித்தார்

1936, டிசம்பர், 24, ‘மகாவைத்தியநாதையர் எனும் உரைநடை நூலை வெளியிட்டார்; வைகுண்ட ஏகாதசி நாள்

1936, நான் கண்டதும் கேட்டதும் (12 கட்டுரைகள்), புதியதும் பழையதும் (20 கட்டுரைகள்) ஆகிய கட்டுரைத் தொகுப்பு நூல்களின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1936, கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகிய இரு உரைநடை நூல்களை வெளியிட்டார்

1936, தாண்டவராய கவிராயர் இயற்றிய திருமயிலை யமக அந்தாதி மூலமும் பழைய உரையும், முதல் பதிப்பு வெளிவந்தது

1936, புறநானூறு மூலம், முதல் பதிப்பை வெளியிட்டார்

1936, மிதிலைப்பட்டிக் குழந்தைக் கவிராயர் இயற்றிய மான்விடு தூது, குறிப்புரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்

1936, ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை அபிநவ காளமேகம் அபிநவ பிள்ளைப் பெருமாளையங்கார் என்று வழங்குகின்ற ஸ்ரீமத் ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார் சுவாமிகள் இயற்றிய திருவரங்கச் சிலேடை மாலையை விருதுநகர் நாடார் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் கி. இராஜகோட்டியப்ப பிள்ளையவர்களது குறிப்புரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்

1937, நல்லுரைக்கோவை - முதல் தொகுதி (8 கட்டுரைகள்), இரண்டாம் தொகுதி (14 கட்டுரைகள்) நூல்களின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1937, ஜனவரி, 1, சங்கீத வித்வத் சபையின் பரிசளிப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார், அங்கு வந்திருந்த ராஜாஜியைச் சந்தித்தார்

1937, ஜனவரி, 3, ‘மறவர் நேசன்’ இதழின் ஆசிரியர் எஸ்.ஆர். பெரியசாமித் தேவர் வந்து இவரைச் சந்தித்து, இதழிற்கு ஏதேனும் ஒரு கட்டுரை எழுதித் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்

1937, ஜனவரி, 14, சிங்கப்பூரிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'முன்னேற்றம்' என்ற இதழின் ஆண்டு மலருக்குத் 'தாசில் அனந்தராமையர்' என்ற கட்டுரையை எழுதி அனுப்பினார்

1937, ஜனவரி, 6, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் கலந்து கொண்டார்; பி.பி.எஸ்.சாஸ்திரியின் தலைமையின்கீழ் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் 'மாணாக்கர் வாழ்க்கை' எனும் தலைப்பில் உரையாற்றினார்

1937, ஜனவரி, 6, 7, மதுரை வழக்கறிஞர் ஸ்ரீமான் என்.நடேசையர் தலைமையில் நடைபெற்ற சநாதனதர்ம மகாநாட்டில் கலந்து கொண்டார்

1937, ஜனவரி, 9, சு.சத்தியமூர்த்தி ஐயரை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துவிட்டு வந்தார்; வரும்போது தலையில் காயம்பட்டுவிட்டது, மறுநாள் (ஜனவரி, 10) சு. சத்தியமூர்த்தி ஐயர் இவர் வீட்டிற்கு நலம் விசாரித்துவிட்டுச் சென்றார்

1937, ஜனவரி, 16, குடந்தை, கோபால்ராவ் நூல் நிலையத்தில் இவரின் திருவுருவப்படம் ம.வீ. ராமாநுஜாசாரியரால் திறந்துவைக்கப் பெற்றது

1937, ஜனவரி, 26, இவரது திருமகனார் கலியாணசுந்தரம் ஐயருக்கு ஸ¨ப்ரிண்டெண்ட் வேலை கிடைக்கப்பெற்றது

1937, ஜனவரி, 28, மயிலாப்பூர் மகளிர் (மயிலாப்பூர் ஸ்திரீகள்) சங்கத்தில் 'தமிழ்நாட்டுப் பெண்பாலார்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்; இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த ஆர்.எஸ். சுப்பலஷ்மி இவரைப் பாராட்டிப் பேசிவிட்டுச் சென்றார்

1937, மார்ச்சு, 3, மயிலாப்பூர் பி. எஸ்.உயர்நிலைப் பள்ளியில் வி.எஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்குச் சென்று வந்தார்

1937, மார்ச்சு, 16, சென்னையில் நடைபெற்ற சுருக்கெழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டார்

1937, மார்ச்சு, 19, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இல்லத்தில் நடைபெற்ற ஹேல்ஸ் துரையின் விருந்தளிப்பில் கலந்துகொண்டார்

1937, மே, 22, கலைமகள் இதழில் இவர் எழுதியிருந்த 'பிச்சைப் பாட்டு' எனும் கட்டுரையைப் படித்துவிட்டு ராஜாஜி பாராட்டிக் கடிதம் எழுதினார்

1937, தமிழ்நெறி விளக்கம் மூலமும் பழைய உரையும், முதல் பதிப்பை வெளியிட்டார்

1937, மார்ச்சு, 26, திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கத்தில் டி.ஸி. ஸ்ரீநிவாசையங்கார் தலைமையில் நடைபெற்ற 'கம்பர் திருநாள்' கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்

1937, மார்ச்சு, 27, சென்னையில் நடைபெற்ற பாரதீய சாகித்திய பரிஷத்தின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்னை வந்து இந்தி பிரசாரச் சபாவில் தங்கியிருந்த மகாத்மா காந்தியை ராஜாஜியுடன் சென்று சந்தித்தார்; அதன்பின்

மாநாட்டிற்குச் சென்று வரவேற்புரை ஆற்றினார்; மாநாட்டிற்கு மகாத்மா காந்தியவர்கள் தலைமை வகித்தார்

1937, ஏப்ரல், 9, ஸி. ஆர்.ஸ்ரீநிவாஸன் தலைமையில் நடைபெற்ற திருவல்லிக்கேணிக் கூட்டுறவுப் பண்டக சாலை ஆண்டு விழாவில் கலந்துகொண்டார்; அந்த விழாவில் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரும் உரையாற்றினார்

1937, ஏப்ரல், 12, தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழாவில் கலந்துகொண்டார்

1937, ஏப்ரல், 13, ஆர்.எஸ். சுப்பலட்சுமி அம்மாள், அம்புஜம் அம்மாள் ஆகிய இருவரும் இவரது வீட்டிற்கு வந்து சந்தித்து விட்டுச் சென்றனர்

1937, ஜூலை, 16, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 80ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கினார்

1937, குறுந்தொகை மூலமும் உரையும் (இவர் எழுதிய உரை) முதல் பதிப்பை வெளியிட்டார்

1937, சிராமலைக்கோவையின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1937, எல்லப்ப நயினார் இயற்றிய திருவாரூர்க் கோவை, முதல் பதிப்பை வெளியிட்டார். இரண்டாம் பதிப்பு 1941இல் வெளிவந்தது

1937, நினைவு மஞ்சரி - முதல் தொகுதியின் (24 கட்டுரைகள்) முதல் பதிப்பை வெளியிட்டார்

1937, செய்யுள் வாசகத் திரட்டு, சென்னை இராஜதானிக் கலாசாலைத் தமிழாசிரியர் வித்துவான் ஸி. விசுவநாதையருடன் இணைந்துத் தொகுத்து வெளியிட்டார்

1938, ஜனவரி, 11, சென்னையில் வைஸ்ராய் நடத்திய விருந்தில் கலந்துகொண்டார்

1938, நல்லுரைக்கோவை - மூன்றாம் தொகுதியின் (15 கட்டுரைகள்) முதல் பதிப்பை வெளியிட்டார்

1938, மார்ச்சு, 15, சென்னை, ஆக்ஸ்போர்டு சமஸ்கிருத ஆசிரியர் பிரசங்கத்திற்குச் சென்றுவந்தார்

1938, மார்சு, 28, கவர்னர் தலைமையில் அரசு இல்ல பாங்கெட் அரங்கில் நடைபெற்ற நூலகச் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டார்

1938, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தின் இரண்டாம் பாகத்தின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1938, அந்தகக்கவி வீரராகவமுதலியார் இயற்றிய திருக்கழுக்குன்ற உலாவைப் பதிப்பித்து வெளியிட்டார்

1938, திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலையின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1938, திருமலையாண்டவர் குறவஞ்சியின் முதல் பதிப்பை வெளியிட்டார்

1938, ஸ்ரீசென்னமல்லையர் இயற்றிய சிவ சிவ வெண்பா மூலமும் உரையும், முதல் பதிப்பை வெளியிட்டார்

1938, பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளைவிடுதூது, முதல் பதிப்பை வெளியிட்டார், இரண்டாம் பதிப்பு 1941இல் வெளிவந்தது

1939, நல்லுரைக்கோவை - நான்காம் தொகுதியின் (20 கட்டுரைகள்) முதல் பதிப்பை வெளியிட்டார்

1939, செப்டம்பர், 16, குமரகுருபர சுவாமி பிரபந்தங்கள், முதல் பதிப்பை வெளியிட்டார்

1939, சீனிச்சர்க்கரைப் புலவர் இயற்றிய புகையிலை விடு தூது, முதல் பதிப்பை வெளியிட்டார்

1939, காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாவின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1939, திருத்தணிகைக் கந்தப்பையர் இயற்றிய தணிகாசல புராணம், முதல் பதிப்பை வெளியிட்டார்

1939, நாராயண தீக்ஷிதர் இயற்றிய தென்திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் பாமாலையின் முதல் பதிப்பை வெளியிட்டார்.

1939, ஜூன், 1, செட்டிநாட்டு கொப்பனாப்பட்டியில் மெய்யப்பச் செட்டியார் கட்டிமுடித்திருந்த கலைமகள் கோவில் திறப்புவிழாவில் பங்கேற்று வரவேற்புரை ஆற்றினார்

1939, நவம்பர், 25, செவ்வைச்சூடுவார் பாகவதத்திற்குக் குறிப்புரை எழுதத் தொடங்கினார்

1939, நவம்பர், 28, டி. கே. ஸி, கல்கி இருவரும் இவரது வீட்டிற்கு வந்து சந்தித்தனர்; சுயசரிதையை ஆனந்தவிகடனில் எழுதுவது குறித்துக் கலந்துரையாடினர்

1939, டிசம்பர், 7, இந்து நாளிதழின் வைரவிழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்

1939, டிசம்பர், 15, கல்கி அவர்களிடம் ஆனந்தவிகடன் இதழில் வெளியிடும் வகையில் தனது சுயசரிதத்தின் முதல் அத்தியாயத்தை எழுதிக் கொடுத்தார்

1940, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தின் இரண்டாம் பாகத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1940, திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1940, மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலச் சிலேடை வெண்பா பதிப்பை வெளியிட்டார்

1940,வீரராகவ கவி இயற்றிய வில்லைப்புராணப் பதிப்பை வெளியிட்டார்

1940, டிசம்பர், 6, ஆனந்த விகடன் இதழில் இவரது 'சுயசரிதம்' முதல் அத்தியாயம் வெளிவந்தது

1940,ஜனவரி, 21, உடல்நலம் பாதிப்புற்று இராயபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பெற்றார்

1940,ஜூன், 12, கூத்தனூர் கலைமகள் சம்பந்தமாகப் பாடல்கள் எழுதி அனுப்பினார்

1941,பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், மூன்றாம் பதிப்பை வெளியிட்டார்

1941,ஆகஸ்ட்டு, 5, தமிழ் இசையைப் பற்றி டைகர் வரதாசாரியாருக்கு எழுதி அனுப்பினார்

1941,செப்டம்பர், 29, திருச்சி வானொலியில் இவர் எழுதி அனுப்பிய 'எது தமிழ்' கட்டுரை வாசிக்கப்பட்டது

1941, நல்லுரைக்கோவை - முதல் தொகுதி (8 கட்டுரைகள்)யின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்

1941, டிசம்பர், 7, கொள்ளுப்பேரன் வேங்கடகிருஷ்ண ஐயரால் கனகரத்னாபிஷேகம் நடத்தி வைக்கப்பெற்றது

1942, ஜனவரி 12, தியாகராசவிலாச இல்லத்தின் மேல்மாடியிலிருந்து இறங்கிவரும்பொழுது (அதிகாலை 4 மணி) தவறி கிழே விழுந்து காலில் வீக்கம் ஏற்பட்டுவிடுகிறது; வீக்கத்திற்கு வைத்தியம் பார்த்தார்கள்.

1942, ஜனவரி, 29, குடும்ப மருத்துவர் திருமூர்த்தி அவர்கள் இவரைப் பரிசோதித்துப் பார்த்து இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டிருப்பதை அறிந்து, அதற்குரிய மருத்துவம் பார்த்துவந்தார்

1942, ஏப்ரல், 11, இரண்டாம் உலகப்போர் காரணமாகச் சென்னையிலிருந்த பலரும் வெளியூருக்குப் புறப்பட்டுச் சென்றனர். அந்தச் சமயத்தில் இவரைத் திருக்கழுக்குன்றம் அழைத்துச் சென்று திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான இல்லத்தில் தங்கவைத்து மருத்துவம் பார்த்து வந்தனர்

1942, ஏப்ரல் 27, குளிர் காய்ச்சல் அதிகமானது

1942, ஏப்ரல், 28, மாலை 3.35 மணிக்கு ஏடுகாத்த பெருங்கிழவர் மறைவுற்றார்

1942, உ.வே.சாமிநாதையர் எழுதி வைத்திருந்த 'வித்துவான் தியாகராச செட்டியார்' என்ற நூல், திரு. கலியாணசுந்தர ஐயரால் வெளியிடப்பட்டது

1942, நினைவுமஞ்சரி - இரண்டாம் தொகுதியின் (25 கட்டுரைகள்) முதல் பதிப்பு வெளிவந்தது; உ.வே.சாமிநாதையர் எழுதிய கட்டுரைகள்; இவரின் மகன் கலியாணசுந்தர ஐயரால் வெளியிடப்பட்டது

1942, டிசம்பர், திருவல்லிக்கேணி இந்து இளைஞர் சங்கத்தில் உ.வே.சாமிநாதையர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திருவுருவப் படங்கள் அமைப்பு விழா நடைபெற்றது; விழாவில் எஸ். வையாபுரிப்பிள்ளை கலந்துகொண்டு சாமிநாதையரைப் பற்றி உரையாற்றினார்

1943, ஜூலை, 7, உ.வே.சாமிநாதையர் திருமகனார் எஸ். கல்யாணசுந்தரமையர் விருப்பத்தின்படி, திருமதி ருக்மிணிதேவி அவர்களின் முயற்சியினால் அடையாற்றுப் பிரம்மஞான சபையின் தலைமை அலுவலகத்தின் ஓர் அறையில் நிறுவப்பெற்ற மாகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தைச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என். சந்திரசேகர ஐயர் திறந்து வைத்தார், அதுமுதல் 7.5.1962ஆம் ஆண்டு வரையில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக நூல் நிலையம் இங்குதான் செயல்பட்டுவந்தது; முதன் முதலாக 939 ஓலைச் சுவடிகளைக் கொண்டு நிறுவப்பெற்றது

1948,மார்ச்சு, 6, சென்னை, மாநிலக் கல்லூரியில், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திவான்பகதூர் ஆ. இலக்குமணசாமி முதலியார் தலைமையில் உ.வே.சாமிநாதையர் உருவச்சிலை நாட்டுவிழா நடைபெற்றது; சென்னை மாகாண முதல்வர் ஓ. பி. இராசாமி ரெட்டியார் அவர்கள் உருவச்சிலையைத் திறந்துவைத்தார்கள்

1948,ஜூலை, 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்' எனும் நூல், சுதேசமித்திரன் ஆசிரியர் கே. சுந்தரராகவன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது

1950,ஆனந்த விகடன் இதழில் 6.1.1940 முதல் 1942, மே மாதம் வரையில் சாமிநாதையர் எழுதிவந்த சுயசரிதம் 'என் சரித்திரம்' எனும் பெயரில் இவரின் மகன் கலியாணசுந்தர ஐயரால் தொகுத்துப் பதிப்பித்து வெளியிடப்பட்டது

1951,ஜூன், அடையாற்றுப் பிரம்மஞான சபையின் தலைமை அலுவலகத்தில் இயங்கிவந்த மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தின் ஒரு பகுதியில், நூல்களை ஆராய்வதற்கும், புதிய பதிப்புகளை வெளியிடுவதற்கும், நிலையத்திற்கு வருகிறவர்கள் படிப்பதற்கும் பயன்படும்படி அச்சிட்ட நூல்கள் அடங்கிய ஒரு பகுதி 524 நூல்களைக் கொண்டு திறக்கப்பெற்றது

1955, பிப்ரவரி, 18, உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு நிறைவுவிழா நினைவாக அடையாறு, பிரம்ம ஞான சபையில் சாமிநாதையரின் சம்பந்தமான அரிய பொருளமைந்த ஒரு பொருட்காட்சி திறக்கப்பட்டு மூன்று நாட்கள் நடைபெற்றது.கண்காட்சியை முதலமைச்சர் திரு. கே. காமராஜர் அவர்கள் திறந்து வைத்தார்கள். பேராசிரியர் மு. வரதராசனார் 'தமிழ் ஆராய்ச்சி' என்னும் பொருள்பற்றிப் பேருரை நிகழ்த்தினார்

1955, பிப்ரவரி, 19, உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு நிறைவுவிழா நினைவாகச் 'சாமிநாதையரவர்களின் மாணவர் மாநாடு' மயிலாப்பூர் பி. எஸ்.உயர்நிலைப் பள்ளியில் கே. பாலசுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெற்றது

1955, பிப்ரவரி, 20, உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு நிறைவுவிழா நினைவாகச் சென்னை ராஜாஜி ஹாலில் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.பொதுக்கூட்ட மேடையில் வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் படத்தைப் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் திறந்துவைத்தார். பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 'தமிழ் வளர்ச்சி' என்ற தலைப்பிலும், ராஜாஜி 'ஐயரவர்களால் தமிழ் அடைந்த பெருமைகள்' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்

1956, பிப்ரவரி, 18, 19, 20 உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு விழா 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தின்' சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கான விழாக்குழுவில் அன்றைய கல்வி, நிதி அமைச்சர் கனம். சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைவராகவும், வ.சோ. தியாகராஜ முதலியார், கி.வா. ஜகந்நாதன் ஆகிய இருவரும் உறுப்பினர்களாகவும் இருந்து செயல்பட்டனர்

1958, ஜனவரி, 21, என் சரித்திரம் (சுருக்கம்), சாகித்திய அகாடமிக்காக என் சரித்திரத்தைச் சுருக்கி எழுதி கி. வா. ஜகந்நாதனால் வெளியிடப்பட்டது

1961, தமிழ்ப்பா மஞ்சரி - முதல் பாகம் வெளிவந்தது; பல்வேறு சூழல்களில் உ.வே. சாமிநாதையர் இயற்றியிருந்த தெய்வத் துதிப் பாடல்களைக் கி.வா. ஜகந்நாதன் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்டார்

1962, தமிழ்ப்பா மஞ்சரி - இரண்டாம் பாகம் வெளிவந்தது; பல்வேறு சூழல்களில் உ.வே. சாமிநாதையர் எழுதியிருந்த பாடல்களைக் கி.வா. ஜகந்நாதன் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்டார்

1962, டிசம்பர், 3, சென்னை, கலா«க்ஷத்திர வளாகத்தில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கு, சென்னைக் கல்வியமைச்சர் மாண்புமிகு திரு.எம். பக்தவச்சலம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது

1967, பிப்ரவரி, 5, மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தின் கிருகப் பிரவேசம் நடைபெற்றது

1967, ஏப்ரல், 22, கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்களால் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலைய கட்டிடம் திறந்துவைக்கப் பெற்றது

1983, என் ஆசிரியப்பிரான், என் சரித்திரத்தின் தொடர்ச்சியாக உ.வே. சாமிநாதையர் எழுதிவைத்திருந்த குறிப்புக்களைக் கொண்டு கி. வா. ஜ. அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது

1983, தமிழ்த் தாத்தா (டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் வாழ்வும் இலக்கியப் பணியும்) என்ற நூல் சாகித்திய அகாடமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' எனும் வரிசையில் கி. வா. ஜகந்நாதனால் எழுதி வெளியிடப்பெற்றது

1983, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல தமிழ் ஆர்வலர்களின் பொருளுதவியைக் கொண்டு 'டாக்டர் உ.வே. சாமிநாதையர் அறக்கட்டளை' நிறுவப்பட்டது; இந்த அறக்கட்டளையின் வழியாகத் தமிழ்நூல் பதிப்பு வரலாறு பற்றி ஆண்டுதோறும் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு வருகின்றது

1997 ஜனவரி 19, சென்னை, திருவான்மியூர், மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய நுழைவாயிலில் சாமிநாதையர் திருவுருவச்சிலை முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது; இதற்கான விழாக் குழுவில் திரு. கே. சங்கரமேனன், திரு. அ.மு. பரமசிவானந்தம் இருவரும் தலைவர்களாகவும், திரு. எல். ராமநாதன், திரு. சு. பாலசாரநாதன், திரு. குமரி அனந்தன் உள்ளிட்ட ஒன்பதுபேர் உறுப்பினர்களாகவும் இருந்தனர்.சிலை திறப்பு விழா நினைவாகச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது; முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50,000/- அளிக்கப்பட்டது

2006, பிப்ரவரி, 18, இவரின் இருநூற்றாண்டு நினைவாக 'நினைவு அஞ்சல் தலை' இந்திய அரசால் வெளியிடப்பட்டது

2008, ஏப்ரல், 27, தமிழக அரசால் உத்தமதானபுரத்தில் உ.வே. சாமிநாதையர் வாழ்ந்த வீட்டைப் புனரமைத்து நினைவு இல்லமாக அமைத்துத் திறந்துவைக்கப் பெற்றது

2018, ஜூலை, 12, உ. வே. சாமிநாதையர் கடிதக் கருவூலம் (தொகுதி - 1; 1877 - 1900) பேராசிரியர் ஆ. இரா. வெங்கடாசலபதி அவர்களால் பதிப்பிக்கப்பட்டு உ.வே.சா. நூலக வெளியீடாக வெளியிடப்பட்டது.

துணைநூற் பட்டியல்

1. சாமிநாதையர், உ.வே. 2008 (ஏழாம் பதிப்பு). என் சரித்திரம். சென்னை: மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.


2. நினைவு மஞ்சரி, பாகம் 2, 1942, உ.வே. சாமிநாதையர், எஸ். கலியாணசுந்தர ஐயரால் பதிப்பிக்கப் பெற்றது, சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

3. நல்லுரைக்கோவை, பாகம், 3, 1938. மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கார்டியன் அச்சுக்கூடம்.


4. வேங்கடாசலபதி, ஆ. இரா. 2018. உ.வே.சாமிநாதையர் கடிதக் கருவூலம், சென்னை: டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.



https://www.scribd.com/presentation/706169542/%E0%AE%89-%E0%AE%B5%E0%AF%87-%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%B0




















சில நூல்களின் அட்டைப்படங்கள்




https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZM8luQy.TVA_BOK_0005771

உ.வே.சாமிநாதையர் கடிதக் கருவூலம் தொகுதி - 1

https://books.dinamalar.com/book/uve-swaminathaiyar-kaditha-karuvoolam-part-1-arvenkadasalapathi-katturaikal/25119



உ.வே.சா., தமிழின் மாண்பை காத்த பெருமகனார். அவர் தமிழன்னைக்கு செய்த தொண்டுகள் ஏராளம். தற்போது அவர் பெருமையை இந்த நூல் வெளிச்சமிட்டு காட்டுகிறது. உ.வே.சா., நூல் நிலைய வெளியீடான இப்புத்தகம், அவரோடு தொடர்பு கொண்ட பலர் எழுதிய கடிதங்களை வெளியிட்டு சிறப்பு செய்திருக்கிறது. அவரோடு சம காலத்தில் வாழ்ந்த பல அறிஞர்கள் எழுதிய கடிதங்களின் முதல் தொகுதியாக மலர்ந்த இந்த நூலில், ஜி.யு.போப் எழுதிய கடிதமும் அடங்கும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் முதன் முதலில், 1854ம் ஆண்டில் காகித அஞ்சல் தலைகள் வந்தன.தமக்கு வந்த கடிதங்களை, பெருமகனார் உ.வே.சா., பத்திரப்படுத்தி வைத்ததால், இந்தக் கருவூலம் இன்று தமிழர்களின் கைகளில் நூலாகத் தவழ்கிறது. இக்கடிதங்கள் பல விஷயங்கள் தொடர்பானது என்றாலும், தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை மையப்படுத்தி இருப்பதைக் காணலாம்.உதாரணமாக, வித்துவான் தியாகராஜ செட்டியார் எழுதிய கடிதம், 1880ம் ஆண்டு செப்டம்பர் தேதியிட்டது. அதில், 'கல்லுாரி பாடங்களை ஜாக்கிரதையாய் நடத்தி, நல்ல பேர் வரும்படி நடக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருப்பது, அன்றைய ஆசிரியர்கள் பின்பற்றிய மரபைப் பிரதிபலிப்பதாகும். மற்றொரு கடிதம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மனைவி காவேரி அம்மாள், 1982ம் ஆண்டில், உ.வே.சா.,வுக்கு எழுதிய கடிதத்தில், 'யெனக்கு சிலவுக்கு முடையாயிருப்பதால், தாங்கள் தயவு செய்து ஏதாவது கொஞ்சம் பணம் அனுப்பினால் நலமாயிருக்கும்... எனக்கு அப்பா இருந்ததுபோல எப்படி நடந்ததோ, அது போல தாங்கள் நடத்த வேண்டியது' என்ற கடிதம் முக்கியத்துவம் பெற்றது. 'அப்பா' என்பது மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைக் குறிப்பிடுவது ஆகும்.இது, அக்கால தமிழறிஞர்கள் வாழ்வின் தகுதியைச் சுட்டிக்காட்டுவன.இவை போன்ற பல கடிதங்கள் தமிழை நேசிப்பதாகவும், வெளி உலகில் பறைசாற்றும் பலர் இப்புத்தகத்தை நேசித்தால், தாங்கள் பணத்திற்காக பேசிய வெறுமைகள் புரியும்.பள்ளி பாடத்திட்டங்களில் ஒன்றிரண்டு கடிதங்களை உரிய விளக்கங்களுடன் பாடமாக வைத்தால், தமிழக இளைஞர்கள் தமிழை மதித்து நேசிப்பர்.– எம்.ஆர்.ஆர்.,



https://www.amazon.in/En-Sarithiram-%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D-Ve/dp/B07D3TV87L

(😊) [illegible] (😊)







சில நூல்களின் அட்டைப்படங்கள்


இணையதளமும்

தமிழ்த் தாத்தாவின் சில நூல்கள்

https://www.noolulagam.com/s/?stext=%E0%AE%89.%E0%AE%B5%E0%AF%87.+%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4&si=0







https://www.panuval.com/6585?srsltid=AfmBOooGtBbvmnKsuwambg3Dlms-C81jfHiYtZhebY7UNjpO6l3wV1Cg

உ.வே. சாமிநாத ஐயர் – சிறப்பு தொகுப்பு

https://tnpscstudymaterial.com/u-ve-swaminatha-iyer-tnpsc-notes/

தமிழ்நாடு அரசுத் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் உ.வே. சாமிநாத ஐயர் உடைய பள்ளிப் பாடப்புத்தகக் குறிப்புகள் இங்கே மிகத் தெளிவாகப் பதிவிடப்பட்டுள்ளன. இது ஒரு Professional Study Material தொகுப்பாகும்.

தமிழ்தாத்தா உ.வே. சாமிநாதையர்

1. உ.வே.சா அவர்கள் சங்கத் தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அலைந்த இடங்களில் குறிப்பிடத்தக்க ஊர் – கொடுமுடி (ஈரோடு).
2. இவர் தேடி அலைந்த ஓலைச்சுவடிகளில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் விடுபட்டிருந்த 99 வகையான பூக்களின் பெயர்களையும் முழுமையாகத் தேடிக் கண்டறிந்து பதிப்பித்தார்.
3. உ.வே.சா என்பதன் முழுப்பெயர் – உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன்.
4. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டை அச்சில் பதிப்பிப்பதற்காக உ.வே.சா எழுதிக் கொண்டிருந்தபோதுதான் பூக்களின் பெயர்கள் முழுமையாகத் தெரியாமல் இருந்தது.
5. உ.வே.சா அவர்கள் பதிப்பித்த நூல்களின் விவரம்:

எட்டுத்தொகை – 8
பத்துப்பாட்டு – 10
சீவகசிந்தாமணி – 1
சிலப்பதிகாரம் – 1
மணிமேகலை – 1
புராணங்கள் – 12
உலா – 9
கோவை – 6
தூது – 6
வெண்பா நூல்கள் – 13
அந்தாதி – 3

பரணி – 2
மும்மணிக்கோவை – 2
இரட்டைமணிமாலை – 2
பிற பிரபந்தங்கள் – 4

6. உ.வே.சா அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார்.

7. உ.வே.சா-வின் புகழ்பெற்ற வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர் – என் சரிதம்.

8. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் சென்னையில் நிறுவப்பட்ட ஆண்டு – 1942.

9. உ.வே.சா நூலகத்தில் தற்போது 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

10. உ.வே.சா. நூல்நிலையம் இன்றும் சென்னையின் பெசன்ட் நகரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

11. உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் – ஜி.யு.போப் மற்றும் சூலியல் வின்சோன்.

12. நடுவணரசு உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் 2006 ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

13. உ.வே.சா. அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர் பிறந்த இல்லம் உத்தமதானபுரத்தில் நினைவு இல்லமாக மாற்றப்பட்டுள்ளது.

14. கரையான்களுக்கும், ஆற்று வெள்ளத்திற்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச்சுவடிகளைத் தேடித் தேடிப் பாதுகாத்த பெரியவர் – உ.வே.சா.

15. உ.வே.சா. தம் வாழ்நாள் முழுவதும் அச்சுப்பணியை (பதிப்புப்பணி) ஓய்வில்லாமல் மேற்கொண்டார்.

16. உ.வே.சா. பிறந்த ஊர் – திருவாரூர் மாவட்டத்திலுள்ள உத்தமதானபுரம்.

17. உ.வே.சா. அவர்களைத் தமிழ் உலகம் அன்போடும் உரிமையோடும் தமிழ்த்தாத்தா என அழைக்கின்றது.

18. "பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால், பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவதே வழக்கம். முதலில் வருபவனை வேத்தான் என்று சொல்வார்கள்."

19. "பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. பனையேடுதான் புத்தகம். எழுத்தாணியே பேனா."

20. உ.வே.சா பெற்ற முக்கிய பட்டங்கள்: – மகாமகோபாத்தியாய (மத்திய அரசு வழங்கியது) – திராவிட வித்தியா பூஷணம் – தாக்ஷிணாத்திய கலாநிதி (சங்கராச்சாரியார் வழங்கியது)

21. புறநானூற்றை முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிட்டவர் உ.வே.சா. வெளியிடப்பட்ட ஆண்டு – 1894.

22. "தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரிசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன" என்று பாரிஸ் தேசிய நூலகத்தில் உள்ள தமிழ் ஏடுகளைக் கண்டு வியந்தார்.

23. 'பண்டைய காலத்து பள்ளிக்கூடங்கள்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நூலின் ஆசிரியர் – உ.வே.சா.

24. 'முடியுடை வேந்தர்' என்ற நூலைப் பதிப்பித்த ஆண்டு – 1894.

25. "யார் காப்பர் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் உ.வே.சா."

கூடுதல் தகவல்கள்

உ.வே. சாமிநாதையர் அவர்கள் பிப்ரவரி 19, 1855 இல் பிறந்தார். இவருடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆவார். உ.வே.சா அவர்கள் முதலில் தேடிப் பதிப்பித்த காப்பியம் சீவகசிந்தாமணி (1887) ஆகும். ஓலைச்சுவடிகளைத் தேடும் பணியில் இவர் பல இன்னல்களைச் சந்தித்தார். ஆடிப் பெருக்கு அன்று மக்கள் ஓலைச்சுவடிகளைக் காவிரியில் எறிவதைக் கண்டு, அவற்றை ஆற்றில் இறங்கித் தடுத்தெடுத்துப் பாதுகாத்தார். இவர் பதிப்பித்த ஒவ்வொரு நூலும் அதன் மூலப் பாடங்களை ஒப்பிட்டு, பிழையின்றி உருவாக்கப்பட்டது. இவருடைய இலக்கியக் கட்டுரையான 'உயிர்மீட்சி' என்பது தமிழின் மறுமலர்ச்சியைப் பறைசாற்றுகிறது.

காணொளிகள்

01] **தமிழ் தாத்தா உ.வே. சாமிநாதய்யர் பற்றிய அறிய தகவல்கள்!**
https://www.youtube.com/watch?v=fICSEO8d1y8 [9:59]

02] **ஒவ்வொரு தமிழனும் மறக்கக் கூடாத மனிதர் Dr உ.வே.சா**
https://www.youtube.com/watch?v=YNJD9pT_c0Y [11:24]

03] **தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் வாழ்க்கை வரலாறு**
https://www.youtube.com/watch?v=s1-CUGcPCEo [8:10]

04] Grandfather of Tamil | **உ. வே. சா** | U. V. Swaminatha Iyer History
https://www.youtube.com/watch?v=PVIIT16RsEg [8:29]

05] Tamil Thaththa U.Vae.Sa-**தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்**
https://www.youtube.com/watch?v=psth7OrgHWg [15:30]

06] **இதுவரை கேட்கப்பட்ட தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதர் கேள்விகள்**
https://www.youtube.com/watch?v=YAYV77aogN4 [16:55]

07] **உ.வே.சாமிநாதர் பற்றிய முழு தகவல்கள்**
https://www.youtube.com/watch?v=-nhycjETX6k [1:25:36]



(😁)(😁)(😁)(😁)(😁)

காலவரிசை

யு.வி. சுவாமிநாத ஐயர் (1855–1942), **தமிழ் தாத்தா** (தமிழின் தாத்தா) என்று அன்புடன் அழைக்கப்பட்டவர், பண்டைய தமிழ் பனை ஓலைச் சுவடிகளைக் காப்பாற்றிப் பதிப்பிப்பதற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஒரு புகழ்பெற்ற தமிழ் அறிஞர் ஆவார். அவரது பணி ஒரு தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியை உருவாக்கியது.

அவரது வாழ்க்கை மற்றும் முக்கிய பங்களிப்புகளின் காலவரிசை இதோ:

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி

- **19 பிப்ரவரி 1855:** தஞ்சாவூர் மாவட்டம் உத்தமதனபுரத்தில் வேங்கடராமன் பிறந்தார்.
- **1870–1875:** புகழ்பெற்ற தமிழ் அறிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பயிற்சி பெற்று, தமிழ் இடைக்கால நூல்களில் ஆழ்ந்த நிபுணத்துவம் பெற்றார்.
- **1868:** திருமணம்.

கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணி

- **1880:** கும்பகோணத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
- **1880களில்:** பழங்கால பனை ஓலைக் கையெழுத்துப் பிரதிகளைத் தீவிரமாகத் தேடுதல், சேகரித்தல் மற்றும் தொகுத்தல் பணிகளைத் தொடங்கினார்.
- **1887:** தனது மைல்கல் படைப்பான சீவக சிந்தாமணியின் *திருத்தப்பட்ட பதிப்பை வெளியிட்டார்*, இது அவருக்கு பரவலான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது.
- **1890கள்-1900கள்:** பத்துப்பாட்டு *(1904)*, சிலப்பதிகாரம், மணிமேகலை *உள்ளிட்ட முக்கிய கிளாசிக் புத்தகங்கள் வெளியிடப்பட்டன* .

முக்கிய வெளியீடுகள் மற்றும் சாதனைகள்

- **1903:** ஐங்குருநூறு *வெளியிடப்பட்டது* (1920-இல் திருத்தப்பட்டது).
- **1906:** 'மகாமகோபாத்யாயா' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


- **1917:** "திராவிட வித்யா பூசணம்" என்ற பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டது.
- **1919:** முழுமையாக ஆராய்ச்சியில் கவனம் செலுத்துவதற்காக, கற்பித்தல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
- **1923:**புறநானூறு முதன்முதலில் வெளியிடப்பட்டது .
- **1924–1927:** அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார்.
- **1932:** மெட்ராஸ் பல்கலைக்கழகத்தால் முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.
- **1935:** தனது 80வது பிறந்தநாளை (81வது வயதை) கோலாகலமான பொது அங்கீகாரத்துடன் கொண்டாடினார்.
- **1940-1942:** தனது சுயசரிதையான '*என் சரித்திரம்*'என்பதைத் தொடராக வெளியிட்டார் , அது பின்னர் 1950-ல் பிரசுரிக்கப்பட்டது.

பிற்கால ஆண்டுகள் மற்றும் மரபு

- **28 ஏப்ரல் 1942:** திருக்கழுக்குன்றத்தில் காலமானார்.
- **2006:** அவரை கௌரவிக்கும் விதமாக ஓர் நினைவு அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது.
- **2024:**தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது பிறந்த நாளான பிப்ரவரி 19, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி தினமாகக் **கொண்டாடப்படும் என்று அறிவித்தார்** .

அவர் தனது வாழ்நாளில் 91க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டதுடன், 3,067 கையெழுத்துப் பிரதிகளையும் மீட்டெடுத்தார்.

(☺)(☺) தமிழ்த்தாத்தா (☺)(☺)





பன்முகப் பார்வையில்

தமிழ்த்தாத்தா உ.வே.சா.

ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு



தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.





1926ல், இரவீந்திரநாத தாகூர் தமிழ்த்தாத்தாவை சந்தித்து அளவளாவிய இல்லம்



‘தியாகராச விலாசம்’

தமிழ்த்தாத்தா 1909ல் சென்னையில் வாங்கிய இல்லம்

FROM THE PALM LEAF MANUSCRIPT YOU BROUGHT OUT THE GLORY OF DRAVIDIAN LIFE — THAT GLORY WAS BROUGHT OUT BY YOU (EXTRACT FROM TAGORE'S BENGALI POEM ON U V SWAMINATHA IYER)



2012ல் இடிக்கப்பெற்றது



தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.

கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)


மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண் : 3

'பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா'

(தமிழ்த்துறையின் இரண்டாவது தேசியக் கருத்தரங்கிற்காக
வரப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு)

‘பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா’



(தமிழ்த்துறையின் இரண்டாம் தேசியக் கருத்தரங்கிற்காக வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

பதிப்பாசிரியர்

திரு. இராசுமைனர்
முன்னாள் உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல், (அடையாளம்பட்டு), சென்னை - 600 095

பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா

ஏப்ரல் 2022
(பெருந்தொற்று காரணமாக கருத்தரங்கு 2020ல் நடைபெற இயலாமையால், இந்நூல் 2022-ல் வெளியிடப் பெறுகின்றது)

பதிப்புரிமை
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு)
சென்னை - 600 095

ISBN: 978-93-88568-16-6

9 789388 568166

நூலாக்கம்:

- M.Ganesh Babu
- P.Ponmalar

Printed at: DJ Printers. Chennai-95.



டாக்டர். A.C.சண்முகம் FRCPS
நிறுவன வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

“***இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்”

என்று தமிழின் தொன்மையையும், பழமையையும் பறைசாற்றி, பண்டைய மக்களின் வாழ்வையும், வளத்தையும் நமக்குத் தெரிய செய்த அரும்பெரும் சாதனையாளர் உ.வே.சா. மகாமகோபாத்யாய என்ற பட்டம் இவருக்காகவே பிறந்ததோ என்று எண்ணத்தூண்டும் வகையில் நல்லாசிரியராய், பதிப்பாளராய், உரையாளராய், கட்டுரையாளராய் வாழ்ந்து மறைந்தவர். ஓலைச்சுவடியை நூலாக்கிய உத்தமர். உத்தமதானபுரத்து மைந்தர். ஞாயிறும் ஓய்வறியும், ஓய்வறியா உழைப்பாளர். தமிழன்னைக்குத் தன்னால் இயன்ற தொண்டு என்று இலக்கிய அணிகலன் பூட்டியவர். இவரோ ஓலைச்சுவடியைத் தேடி அலைந்து கறையானிடம் இருந்து காப்பாற்றி நூலாக்கினார். இப்பெரும் பணி தமிழுக்கு இவர் செய்த அரும்பணி. தமிழன்னையே அகமகிழ்ந்து இவருடைய இல்லம் சென்று அமர்ந்து விட்டாள். தமிழ் மேல்கொண்ட காதலும், தமிழன்னையின் அன்பும் ஒரு சேர கிடைக்கப்பெற்றதால் உ.வே.சா “தமிழ்த்தாத்தா” ஆனார். படைப்புகளும் பதிப்புகளும் விண்ணைத் தொட்டு வீணை மீட்டியது. தமிழ் மகளின் அவா செம்மையுற திருமகளும், கலைமகளும் வழங்கிய ஆசிகள் இன்று நாம் படித்து இன்பம் துய்க்கும் சங்க இலக்கிய நூல்களாய் மலர வழிவகுத்தது.

இச்சீரிய பணியைச் செவ்வனே செய்த இம்மகானை நினைவுகூறும் வகையில் எமது பல்கலைக்கழகத்தில் சிறப்பாக செயல்படும் தமிழ்த்துறை, **“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா *உ.வே.சா”*** என்னும் தலைப்பில் இரண்டாம் தேசியக் கருத்தரங்கை நிகழ்த்த முடிவு செய்துள்ளது. இக்கருத்தரங்கம் நன்முறையில் நிகழ என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இக்கருத்தரங்கம் செம்மையுற தமிழ்த்தாத்தாவையும் அவர்தம் செயல்களையும் ஆராய்ந்து கட்டுரைகளாய்ப் படைத்திட்ட பேராசிரியப் பெருமக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் உளம்கனிந்த வாழ்த்துகள்.



பொறியாளர் A.C.S. அருண்குமார்
தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600095.

வாழ்த்துரை

காலத்தால் அழியாதவர்! கல்வெட்டாய் நினைத்திருப்பவர் உ.வே.சா. இவரின் பன்முக ஆற்றலை ஆய்வுச் செய்து கட்டுரை மலரை மொழிப் பூங்காவாக வடிவமைத்துத் தேசியக்கருத்தரங்காக நடத்துவது எனக்கு மன மகிழ்வைத் தருகிறது.

நெருப்புக்கும், நீருக்கும் கறையானுக்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகளை எடுத்துச் செப்பம் செய்து நூல்களாக வெளியிட்ட பெருமை தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத அய்யரைச் சாரும். தமிழ்த்துறையின் சார்பாக வெளிவரும் **“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா”** எனும் இவ்வாய்வுக் கோவை மிகச்சிறப்பாக அமைந்தமைக்கு, தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும், ஆய்வுக் கட்டுரையை வழங்கிய பேராசிரியர்களுக்கும், பல்துறையைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்களுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் மனமகிழ்வு கொள்கிறேன்!

இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தை அடையாளங்காட்டும் ஆவணமாகும். ஒவ்வொரு இலக்கியமும் தனக்கெனத் தனிமையைப் பெற்று விளங்குகிறது. இலக்கியம் பழமையானதாக இருந்தாலும் பல தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளும்போது புதிய புதிய தகவல்கள் வெளிப்படுவதை ஆய்வாளர்கள் நன்கறிவர்.

தன்னிகரில்லாத் தமிழ்மொழி தரணியெங்கும் பரவி வாழ்ந்து வரும் ஒவ்வொரு தமிழனின் உயிர்மூச்சாகத் திகழ்வதுடன், தமிழனின் தனிப்பட்ட சீரிய பண்பாட்டைப் பறைசாற்றும் ஒளிப்பிழம்பாகவும் உயர்ந்தோங்கி விளங்கி வருகின்றது. பல்வேறு அறிவுப்புலங்களில் ஆழங்கால்பட்ட அறிஞர் பெருமக்கள் பலராவர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவர் அய்யர். மேலும் உலகளாவிய அளவில் தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிறான் என்றால் அதற்குக் காரணம் உ.வே.சாமிநாதய்யர் என்றால் அது மிகையில்லை. இதேபோல் தமிழ்த்துறைச் சார்பாக பல கருத்தரங்குகள் நடத்த மேலும் வாழ்த்தி மகிழ்கிறேன்.



பேராசிரியர் டாக்டர் S. கீதாலஷ்மி
துணைவேந்தர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

"கற்க கசடற" என்னும் வள்ளுவர் வாக்கினை ஏற்றுக் கல்வியைக் கசடற வழங்கி மாணவர்களின் நலனைத் தன் நலனாய்க் கருதி சீரும் சிறப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கிறது எமது டாக்டர்.எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம். இப்பெரும் நிறுவனத்தில், தமிழையே தாரக மந்திரமாய்க் கொண்டு நன்முறையில் இயங்கி வரும் எம் தமிழ்த்துறையின் இரண்டாம் தேசியக் கருத்தரங்கம் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களைப் போற்றும் வகையில் **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா"** என்ற தலைப்பில் அமையப் பெற்றுள்ளது. நாம் பயிலும் தமிழ் நூல்கள் பலவற்றை ஓலைச்சுவடியில் இருந்து நூலாய் மாற்றி அதற்கும் உரை கண்டு நம்முடன் உலவ விட்டவர் உ.வே.சா. அப்பெருந்தகையின் சிறப்புகளைக் கட்டுரைகளாய்ப் படைத்து அதைக் ஆய்வுக் கோவையாய் மாற்றி அவரின் சாதனைகளைப் பல்வேறு நோக்கில் நாம் காண முயன்றுள்ளோம். எம் தமிழ்த்துறைக்குக் கட்டுரைகளை வழங்கிய பல்துறையைச் சார்ந்த கட்டுரையாளர்க்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகள். மேலும் இப்பணிகள் மேன்மேலும் தொடர்ந்து தழைத்தோங்க வாழ்த்துகிறேன்.



டாக்டர்.சி.பா.பழனிவேலு
பதிவாளர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இயங்கும் தமிழ்த்துறையின் தொடர் முயற்சியில் இவ்வாண்டும் **'பன்முகப் பார்வையில் உ.வே.சா'** என்ற பொருண்மையில் தேசியக்கருத்தரங்கு நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது. இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தை அடையாளம்காட்டும் காலக்கண்ணாடியாகும். அத்தகைய சிறப்புமிக்க இலக்கியத்திற்கு இனிமை சேர்க்கும் விதமாக கறையான் அரித்து அழிந்து போக கிடந்த பல்வேறு சுவடிகளைத் தூசித்தட்டி, மெருகூட்டி நூலாக் கோர்த்து மொழிக்கும், இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்தவர் உ.வே.சாமிநாதையர் ஒருவரே ஆவார்.

அத்தகு அரிய பணியைச் செய்தமையால் 'தமிழ்த்தாத்தா' என்றழைக்கப்படுவது சாலப் பொருத்தமே. தமிழின் தமிழனின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகறிய செய்ததோடு மட்டுமின்றி, இக்கால மக்களும் படித்துப் பயன்படும் வகையில் நூலாக வடித்தும் தந்துள்ளார். இத்தகு மாபெரும் தொண்டாற்றிய தமிழ்த் தாத்தாவின் உயரிய பணியை வையகம் அறிந்திடச் செய்யும் உன்னத செயலைப் பல்வேறு நோக்கில் ஆய்வு செய்த ஆய்வு மாணாக்கர்கள், ஆர்வலர்கள், பேராசிரியர்கள், சான்றோர்கள் மற்றும் இப்பணியினைச் சிறந்த முறையில் ஆய்வு நூலாக வெளியிடும் தமிழ்த்துறைக்கும் மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



டாக்டர்.ச.மணிவண்ணன்
முன்னாள் புலத்தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

தன்னிகரில்லாத் தமிழைத் தரணியெங்கும் நூலாய், நுட்பமாய், நுணுக்கமாய் மக்களின் கைகளில் உலவ முழுமுதற் காரணமான நம் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களின் பணியானது அளப்பரியது. கறையான் அரித்துக் காத்த ஓலைச்சுவடியை நம் கண்களுக்கு விருந்தாக்கியவர் உ.வே.சா. இன்று நாம் காணும் தமிழரின் பண்பாடும் நாகரிகமும் வாழ்வும் வளமும் உ.வே.சாவின் ஏட்டுச்சுவடியை மீட்கும் பெரும் பணியின் சாதனையாகும். உ.வே.சா இல்லையெனில் இன்று பழந்தமிழரின் வாழ்வு நம் கண்முன்னால் இழையோடாமலேயே சென்றிருக்கும் அப்பெருமகனாரின் சிறப்புகளை நமக்கு மீண்டும் ஒருமுறை நினைவுக்கூரும் வகையில் சீரிய சிந்தனையுடன் இயங்கி வரும் நமது நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ***“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா*”** என்னும் தலைப்பில் இரண்டாம் தேசியக் கருத்தரங்கை நடத்த முடிவு செய்துள்ளது. நமது தமிழ்த்துறையின் இத்தேசியக் கருத்தரங்கம் செவ்வனே நடக்கவும், துறைச் சிறப்பாய் உயரவும், ஆய்வுக்கோவை செம்மையுடன் அமையவும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஏ.ஆர்.அருணாச்சலம்
புலத்தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

தமிழ்த் தாத்தா என்று அனைவராலும் அறியப்பெறுபவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள். எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது நம் தமிழ்மொழி. தமிழ்த் தாத்தாவின் ஃடில்லா தொண்டே தமிழ்மொழியின் பெருமை வாய்ந்த உயர்வுக்கு மூலகாரணம் எனில் அது மிகையாகாது. அத்தகைய அறிஞரை இத்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் 2020ல் **“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா”** எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தும் பொருட்டு நம் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெகு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தது. பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. தமிழ்த் தாத்தாவின் ஆசியாலும், துறையின் சீரிய முயற்சியாலும் கருத்தரங்கம் விரைவில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கிற்கு வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளும் தொகுக்கப்பெற்று நூலாக வெளியிடப்பெறவுள்ளது. கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறவும் ஆய்வுக்கோவை அழகுற அமைந்திடவும் என் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.



திரு சி வெற்றிவேல்
உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் (பொறுப்பு)
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

தமிழ்த் தாத்தா என்று அனைவராலும் போற்றப்பெறும் உ.வே. சாமிநாதையரவர்களின் சிறப்பியல்புகளையும், அவரது வரலாற்று சிறப்புமிக்க பதிப்புத்துறை சாதனைகளையும் இந்நூற்றாண்டு இளைய சமுதாயத்தினர்க்கு கொண்டுசேர்க்கும் வகையில், நம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 2020ல் **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா**" என்ற தலைப்பில் தேசியக்கருத்தரங்கினை நடத்த திட்டமிட்டது. 2020ல் வந்த பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. அக்கருத்தரங்கினை 2022ல் நடத்துவதென முடிவு செய்து நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. இரண்டாண்டு காலமாக நிலைமையினை நன்குணர்ந்து பொறுமை காத்து வந்த அனைவருக்கும் தமிழ்த்துறை நன்றியை காணிக்கையாக்குகின்றது. விரைவில் ஆய்வுக்கோவைகள் தொகுக்கப்பெற்று நூலாக வெளிவருகின்றது. அத்தொகுப்பு அனைவரையும் வந்தடையும் என தெரிவித்து மகிழ்கின்றோம்.



திரு இராசுமைனர்
முன்னாள் உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

பதிப்புரை

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"**

என்ற பாரதிகண்ட கனவைப் புகழ்சால் டாக்டர் எம்.ஜி.ஆர் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் நனவாக்கிக் கொண்டிருக்கிறது. தமிழின் வளர்ச்சிக்காகவும் தமிழ்மொழியின் பெருமையை வெளிப்படுத்தும் விதமாகவும் 2019ஆம் ஆண்டு, முதல் தேசியக் கருத்தரங்கு தமிழ்த்துறையின் சார்பாக செம்மையான முறையில் நடந்தேறியது. இவ்வாண்டு **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா"** என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கினை நடத்த இருக்கிறது. உ.வே.சா தமிழின் மீது கொண்ட அளப்பரிய பற்றின் விளைவாக தமிழ்த்தாயின் அணிகலன்களாக விளங்கக்கூடிய இலக்கியங்களை மெருகூட்டி தமிழன்னைக்கு அணிவித்து அழகுபார்த்துள்ளார். அவர் தம் தொண்டுகளை நூல்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டமையை ஆராயப்படும் முயற்சியை இவ்வாய்வேட்டில் அறியலாம்.

"அறிவற்றம் காக்கும் கருவி" என்ற குறளுக்கேற்ப வாழ்ந்துகொண்டிருப்பவர் நம் பல்கலைக்கழகத்தின் நிறுவனவேந்தர் உயர்திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள். தேனீயைப் போன்று அயராது உழைத்துக்கொண்டிருக்கும் நம் பல்கலைக்கழகத்தின் தலைவர் பொறியாளர் உயர்திரு.ஏ.சி.எஸ்.அருண்குமார் அவர்கள் இருவரும் இரட்டைக்குழல் துப்பாக்கியாய் மாணவர்களின் நலனுக்காகச் செயல்படுகின்றார்கள். அவர்களுக்குத் தமிழ்த்துறையின் சார்பாக என் உள்ளார்ந்த நன்றியினை உரிதாக்குகின்றேன். மேலும் இப்பல்கலைகக்கழகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் துணைவேந்தர், பதிவாளர், புலத்தலைவர், துணைப்புலத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உ.வே.சா. அவர்கள் இல்லையேல் தமிழ்நூல்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு அவரது பதிப்புப்பணிச் சிறப்பு பெற்றிருக்கிறது. இவ்வாய்வுக் களத்தில் பல்வேறு தலைப்பில் வந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் தமிழறிஞர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயனுடையதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. உ.வே.சா அவர்களின் தமிழ் நுட்ப கூறுகளைத் துறைதோறும் அலசி ஆராய்ந்து இதேபோன்று கருத்தரங்குகளைத் தொடர்ந்து எம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்த வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அன்புப் படையல்



மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(1815 – 1876)

உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் ஆசான்

உள்ளடக்கம்

பின்னிணைப்புகள்

குறிப்பு:

மேற்கண்ட ஆய்வுக்கட்டுரைகள் 2020ல் வரப்பெற்றன. பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. 2022ல் விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, 2020ல் வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளில் உள்ள விவரங்கள் மாற்றப்பெறாமல், அவையே ஈண்டு தரப்பெற்றுள்ளன.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

பதிப்பித்த நூல்களின் அகரவரிசை

1. அழகர் கிள்ளை விடு துது 1938
2. ஆற்றூர்ப் புராணம் 1935
3. இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை 1936
4. இலந்தை நகர் தண்டபாணி விருத்தம்
5. உதயண குமார காவியம் 1935
6. உதயணன் சரித்திரச் சுருக்கம் 1924
7. ஐங்குறு நூறு 1903
8. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதுது 1888
9. கடம்பர் கோயிலுலா 1932
10. கபாலீசுவரர் பஞ்சரத்தினம் 1940
11. கலைசைக் கோவை 1935
12. களக்காட்டுச் சத்தியவாகீசர் இரட்டை மணி மாலை 1935
13. கனம் கிருஷ்ணையர் 1936
14. குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு 1939
15. குறுந்தொகை 1937
16. கோபால கிருஷ்ண பாரதியார் 1936
17. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் 1929
18. சங்கர நயினார் கோயிலந்தாதி 1934
19. சங்கரலிங்க உலா 1933
20. சிராமலைக் கோவை 1937
21. சிலப்பதிகாரம் 1892
22. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் 1932
23. சிவசிவ வெண்பா 1938
24. சீகாழிக் கோவை 1903
25. சீவக சிந்தாமணி 1887
26. சூரைமாநகர்ப் புராணம் 1904
27. செவ்வைச் சூடுவார் பாகவதம் 1941
28. தக்கயாகப்பரணி 1930
29. தண்டபாணி விருத்தம் 1891
30. தணிகாசலபுராணம் 1939
31. தமிழ்நெறி விளக்கம் 1937
32. தமிழ் விடுதுது 1930



33. தனியூர்ப் புராணம் 1907
34. திரு இலஞ்சி முருகன் உலா 1935
35. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா 1933
36. திருக்கழுக்குன்றத்துலா 1938
37. திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலை 1938
38. திருக்காளத்தி நாதருலா 1904
39. திருக்காளத்திப் புராணம் 1912
40. திருக்குடந்தைப் புராணம் 1883
41. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா 1940
42. திருத்தணிகைத் திருவிருத்தம் 1914
43. திரு நீலகண்ட நாயனார் சரித்திரம் 1936
44. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 1908
45. திருப்பூவண நாதருலா 1904
46. திருப்பெருந்துறைப் புராணம் 1892



47. திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் 1932
48. திருமயிலைத் திரிபந்தாதி 1888
49. திருமயிலை யமக அந்தாதி 1936
50. திருமலையாண்டவர் குறவஞ்சி 1938
51. திருவள்ளுவரும் திருக்குறளும் 1936
52. திருவாரூர்க் கோவை 1937
53. திருவாரூர்த் தியாகராச லீலை 1905
54. திருவாரூருலா 1905
55. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 1906
56. திருவாவடு துறைக் கோவை 1903
57. தேவையுலா 1907
58. நல்லுரைக் கோவை பகுதி 1 1937
59. நல்லுரைக் கோவை பகுதி 2. 1937
60. நல்லுரைக் கோவை பகுதி 3. 1938
61. நல்லுரைக் கோவை பகுதி 4. 1939
62. நன்னூல் சங்கர நமச்சிவாயருரை 1925
63. நன்னூல் மயிலைநாதருரை 1918
64. நான் கண்டதும் கேட்டதும் 1936
65. நினைவு மஞ்சரி பகுதி – 1 1940
66. நினைவு மஞ்சரி பகுதி – 2 1942
67. நீலி இரட்டை மணிமாலை 1874
68. பத்துப்பாட்டு மூலம் 1931

69. பத்துப்பாட்டு மூலமும் உரையும் 1889
70. பத்மகிரி நாதர் தென்றல் விடு தூது 1932
71. பதிற்றுப் பத்து 1904
72. பரிபாடல் 1918
73. பழமலைக் கோவை 1935
74. பழனி இரட்டைமணிமாலை 1935
75. பழனிப் பிள்ளைத் தமிழ் 1932
76. பாசவதைப் பரணி 1933
77. புகையிலை விடு தூது 1939
78. புத்த சரித்திரம்,பௌத்ததருமம்,பௌத்த சங்கம் 1898
79. புதியதும் பழையதும்1936
80. புறநானூறு1894
81. புறநானூறு மூலம் 1936
82. புறப்பொருள் வெண்பா மாலை 1895
83. பெருங்கதை 1924
84. பெருங்கதை மூலம் 1936
85. மகரநெடுங் குழைக்காதர் பாமாலை 1939
86. மகாவைத்திய நாதையர் 1936
87. மண்ணிப்படிக்கரைப் புராணம் 1907
88. மணிமேகலை 1898
89. மணிமேகலைக் கதைச் சுருக்கம் 1898
90. மத்தியார்ஜ்ஜு ன மான்மியம் 1885



91. மதுரைச் சொக்கநாதர் மும்மணிக் கோவை 1932
92. மதுரைச் சொக்கநாதருலா 1931
93. மான் விடு தூது 1936
94. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 1. 1933
95. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 2. 1934
96. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு 1910
97. வலிவல மும்மணிக் கோவை 1934
98. வித்துவான் தியாகராச செட்டியார் 1942
99. வில்லைப் புராணம் 1940
100. விளத்தொட்டிப் புராணம் 1934
101. வீரவனப் புராணம் 1903
102. வேணுவனலிங்க விலாசச் சிறப்பு 1878

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

ஐயரவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

கி.வா. ஜகந்நாதன்

இந்த நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் இரண்டு பெரிய மலைகளைப் போன்ற பெரியவர்கள் தமிழ்மொழிக்குப் புதிய ஒளியைக்கொடுத்தார்கள். ஒருவர் ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார். மற்றொருவர் ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள். கவிஞர் பாரதியார் தம்முடைய புதிய கவிகளால் தமிழ்த்தாய்க்குப் புதிய அணிகளைப் பூட்டினார். ஐயரவர்களோ, பல காலமாக மங்கி மறைந்து கிடந்த பழைய அணிகளை மீட்டும் எடுத்துக் கொணர்ந்து துலக்கி மெருகூட்டிப் பூட்டி அழகு பார்த்தார்கள்.

தமிழ்த் தாத்தா என்று தமிழ்க் குழந்தைகளால் அன்புடன் போற்றப்பெறும் ஐயரவர்கள் உண்மையில் சென்ற நூற்றாண்டிலேயே தம்முடைய அரும்பெருந் தொண்டைத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் 1855-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி தோன்றினார்கள். அவர்கள் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர்கள் மறைந்த காலத்தில் (ஏப்ரல், 1942) தமிழ் உயர்ந்து நின்ற நிலைக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. அவர்கள் 1887-ஆம் ஆண்டில் சீவகசிந்தாமணியை அச்சிட்டு வெளியிட்டார்கள். அது முதல் இறுதிக் காலம் வரையில் தமிழ்த்தாயின் அணிகளை ஒவ்வொன்றாகப் புதுப்பிக்கும் அற்புதமான தொண்டில் தம் காலம் முழுவதையும் அவர்கள் செலவிட்டார்கள்,

அவர்கள் தோன்றிய காலத்தில் பெரும் புலவர்களும் சங்க நூல்கள் என்று பெயரளவிலே தெரிந்து கொண்டிருந்தார்களே ஒழிய அவை இன்னவை என்பது அவர்களுக்குத் தெரியாது. கோவலன் கதை என்ற ஒரு நாடோடிக் கதையையும் அதில் வரும் கண்ணகியையும் மாதவியையும் அறிவார்களேயன்றிச் சிலப்பதிகாரத்தையும் அதில் உள்ள பாத்திரங்களையும் அறியமாட்டார்கள். அகநானூறு, புறநானூறு என்ற இரண்டுக்கும் உள்ள வேறுபாடு இன்னதென்று தெரியாது, மணிமேகலை எந்தச் சமயத்தைப் பற்றிய நூல் என்பதும் தெரியாது.

இன்றோ பள்ளிக்கூடத்திற் பயிலும் மூன்றாம் வகுப்பு மாணவனுக்கும் பாரியைப்பற்றிய வரலாறு தெரியும். சேரன் செங்குட்டுவனுடைய வெற்றியைப் பற்றி மேல் வகுப்பு மாணாக்கர்கள் படிக்கிறார்கள். பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் புறநானூறு, குறுந்தொகை பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிலுள்ள பகுதிகளைப் பாடமாக வாசிக்கிறார்கள் பிள்ளைகள்.

பல ஆண்டுகளுக்கு முன் திராவிட மொழிகளின் அமைப்பைப் பற்றிக் கால்டுவெல் என்ற ஆங்கிலேயர் அழகான நூல் ஒன்று எழுதினார். "திராவிட மொழிகளின் ஒப்பியல்" (Comparative Phonology of Dravidian Languages) *என்பது அந்து நூலின் பெயர். அதை இன்றும் சிறந்த நூலாகப் புலவர்கள் கொண்டாடுகிறார்கள். அதை எழுதினவருக்கே எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியவை கிடைக்கவில்லை. அந் நூல்களின் அமைப்பை அவர் அறியார். இன்றோ சங்ககாலத் தமிழரைப் பற்றியும், நூல்களைப் பற்றியும் பல பல நூல்கள் வந்திருக்கின்றன, பல வகையான ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று சங்க காலத்தைப் போற்றிப் பாராட்டிப் பெருமிதத்துடன் பேசுகிறோம். தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மரபு என்று நமக்குரிய தனிச் சிறப்பைப் பல மேடைகளில் புலவர் பெருமக்கள் பேசுகிறார்கள்ளூ எழுதுகிறார்கள். பாரத நாட்டில் உயிருடன் வழங்கி வரும் மொழிகள் யாவற்றிலும் பழையது. இலக்கிய வளம் பொருந்தியது, இலக்கண வரம்புடையது, எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்த் தாத்தாவின்*

அரும்பெருந் தொண்டே இத்தனை உயர்வுக்கும் மூலகாரணம் என்பதைத் தமிழ்ப் புலவர்கள் அறிவார்கள். தமிழ் வரலாற்றில் ஐயரவர்களுக்கு என்று ஒரு தனிப் பகுதி இருக்கும் என்பதில் சந்தேகமேஇல்லை.

ஐயரவர்களுடைய ஊர் தஞ்சை ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரம் என்ற சிறிய கிராமம். சங்கீத வித்துவானகிய ஸ்ரீ வேங்கட சுப்பையருக்கும் ஸ்ரீமதி சரசுவதியம்மாளுக்கும் புத்திரராக ஐயரவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய தந்தையார் பல இடங்களுக்குச் சென்று தம்முடைய இசைத் திறமையைக் காட்டி ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தார்கள். குறிப்பிட்ட வேலையும் குறிப்பிட்ட சம்பளமும் இல்லாவிட்டாலும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் அன்பும் கலையபிமானமும் அவரைப் போன்ற கலைஞர்களைப் பாதுகாத்து வந்தன. அங்கங்கே இருந்த செல்வர்களும் ஜமீன்தார்களும் அவருக்குச் சிறப்புச் செய்து, வாழ்க்கையைச் சுவையுடையதாக்கினார்கள். இந்தச் சூழ்நிலையில் ஐயரவர்கள் வளர்ந்து வந்தார்கள். தந்தையாரிடமும் சில திண்ணைப் பள்ளிக் கூடத்து ஆசிரியர்களிடமும் இப்பேரறிஞர் இளமையில் கல்வி பயின்றார். அக்காலத்தில் சில நூல்களையே கற்றிருந்தாலும், அவற்றைத் திருத்தமாகப் பயின்று மற்றவர்களுக்கும் தெளிவாகப் பாடம் சொல்லும் சிறிய புலவர்கள் அங்கங்கே இருந்தார்கள்.

அத்தகையவர்களாகிய அரியலூர்ச் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் முதலியவர்களிடம் ஐயரவர்கள் சில நூல்களைக் கற்றார்கள். ஐயரவர்களுடைய தந்தையாருக்குத் தம் குமாரரைப் பெரிய சங்கீத வித்துவானாக ஆக்க வேண்டுமென்ற ஆசையே முதலில் எழுந்தது. ஆனால் இவர்களுக்குத் தமிழில் உண்டான பெரும் பசியைக் கண்ட போது அந்தத் துறையில் இவர்களை ஈடுபடுத்துவதுதான் தம்முடைய கடமை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் எங்கெங்கே தமிழ் நூல்களைப் பாடம் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்களோ, அந்த அந்த ஊர்களுக்கெல்லாம் குடியேறித் தம்முடைய குமாரர் தமிழ்க் கல்வி பெறும்படி செய்து வந்தார். அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங் கவிஞராகவும் சிறந்த புலவராகவும் திகழ்ந்த மாகவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. அவர் பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவருகிறார் என்ற செய்தி ஐயரவர்களின் தந்தையார் காதில் விழுந்தது. "நம் பிள்ளையையும் அந்த மகாவித்துவானிடம் சேர்த்து விட வேண்டும்" என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று.

1870-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐயரவர்கள் வாழ்க்கையின் இரண்டாம் பகுதி தொடங்கியது. மாயூரத்தில் இருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் இவர்கள் மாணாக்கராகச் சேர்ந்தார்கள். அதுமுதல் அந்தத் தமிழ்க் கடலின் மறைவு வரையில் (1-2-1876) உடனிருந்து பலவகையான தமிழ் நூல்களைக் கற்றார்கள். அப்புலவர்பிரான் அவ்வப்போது இயற்றிவந்த நூல்களை எழுதுவதும் திருவாவடுதுறை மடத்தின் ஆதீனகர்த்தர்களாக இருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் பழகுவதும், அந்த மடத்துக்கு வரும் தமிழ்ப் புலவர்களிடத்திலும் வடமொழி வாணரிடத்திலும் சங்கீத வித்துவான்களிடத்திலும் நெருங்கிப் பழகுவதும் போன்ற செயல்களால் இவர்களுக்கிடைத்த அநுபவம் வேறு யாருக்கும் கிடைத்தற்கு அரிது. அத்தகைய அநுபவத்தினால் ஐயரவர்கள் பெற்ற பயன் மிக அதிகம். எந்தப் பொருளானாலும், எத்தகைய மனிதரானாலும், எந்த விதமான நிகழ்ச்சியானாலும் கூர்ந்து உணரும் இயல்பு ஐயரவர்களிடம் சிறந்திருந்தது.

அதனால் அக்காலத்தில் அவர்கள் கண்டவையும் கேட்டவையும் அப்படியப்படியே இவர்களுடைய இளநெஞ்சில் நன்றாகப் பதிந்தன. பேரிய ஆதீனத்தின் தொடர்பால் பலவகை மக்களின் பழக்கம் இவர்களுக்கு ஏற்பட்டது. பெரும்புலவருடைய தொடர்பால் பல நூல்களில் அறிவு உண்டாயிற்று. பல கலைஞருடைய நட்பினால் பல துறையிலும் அறிவு சிறந்தது. வெவ்வேறு ஊர்களுக்குத் தம்முடைய ஆசிரியருடன் செல்ல வேண்டியிருந்தமையால் பல தலங்களைப்பற்றிய செய்திகளும் அங்கங்குள்ள பெரிய மனிதர்களின் பழக்கமும் ஐயரவர்களுக்குக் கிடைத்தன.

பிள்ளையவர்கள் மறைவுக்குப்பின்பு திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு ஐயரவர்களுக்குப் பின்னும் இறுகலாக அமைந்தது. அதற்கு முன் பிள்ளையவர்கள் மூலமாக ஆதீனத்தின் தொடர்பு இருந்துவந்தது. அதற்குப் பின் ஆதினகர்த்தராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடமே பாடம் கேட்கப் புகுந்தார்கள் ஐயரவர்கள். அதோடு மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் பணியையும் மேற்கொண்டார்கள். இதனால் இவர்களுடைய தமிழறிவு உரம் பெற்று வந்தது. அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் காலேஜில் தியாகராச செட்டியார் என்ற பெரும்புலவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் படித்தவர். அவர் ஓய்வு பெறவேண்டிய காலம் வந்தபோது அவர் தம்முடைய இடத்தில் ஐயரவர்களை நியமிக்கும்படி செய்தார். 1880-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி முதல் ஐயரவர்கள் கல்லூரித் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார்கள்.

நிறைந்த தமிழ்ப் புலமை, எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல், இசைப்பயிற்சி, அன்பு முதலிய இயல்புகளை இவர்கள் சிறப்பாகப் பெற்றிருந்தமையால் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளத்தை எளிதில் கவர்ந்தார்கள். ஆங்கில மோகம் உச்சநிலையில் இருந்த காலம் அது. ஆங்கிலமும் பிறபாடங்களும் கற்பிக்கும் பேராசிரியர்களிடம் மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல மதிப்பு இருந்து வந்தது. இங்கிலீஷ்காரர்கள் சிலர் அந்தப் பாடங்களைக் கற்பித்து வந்தார்கள். அதனாலும் அவற்றிற்கும் அவற்றைக் கற்பிப்பவர்களுக்கும் மதிப்பு உயர்ந்திருந்தது. தமிழாசிரியர்களுக்கு அத்தகைய மதிப்பு இல்லை. அவர்களுக்குக் கிடைத்த ஊதியமும் மிகக் குறைவு. கல்லூரிச் சேவகனுக்கு அடுத்தபடி சம்பளம் வாங்கினவர் தமிழாசிரியரே.

இத்தகைய நிலையில் ஐயரவர்கள் மாணாக்கர்களின் உள்ளத்தைப் பிணித்ததோடு மற்ற ஆசிரியர்களுக்குச் சமமான மதிப்பையும் பெற்றார்கள். ஆங்கிலம் சிறிதும் அறியாவிட்டாலும், ஆண்டில் இளைஞராக இருந்தாலும், அவர்களுடைய புலமையும், பண்பும் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் பிறரும் இவர்களைச் சிறந்தவர்களாக மதிப்பதற்குரிய காரணங்களாக இருந்தன. காலேஜில் ஆசிரியராகப் புகுந்த ஆண்டிலேயே (அக்டோபர் மாதம்) ஐயரவர்களுக்கும் கும்பகோணத்தில் ஜில்லா முன்சீபாக இருந்த சேலம் இராமசுவாமி முதலியாரவர்களுக்கும் பழக்கம் உண்டாயிற்று.

அந்தப் பழக்கமே ஐயரவர்கள் பிறந்ததன் பயனைத் தமிழுலகத்துக்குக் கிடைக்கும்படி செய்யக் காரணமாயிற்று. முதலியார் சிந்தாமணியைப் பாடம் சொல்லும்படி ஐயரவர்களிடம் கேட்டுக்கொண்டார். அதனை முன்பு பாடம் கேட்டறியாதவர்கள் இவர்கள்ளூ அந்த நூலைப் பார்த்தது கூட இல்லை. ஆயினும் தைரியமாகப் பாடம் சொல்லப் புகுந்தார்கள். ஏட்டுச் சுவடியை வைத்துக் கொண்டு பாடம் சொன்னார்கள்.

சிந்தாமணியில் ஆழ்ந்தார்கள். தாம் அதுகாறும் படித்த நூல் குவியல்களால் அறியவொண்ணாத பலவற்றை அதில் கண்டார்கள். அது ஜைனசமய நூலாதலால் பல செய்திகள் ஐயரவர்களுக்கு விளங்கவில்லை. அவற்றை யெல்லாம் ஜைனர்களிடம் சென்று கேட்டு அறிந்தார்கள். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையைப் படித்தார்கள். அவருடைய உரைப்போக்கும் அதனிடையே அவர் காட்டியிருக்கும் மேற்கோள்களும் ஏதோ ஒரு புதிய பிரபஞ்சத்தையே அவர்கள் அகக்கண்முன் தோற்றுவித்தன. தமிழ் மக்கள் செய்த தவத்தின் பயனாக இவர்களுக்குச் சிந்தாமணியைப் பதிப்பிக்கவேண்டும். என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆராய்ச்சி நடைபெற்றது. மேட்டுமடையில் நீர் பாய்வதுபோன்ற வேதனையைப் பல சமயத்தில் அவர்கள் அடைந்தார்கள். ஆனாலும் விடாப்பிடியாக முயன்று, 1887-ஆம் ஆண்டு சிந்தாமணியை வெளியிட்டார்கள். அந்தப் பதிப்பைக் கண்ட தமிழ் நாட்டினர் மிகவும் ஆனந்தமடைந்து களிக்கூத்தாடினர். அது முதல் ஐயரவர்கள் பழைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

சிந்தாமணிக்குப்பின் பத்துப்பாட்டு வெளியாயிற்று. அதன்பின் சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை என்பவை வந்தன. புறநானூறு கண்ட தமிழுலகம் ஏதோ ஒரு

புதிய கண்டத்தைக்கண்டு பிடித்ததுபோன்ற மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடைந்தது. ஆராய்ச்சிக்காரர்களுடைய மூளை வேலை செய்யத் தொடங்கியது. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப்பற்றிய ஆராய்ச்சிகளை அறிஞர்கள் எழுதத் தொடங்கினார்கள். இவ்வாறு ஐயரவர்கள் பழந்தமிழ் நூல்களை அச்சிடும் தொண்டை விடாது செய்து வந்தார்கள். ஐம்பெருங் காப்பியங்கள் என்று சேர்த்துச் சொல்லும் நூல்களில் கிடைத்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்ற மூன்றையும் அவர்கள் வெளியிட்டார்கள். பத்துப்பாட்டை அவர்களுடைய உழைப்பால் தமிழுலகம் காண முடிந்தது. எட்டுத்தொகைகளில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன மலர்ந்தன.

பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை என்னும் இலக்கிய இலக்கணங்கள் வெளிவந்தன. இவற்றையன்றித் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் திருக்காளத்திப் புராணம் முதலிய பல புராணங்களும், கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், இரட்டை மணிமாலை, அந்தாதி, குறவஞ்சி முதலிய பலவகைப் பிரபந்தங்களும் குறிப்புரைகளுடன் வெளிவந்தன. தம்முடைய ஆசிரியர் இயற்றிய பிரபந்தங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார்கள்.

ஏட்டில் இருக்கிறதை அப்படியே பெயர்த்துக் காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று, ஐயரவர்கள் செய்தது. புத்தகப் பதிப்பு அவ்வளவு எளிதாக இருந்தால் எத்தனையோ அறிஞர்கள் அதை முன்பே செய்து புகழ் பெற்றிருப்பார்கள். ஏட்டில் உள்ள பாடம் பிழைபட்டிருக்கும்ளூ பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்க முடியாத அளவுக்குச் சிதைவு உண்டாகியிருக்கும். அவற்றையெல்லாம் பல நூல் அறிவினாலும் இயற்கையான அறிவுத்திறமையாலும் விடாமுயற்சியினாலும் திருவருளின் துணையாலும் ஆராய்ந்து செப்பம் செய்யவேண்டும். ஐயரவர்கள் திக்குத் தெரியாத காட்டில் நுழைந்துதாமே வழியமைத்துக் காடு நாடாக்கிய பெருந்தொண்டர். அவர்களுடையபதிப்பு என்றாலே தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளரும் போற்றிப்பாதுகாக்கிறார்கள். ஒவ்வொரு நூலிலும் முன்னே உள்ள முகவுரையும், ஆசிரியர் வரலாறும், நூலைப்பற்றிய குறிப்புக்களும், பிற செய்திகளும் மிகமிக அற்புதமானவை. விளக்கங்களும் பல நூல்களிலிருந்து எடுத்த ஒப்புமைப் பகுதிகளும் காட்சி தரும். அவை ஐயரவர்களுடைய பரந்த நூற்புலமைக்குச் சான்றாக விளங்கும். இறுதியில் நூலில் கண்ட சொற்களுக்கும் பொருள்களுக்கும் அகராதி இருக்கும். ஆசிரியரின் உதவியின்றியே பயிலும் வகையில் அமைந்தவை ஐயரவர்களின் பதிப்புக்கள்.

இந்த முறையில் கண்ணாடிபோல் மேல் நாட்டாரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலமே அறியாத ஒரு தமிழ்ப் பண்டிதர் புதிதாக இத்துறையில் புகுந்து சாதித்தார் என்று சொன்னால் அது அதிசயமான செயல் அல்லவா?

முன்னுரை முதலியவற்றை எழுதி உரைநடை எழுதும் ஆற்றலைச் சிறிய அளவிலே வெளிப்படுத்திய ஐயரவர்கள், தாம் பதிப்பித்த நூல்களின் அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச் சுருக்கம் என்பவற்றை எழுதியளித்தார்கள்.

கும்பகோணம் கல்லூரியிலிருந்து சென்னைக் கல்லூரிக்குத் தமிழாசிரியராக 1903-ஆம் ஆண்டு வந்தார்கள். அப்பால் அந்தப் பதவியிலிருந்து 1919-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்கள். கல்லூரி ஆசிரியர் என்ற அலுவலிலிருந்து ஓய்வு பெற்றார்களேயன்றி மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியத் தொண்டிலிருந்தோ, நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியத் தொண்டிலிருந்தோ, அவர்கள் ஓய்வு பெறவில்லை.

உண்மையில் அவ்வேலைகள் பின்னும் பன்மடங்கு பெருகின. கல்லூரியில் வேலையாக இருந்தபோதே வீட்டில் தனியே இவர்களிடம் பலர் பாடம் கேட்டார்கள். மகாபாரதப் பதிப்பாசிரியராகிய மகாமகோபாத்தியாய ம.வீ. இராமாநுஜாசாரியார், திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபராக விளங்கிய சொக்கலிங்கத் தம்பிரான் முதலிய பலர் இவ்வகையில் பாடம் கேட்டவர்கள். இவர்களிடம் இருந்து ஆராய்ச்சி முறையைக் கற்றுக்

கொண்டு தாமே நூல்களை வெளியிட்டவர்கள் சிலர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ.வை. அனந்தராமையர் முதலியவர்கள் இத்தகைய வரிசையில் இருந்தவர்கள். இவர்கள் ஏடு தேடி ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்ட நூல்களைப் படித்து அந்த முறையையும் அறிந்த சில புலவர்கள் பழந்தமிழ் நூல்களைத் தாமே வெளியிடும் முயற்சியில்ஈடுபட்டார்கள்.

1924 முதல் 1927 வரையில் ஐயரவர்கள் ராஜா அண்ணாமலை செட்டியாரவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதோடு தம்முடைய அனுபவங்களை எளிய இனிய உரைநடையில் எழுதத் தொடங்கினார்கள். இந்தத் துறையில் ஐயரவர்கள் தொண்டாற்றப் புகுந்தபோது பெரியவர்களும், சிறுவர்களும், ஆடவரும், பெண்டிரும், புலவர்களும் பிறரும் ஒருங்கே இவர்கள் எழுத்தைப் படித்து இன்புற்றார்கள். பத்திரிகைகளில் இவர்கள் கட்டுரைகள் வெளியாயின. மாதந்தோறும் முதலில் ஐயரவர்களின் கட்டுரை ஒன்றைத் தாங்கிச் சிறப்படைந்தது கலைமகள். தமிழ் நாட்டுப்

பத்திரிகைகளின் மலர்கள் ஐயரவர்களின் கட்டுரைகளோடு மலர்ந்தன. தம்முடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றை வெளியிட வேண்டும் என்னும் நெடு நாள் ஆர்வத்தால் அவர்கள் பல செய்திகளைத் தொகுத்து வைத்திருந்தார்கள். அவற்றைக் கொண்டு மிகவிரிவாக அச்சரித்திரத்தை இரண்டு பாகங்களாக எழுதி முடித்தார்கள். தம்முடைய வாழ்க்கையில் எந்தப் பெரியார்களோடு பழக நேர்ந்ததோ அவர்களைப் பற்றிய வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் சுவை ததும்ப எழுதினார்கள். தியாகராச செட்டியார் சரித்திரம் கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரம், மகா வைத்தியநாதையர் சரித்திரம், கனம் கிருஷ்ணையர் வரலாறு என்பன இவர்களுடைய அன்பையும் எழுதும் ஆற்றலையும் நன்றியறிவையும் விளக்குகின்றன. சிலருடைய வரலாற்றைச் சுருக்கமாக எழுதினார்கள்ஞு இந்த வகையில் பூண்டி அரங்கநாத முதலியார், மணி ஐயர், வி.கிருஷ்ணசாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்திரிகள் முதலியவர்களைப் பற்றிய கட்டுரைகள் வெளியாயின.

இவர்களுடைய பெருமையைத் தமிழுலகம், மெல்ல மெல்ல உணரலாயிற்று. அரசாங்கத்தார், 1906-ஆம் ஆண்டு "மகாமகோபாத்தியாயர்" என்ற பட்டத்தை அளித்தார்கள். 1917-ஆம் ஆண்டு பாரத தர்ம மண்டலத்தார், "திராவிட வித்தியா பூஷணம்" என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். 1925-ஆம் ஆண்டு காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள், "தக்ஷிணாத்திய கலா நிதி" என்ற பட்டத்தை அருளினார்கள். இவர்கள், சென்னை, மைசூர், ஆந்திரா, காசி முதலிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் பல வகையில் கலந்து தொண்டாற்றினார்கள். 1932-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் "டாக்டர்" பட்டம் அளித்தார்கள்.

1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி ஐயரவர்கள் 80- ஆண்டுகள் நிறைந்து விளங்கினார்கள். அவர்களுடைய சதாபிஷேக விழாவைத் தமிழுலகம் முழுவதும் கொண்டாடியது. சென்னையில் பல்கலைக் கழக மண்டபத்தில் இவ்விழா மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது. பழுத்த பருவத்திலும் ஐயரவர்கள் தமிழ்த் தொண்டு வீறு கொண்டு நடைபெற்றது. குறுந்தொகையை விரிவான உரையுடன் பதிப்பித்தார்கள். சிவக்கொழுந்து தேசிகர், குமரகுருபரர் என்னும் புலவர்களின் பிரபந்தத் திரட்டுகள் குறிப்புடன் வெளியாயின. தமிழன்பர்களின் விருப்பப்படி ஆனந்த விகடனில் வாரந்தோறும் தம்முடைய வரலாற்றை "என் சரித்திரம்" என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார்கள். 1940-ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கிய அது 122 அத்தியாயங்களோடு சுயசரித்திரமாக வரும் நிலை பெற்றது.

1942-ஆம் ஆண்டு உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது ஐயரவர்கள் தம் குடும்பத்துடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார்கள். ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி அந்தத்தலத்தில்

தமிழ்த் தாயின் தவப்புதல்வராகிய ஐயரவர்கள், தாம் பிறந்த காலத்தில் கண்ட நிலையை மாற்றித் தமிழ் மக்களைப் பழந்தமிழ்ச் செல்வத்துக்கு உரிமையுடையவர்களாக ஆக்கி, ஆசி கூறிவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார்கள். 1948 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆறாம் தேதி சென்னை அரசினர் கல்லூரியில் ஐயரவர்களுடைய முழு உருவச் சிலையொன்றை நிறுவினார்கள். தமிழ்க் கடலின் விரிவை மீட்டும் தமிழுலகத்துக்குக் காட்டிய ஐயரவர்களின் திருவுருவம் பெருங் கடலை நோக்கி நிற்கும் கோலத்தை இன்றும் கண்டு மகிழலாம்.

1955-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி ஐயரவர்கள் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடைந்தன. அதனை, அவர்கள் பெயர் கொண்ட நூல் நிலையம் மிகச் சிறப்பாகக் கொண்டாடிற்று. ஐயரவர்களுடைய குணநலங்கள் பல சிறந்த பண்பு உள்ளவர்கள் இவர்கள். இணையற்ற ஆசிரியர். பலவகை மாணாக்கர்களுடைய உள்ளம் அறிந்து தக்கவண்ணம் பாடம் சொல்வதில் வல்லவர்கள். புலமைப் பெருங்கடல், கவிஞர், சிறந்த எழுத்தாளர். முன்னும் பின்னும் கண்டறியாத அற்புதப் பதிப்பாசிரியர். சுப்பிரமணிய பாரதியார் தாம் பாடிய பாட்டில் ***"கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப் புலவன்"*** *என்று ஐயரவர்களைச் சிறப்பிக்கிறார்.*

"பொதியமலைப் பிறந்த தமிழ் வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே"



என்று அவர் பாடியிருப்பதற்குமேல் நாம் என்ன சொல்ல முடியும்?

(😊)(😊)(😊)(😊)(😊)

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின்

வாழ்க்கை நிகழ்ச்சிகள்

(😊(😊(😉)(😉)(😉)

19 – 2 – 1855 திங்கட்கிழமை,தஞ்சை மாவட்டத்திலுள்ள சூரிய மூலை என்னும் ஊரில் பிறந்தார்.


1861 அரியிலூர் சடகோப ஐயங்காரிடம் பாடங் கேட்கத் தொடங்கியது.

1862 உபநயனம் – பெயர்: வேங்கடராமன்.

16 – 6 – 1868 திருமணம் – மனைவி மதுராம்பாள்.

1869 செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாருப்பருங்கலக்காரிகை பாடம் கேட்டது.

1871 மாயூரத்தில் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் மாணவனாகச் சேர்ந்தது. ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரைச் சந்தித்ததுஞ ஆசிரியர் இட்ட பெயர் சாமிநாதன். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்,வித்துவான் தியாகராச செட்டியார் இவர்களுடைய தொடர்பும்,ஆதரவும்.



1872 ஆசிரியருடன் திருவாவடுதுறை சென்றது.

1873 உத்தமதானபுரத்தில் கவி இயற்றியது. ஆவுடையார் கோயிலில் புராணப் பிரசங்கம்

1874 செங்கணத்தில் முதன்முதல் நூல் இயற்ற ஆரம்பித்தல் – நூலின் பெயர் ''நீலி இரட்டை மணிமாலை'. திருவிளையாடற் புராணப் பிரசங்கம்.

31 – 1 – 1876 ஆசிரியர் மறைவு. வேதநாயகம் பிள்ளை சந்திப்பு. திருவாவடுதுறை மடத்தில் ஆசிரியராகவும், மாணாக்கராகவும் பணியாற்றல்.

1877 ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை ஐயரவர்களின் தந்தையார் கண்டு உரையாடியது. ஐயரவர்கள் வசிப்பதற்குத் தேசிகர் இல்லம் அமைத்துக் கொடுத்தது. மாத வேதனம் அளித்தமை.

1878 மதுரை,திருநெல்வேலிப் பயணம் ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்களுக்குச் சன்மானம் அளித்தது.

1880 வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் விடா முயற்சியால், கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக வேலை பெற்றது. சேலம் இராமசாமி முதலியார் சந்திப்பு. சீவகசிந்தாமணி பதிப்பு ஆரம்பம், ஜைன நண்பர்கள் தொடர்பு.

1883 திருக்குடந்தைப் புராணப் பதிப்பு,

1884 பரம்பரைச் சொத்தாகிய நிலத்தை ஒற்றியிலிருந்து மீட்டது. முதற் தடவை சென்னை வருகை.

1885 மகாமகம். திருவாவடுதுறை மகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்கள் தந்தையாருக்கும் ஐயரவர்களுக்கும் பீதாம்பரம் அளித்ததுடன் ஐயரவர்கள் குமாரர் கலியாணசுந்தரையருக்கும் சந்திரஹாரம் என்னும் பொன்னாபரணம் அளித்தது.

1887 சீவகசிந்தாமணி பதிப்பித்து முடிந்து, தமிழுலகில் உலாவ ஆரம்பித்தது.

1888 திருவாவடுதுறை மகாசந்நிதானம் பரிபூரணம் எய்தியது. தியாகராச செட்டியார் மறைவு. நெல்லை மாவட்டத்தில் ஏடுதேடத் தொடங்கியது.

1889 பத்துப்பாட்டு அச்சிட்டு நிறைவேறியது. சிலப்பதிகாரப் பதிப்பு ஆரம்பம். சென்னைக்கு வந்து பூண்டி

அரங்கநாத முதலியார் இயற்றிய “கச்சிக்கலம்பகம்’ அரங்கேற்றத்தில் கலந்து கொண்டது.

1891 சீவகசிந்தாமணி புத்தகத்தைக் கண்டு பாரிஸ் பேராசிரியர் ஜூலியோன் வின்ஸோன் அவர்கள் பாராட்டி எழுதியது. குமாரனுக்கு உபநயனம்.

1892 சேலம் இராமசாமி முதலியார் மறைவு. சிலப்பதிகாரம் பதிப்பித்து முடிந்தது. பாஸ்கர சேதுபதி அவர்களின் அழைப்பின் பேரில் இராமநாதபுரம் சென்று நவராத்திரி விழாவில் கலந்து கொண்டது.

7 – 10 – 1893 தந்தையார் மறைவு

10 – 12 – 1893 பூண்டி அரங்கநாத முதலியார் மறைவு

27 – 1 – 1893 மகாவைத்தியநாதையர் நிரியாணம்

1894 புறநானூறு பதிப்பு. பாண்டித்துரைத் தேவர் சந்திப்பு. கும்பகோணத்தில் வீடு வாங்கியது. புறப்பொருள் வெண்பாமாலை பதிப்பு.

1895 ஜி. யூ. போப் அவர்களுடன் கடிதத் தொடர்பு

1898 மணிமேகலை பதிப்பு நிறைவேறியது.

1903 சென்னை மாநிலக் கல்லூரிக்குக் குடந்தையிலிருந்து மாற்றப் பெற்றது.

1 – 1 – 1906 “மகாமகோபாத்தியாய’’ பட்டம் பெற்றது. கல்வி இலாகா ரூ. 1000 வழங்கியது. சென்னை கவர்னர் லார்டு கார்மிகேல் பிரபுவோடு சம்பாஷித்துப் பாராட்டப் பெற்றது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணப் பதிப்பு நிறைவேறியது.

1909 சென்னையில் வீடு வாங்கி “தியாகராச விலாசம்’ என்று பெயரிட்டது.

12 – 12 – 1911 ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவினையொட்டி ரூ. 100.OO காரனேஷன் பென்ஷன் ஆண்டுக்கொருமுறை வழங்கப் பெற்றது.

24 – 1 – 1912 கவர்னர் துரை தமிழ் வகுப்பிற்கு வந்து 1 மணி நேரம் இருந்தது. தமிழ்ச் சுவடிகளைக் காட்டி வாழ்த்துப்பா அளித்தது.

1916 மைசூர் யூனிவர்ஸிடியில் திராவிடியன் போர்டில் மெம்பராக நியமனம்.

31 – 1 – 1917 காசி பாரத தர்ம மகாமண்டலத்தாரால் “திராவிட வித்யா பூஷணம்’’ பட்டம் பெற்றது.

1 – 3 – 1917 காசி சர்வகலாசாலையில் போர்டு மெம்பர் பரீக்ஷகர் நியமனம்.

8 – 5 – 1917 மனைவியார் வியோகம்.

1 – 4 – 1919 வேலையிலிருந்து ஓய்வு பெற்றது. (39 வருட உழைப்புக்குப் பின்) . டாக்டர் ரவீந்திரநாத தாகூர் வீட்டிற்கு வந்து அளவளாவியது.

13 – 1 – 1922 மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தபோது “கில்லத்து”ப் பெற்றது.

12 – 2 – 1924 பெருங்கதை பதிப்புப் பூர்த்தி

1924 – 27 சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரிப் பிரின்ஸ்பாலாகப் பதவி ஏற்றுப் பல நன்மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லியது.

1925 காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களால் “தக்ஷிணாத்ய கலாநிதி’’ என்ற பட்டம் சூட்டப் பெற்றது.

1927 சென்னை, சர்வகலாசாலையின் ஆதரவில் “சங்க காலத்தமிழும் பிற்காலத் தமிழும் என்ற தலைப்பில் 10 தினங்கள் சொற்பொழிவு ஆற்றியது.

21 – 3 – 1932 சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் “டாக்டர்’’ பட்டம் அளிக்கப்பெற்றது.

1932 தமிழன்பர் மகாநாட்டு வரவேற்புத் தலைவராக இருந்தது.

4 – 3 – 1933 ஆந்திர யூனிவர்ஸிடி தமிழ் போர்டில் மெம்பர் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை எழுதி வெளியிட்டது.

1935 எண்பதாவது ஆண்டு நிறைவு விழா நாடு முழுவதும் கொண்டாடப் பெற்றமை.

1937 குறுந்தொகைப் பதிப்பு.

16 – 1 – 1937 குடந்தை,கோபாலராவ் நூல் நிலையத்தில் ஐயரவர்கள் படத் திறப்பு

6 – 2 – 1937 சநாதன தர்ம மகா நாட்டில் கலந்து கொண்டது.

27 – 3 – 1937 பாரதீய ஸாஹித்ய பரிஷத் – மகாத்மா காந்தி தலைமை வரவேற்புரை நிகழ்த்தியது. மகாத்மா காந்தியுடன் உரையாடல்.

11 – 1 – 1938 சென்னையில் வைஸ்ராய் நடத்திய விருந்தில் கலந்து கொண்டது.

15 – 3 – 1938 ஆக்ஸ்போர்டு ஸம்ஸ்கிருத ஆசிரியர் பிரசங்கத்திற்குச் சென்றது. மணிமேகலையைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள்.

1 – 8 – 1939 கொப்பனாப்பட்டிக் கல்லூரித் திறப்பு விழாவில் முன்னுரை

25 – 11 – 1939 செவ்வைச்சூடுவார் பாகவதம் குறிப்புரை எழுத ஆரம்பித்தது.

28 – 11 – 1939 டி. கே. ஸி. அவர்களும்,கல்கி அவர்களும் வீட்டிற்கு வந்து உறவாடினர்.

7 – 12 – 1939 ஹிந்து பத்திரிகை வைரவிழா வாழ்த்து

15 – 12 – 1939 கல்கி அவர்களிடம் ஆனந்த விகடன் பத்திரிகையில் வெளியிட ‘‘சுயசரிதம்’’ முதல் அத்தியாயம் எழுதிக் கொடுத்தது.

12 – 6 – 1940 கூத்தனூர் கலைமகள் விஷயமாகப் பாடல்கள் எழுதி அனுப்பினமை.

5 – 8 – 1941 தமிழிசையைப் பற்றி டைகர் வரதாசாரியாருக்கு அபிப்பிராயத்தை எழுதியனுப்பியது.

29 – 9 – 1941 திருச்சி ரேடியோவில் ‘‘எதுதமிழ்’’ என்பது பற்றி ஒரு பேச்சு.

7 – 12 – 1941 கனகாபிஷேகம் – கொள்ளுப் பேரனால்

13 – 1 – 1942 இரவு மெத்தைப் படியில் தவறி விழுந்தது.

29 – 1 – 1942 டாக்டர் திருமூர்த்தி அவர்கள் வந்து பார்த்து,அவரது ஆலோசனையின் படி சிவராம கிருஷ்ணையரைக் கொண்டு நிழற்படம் எடுக்கப்பட்டது.

12 – 2 – 1942 திருக்கழுக்குன்றம் சென்றது.

27 – 4 – 1942 மாலை குளிர் ஜுரம் கண்டது.

28 – 4 – 1942 மாலை 3 – 35க்கு இறைவனடி சேர்ந்தது.

5 – 7 – 1943 ‘‘டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்’’ தொடக்க விழா. திருமதி. ருக்மிணி அருண்டேல் அவர்கள் ஆதரவில்

1948 உருவச்சிலை. மாநிலக் கல்லூரியில் திறக்க பெற்றது.

1955 நூற்றாண்டுவிழா.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

The Life of U. V. Swaminatha Iyer

Tamil Literature, Researcher

Parents: Venkatasubramanian(Musician), Saraswathi ammal.

19 February 1855, Sooriyamoolai, Thanjavur, Tamilnadu.



Learned the Tamil literature and grammar as a devoted student from Mahavidvan Meenakshi Sundaram Pillai.

(age 14)
He was married at the age of 14.

16 February 1880
Joined as the head of the Tamil Department at the Government Arts College.

Published more than 100 books (minor poems, lyrics, puranas and devotional works).

1919
Retired from active teaching.

1924 - 1927
Worked as the Principal of the Meenakshi Tamil College in Annamalai University, Chidambaram.

1926
Met the poet Rabindranath Tagore.

1940-1942
Published his autobiography "En Saritham" through Ananda Vikatan (magazine).

- He was called as Tamil Thatha (Grandfather of Tamil).
- 1906 - Got The honorary doctoral degree (D.Litt.) by University of Madras.
- 18 February 2006 - A special postage stamp was released after him.

1887 - Seevagasinthamani.
1889 - Pattup pāṭṭu mūlamum uraiyum
1897 - Purananuru
1898 - Manimeagalai
1905 - Tiruvarurula

1906 - Mahamahopathiyaya Award – "Greatest of Greatest Teachers".
1925 - Dakshinathya Kalanidhi.
1932 - An honorary PhD Award from Madras University.

28 April 1942
Died due to illness in Tirukalukundram, Madras Presidency.

https://wikivisually.com/wiki/U._V._Swaminatha_Iyer
https://www.quora.com/What-is-your-review-of-U-V-Swaminatha-Iyer-Tamil-Thatha



Please SCAN to read

"என் சரித்திரம்"





9 789388 568166



என் சரித்திரம்

மஹாமஹோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

சிவமயம்

என் சரித்திரம்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

ஐயரவர்கள் குமாரர்

S. கலியாணசுந்தரையரால்

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

விரோதி ௵ பங்குனி ௴

உரிமைப் பதிவு] 1950 [விலை ரூ. 8

உ

சிவமயம்

முகவுரை

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

"திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீமிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமரரேறே."

திருச்சிற்றம்பலம்

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டபிறகு தமிழன்பர் பலர் பாராட்டி வரும்போது எந்தையாரவர்கள் தம் ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை அடிக்கடி நினைந்து, தம்மிடம் வருவோர்களிடம் பிள்ளையவர்களுடைய கல்விப் பெருமை, போதனா சக்தி, செய்யுளியற்றுவதில் இருந்த ஒப்புயர்வற்ற திறமை முதலியவற்றைக் கூறித் தமக்கு ஏற்பட்டு வரும் பெருமைக்கெல்லாம் அவர்களிடம் முறையாகப் பல வருடம் பாடங்கேட்டு இடைவிடாது பழகியதே காரணம் என்று சொல்லுவார்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் தாம் தெரிந்துகொண்ட சில அரிய செய்திகளைச் சொல்லுவார். கேட்பவர்கள் திருப்தியுற்றுச் செல்லுவார்கள். இப்படி

யிருக்கையில் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு வெளி வந்தால் தமிழ் நாட்டினர் அறிந்து இன்புறுவதற்கு அனு கூலமாயிருக்குமென்று தந்தையார் எண்ணினர். கும்ப கோணத்தில் இரண்டு முறை பெரிய சபை கூட்டி, காலேஜ் பிரின்ஸிபாலாக இருந்த ஸ்ரீ J. M. ஹென்ஸ்மான் முதலிய வர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீ பிள்ளையவர்களைப் பற்றி அவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். கேட்ட அன்பர்கள் பலர் பிள்ளையவர்களுடைய பெருமையை வரவர அதிகமாகப் பாராட்டினார்கள். அதுமுதல் எந்தை யாருக்குத் தம் ஆசிரியர் அவர்களுடைய சரித்திரத்தை விரிவாக எழுதி அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற வேகம் உண்டாயிற்று. குடந்தையிலிருந்து சென்னைக்கு வந்தபின்பு ஒழிந்த காலங்களில் தம் கருத்தை அவ்வேலை யிலே செலுத்திப் பலவகையான குறிப்புக்களை எழுதிச் சேர்த்தார்கள். இதன்பயனாக ஆசிரியரவர்களது சரித் திரத்தை இரண்டு பாகங்களாக 1933-34-ஆம் ஆண்டு களில் பதிப்பித்து வெளியிட்டார்கள். அக்காலத்தில் தமிழ் ஆசிரியர்களைப் பற்றிய வரலாறுகளே பெரும்பாலும் காணப்படாமையால் பிள்ளையவர்களுடைய சரித்திரத் திற்கு மிக்க மதிப்பு ஏற்பட்டது. பிள்ளையவர்கள் சரித்திரத் தால் பல அருமையான நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொண்ட தமிழ் அன்பர்கள் பலருடைய பாராட்டு எந்தந்தை யாருக்குக் கிடைத்தது. சரித்திரம் வெளிவந்த பின் பல பத்திரிகாசிரியர்களின் வேண்டுகோளின்படி சிறு கட்டுரை கள் எந்தையாரவர்களால் தமிழ் மாதப் பத்திரிகைகளிலும் விசேஷ மலர்களிலும் எழுதப்பெற்று வந்தன. அவற்றின் வசனநடைக்கு மதிப்பு வரவர அதிகமாயிற்று.

1935-ம் வருஷம் மார்ச்சு மாதம் 6-ம்வ எந்தையாரவர் களின் சதாபிஷேகம் (எண்பதாம் ஆண்டு பூர்த்தி விழா) நடைபெற்றது. அன்று ராவ்பகதூர் K. V. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் முதலிய அன்பர்கள் சேர்ந்து ஸெனேட்

மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் ஒரு வாழ்த்துக் கூட்டம் நடத்தினார்கள். பிள்ளையவர்கள் சரித்திரத்தைப் படித்துப் பார்த்து இன்புற்ற ஒரு தமிழன்பர், "பிள்ளையவர்கள் சரித்திரமே இவ்வளவு ரசமாயிருக்கிறதே. ஐயரவர்கள் சரித்திரம் வெளிவந்தால் தமிழ் நாட்டினர்க்கு மிக்க பயன்படுமே" என்று தம் கருத்தை மட்டும் தெரிவித்துப் பெயரை வெளியிடாமல் ஐயரவர்கள் சுய சரித்திரப் பதிப்புக்காக ரூ. 501 அந்தச் சபையில் அளிக்கச் செய்தார்.

சதாபிஷேகம் ஆனபிறகு சுயசரிதம் எழுதவேண்டுமென்ற கருத்து எந்தையாரவர்களுக்கு ஏற்பட்டும் சர்வகலாசாலையார் விரும்பியபடி குறுந்தொகையைப் பதிப்பிக்க வேண்டுமென்ற வேகம் உண்டாகவே இடைவிடாது அவ்வேலையைக் கவனித்து வந்தார்.

ரஸிகமணி ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள், ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள் போன்ற அன்பர்கள் சந்தித்த காலங்களிலெல்லாம் சரித்திரம் எழுத வேண்டும் என்று தந்தையாருக்கு நினைவூட்டி வந்தனர். சரித்திரம் முழுவதையும் எழுதி முடித்து ஒரு புஸ்தகமாக வெளியிடலாம் என்று நினைத்தாலும் அவ்வாறு செய்வதில் அதிக நாட்களாகலாம். அதைக் காட்டிலும் ஆரம்பத்திலிருந்து வரலாறுகளைப் பத்திரிகை மூலமாக வெளியிட்டு வந்தால் படிப்பவர்களுக்கு அனுகூலமாக இருக்குமென்ற கருத்து ஏற்பட்டது. அப்பொழுது "ஆனந்தவிகடன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் ஸ்ரீ S. S. வாசன் அவர்களுடன் இரண்டொரு முறை வந்து எந்தையாரவர்களுடன் சம்பாஷித்து, சுயசரிதத்தை ஆனந்தவிகடனில் வாரந்தோறும் ஒவ்வோர் அத்தியாயமாக வெளியிடலாமென்று அதற்குரிய ஏற்பாட்டைச் செய்தனர். அவர்கள் விரும்பிய வண்ணமே, 1940-ஆம் ஆண்டு முதல் சரித்திரம் எழுதி வெளியிடுவதென்று நிச்சயமாயிற்று. அச்சமயம்

புத்தகப் பதிப்பு வேலைகளில் உடனிருந்து கவனித்து வந்த ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர் B. O. L. என் தந்தையாரவர்கள் அவ்வப்போது சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் கூற அவைகளை எழுதிவரலானார். முதல் அத்தியாயம் 6-1-1940 ல் ஆனந்தவிகடனில் வெளிவந்தது. ஆறு அத்தியாயங்கள் முதலில் ஆனந்தவிகடன் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப் பெற்றன. சில அன்பர்கள் விரும்பியபடி சரித்திர சம்பந்தமான படங்கள் அங்கங்கே அமைக்கப் பெற்றன. பிறகு அவ்வப்பொழுது அவ்வப்பகுதிக்குரிய விஷயங்கள் பத்திரிகாலயத்திற்கு எழுதி அனுப்பப் பெற்று வந்தன. அக்காலங்களில் உடனிருந்து ஸ்ரீ ஜகந்நாதையர் எந்தையாரவர்கள் விருப்பப்படி சொல்லியவற்றை எழுதித் தவறாது பத்திரிகையில் வெளிவருவதற்கு மிக்க உதவி புரிந்தார். சரித்திரம் வெளிவரவேண்டுமென்ற ஊக்கத்துடனிருந்து அதற்குரிய வேலைகளையும் எந்தையாருடன் இருந்து கவனித்து உதவியது மிகவும் பாராட்டற் குரியதாகும். அவ்வுதவியை என்றும் மறவேன்.

சரித்திரத்தில் படங்கள் வெளிவருவதன் பொருட்டு வெளியூர் அன்பர்கள் புகைப்படங்கள் எடுத்து எங்கள் விருப்பத்தின்படி அனுப்பி உதவினார்கள். இப்பொழுது துறைசை ஆதீன கர்த்தர்களாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் திருவாவடுதுறை, மாயூரம், திருவிடைமருதூர், திருப்பெருந்துறை இவைகள் சம்பந்தமான படங்களை அனுப்பச் செய்து உதவினார்கள்.

1940-ம் வருஷம் முதல் வாரந்தோறும் ஓர் அத்தியாயமாக 1942 மே மாதம் வரையில் 'சுயசரிதம்' ஆனந்தவிகடனில் வெளிவந்தது. என் தந்தையாரவர்கள் சரித்திரப் பகுதியை அவ்வப்பொழுதே எழுதிவரச் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டனராதலால் ஆனந்தவிகடனில் அவர்கள் காலஞ்சென்றபின்பு தொடர்ச்சியாகச் சரிதப் பகுதி வெளிவரவில்லை. சரித்திர சம்பந்தமான பலவகைக்

குறிப்புக்களை அவர்கள் தொகுத்து வைத்துள்ளார்கள். 122 அத்தியாயங்கள் வரை சுயசரிதமாக வந்த பகுதியே இப்பதிப்பில் வெளியிடப் பெற்றுள்ளது. தமிழன்பர்கள் அடிக்கடி சரித்திரப் பதிப்பைப்பற்றி நேரிலும் கடிதம் மூல மாகவும் வினவி வந்தனர். காகிதக் கட்டுப்பாடு முதலிய காரணங்களால் புத்தக வடிவத்தில் பதிப்பு வெளிவரத் தாமதமாயிற்று.

இப்பொழுது ஸ்ரீ காசிமடத்து அதிபர்களாக விளங்கும் அருங்கலை விநோதர்களும் பேரறச் செயல்கள் புரிந்து வருபவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் ஸ்வாமிகள் அவர்கள் ஐயரவர்கள் சரித்திரம் வெளிவர வேண்டுமென்று அடிக்கடி என்னை நினைவு படுத்தி வந்ததோடு நன்கொடையும் அளித்து உதவிஞர் கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுயசரிதத்தை ஆனந்தவிகடனில் பதிப்பிக்கச் செய் தும், புத்தக வடிவில் வெளிவருவதற்கு உடன்பட்டுப் படங் கள் ஸம்பந்தமான 'ப்ளாக்குகள்' முதலியவற்றை முன் னரே அனுப்பச் செய்தும் உதவிய "ஆனந்தவிகடன்" உரிமையாளராகிய ஸ்ரீமான் S. S. வாசன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிவைச் செலுத்துகின்றேன்.

வழக்கம்போல் ஊக்கத்துடன் இப்புத்தகத்தைத் திறம் பட அச்சிட்டுக் கொடுத்த கபீர் அச்சுக்கூடத்தார் பாராட்டுக்குரியர்.

இச்சுயசரிதப் பகுதியில் ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள், ஊர்ப் பெயர்கள், முதலியன மிகுதியாக வந் துள்ளன. முக்கியமான நிகழ்ச்சிகளையும் சிறப்புப் பெயர் களையும் வரிசைப்படுத்தி அமைத்து அவை அகராதியாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஐயரவர்கள் எழுதிய சுயசரிதம் மணிமேகலைப் பதிப்பு வெளிவந்த வரலாற்றோடு (1898) முடிவடைகிறது.

பின் நிகழ்ச்சிகள் சம்பந்தமான குறிப்புக்கள் ஒழுங்கு படுத்தி வைக்கப் பெற்றுள்ளன. திருவருள் துணை கொண்டும் அன்பர்கள் உதவிகொண்டும் "என் சரித்திரத்"தின் தொடர்ச்சியாக ஐயரவர்கள் வரலாற்றைப் பூர்த்தி செய்து வெளியிடலாமென்று கருதியுள்ளேன்.

"தியாகராச விலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
4—4—50


இங்ஙனம்
S. கலியாணசுந்தர ஐயர்

இப்புத்தகத்தில் அடங்கியவை

தமிழ்த் தாத்தா

(உ. வே. சாமிநாத ஐயர்)

கி. வா. ஜகந்நாதன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் (1855–1942) தமிழுக்காகவே வாழ்ந்தவர். அறுபதாண்டு காலத்துக்கு மேல் தமிழ்க் கல்வி ஆசிரியராகப் பணி ஆற்றிய படியே, பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிட்டு, தமிழ்க் கல்வியின் எல்லையை விரிவாக்கி, பழந்தமிழ் இலக்கியங்களையும் உயர் காப்பியங்களையும் காலத்தின் அழிவினின்றும் மீட்டுத் தந்தவர். பழந்தமிழர் வாழ்க்கை உயர்வை இலக்கியச் செய்திகள் வாயிலாக உணர்த்தியவர். இலக்கியப் பதிப்புத்துறையில் பாடுபட்டு ஏடு தேடிய இவரது உழைப்பின் பயனாக புது ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. வரலாற்றுச் செய்திகளைச் சுவையான நவீன சிறுகதை போலச் சொல்ல வல்லவர். வாழ்க்கை வரலாற்றுத் துறையில் தமிழிலே ஒரு வழிகாட்டி இவர். இன்றைய தமிழர் சிந்தனைக் கருத்துக்களையும் தமிழ் எழுத்தாளர் நடையையும் ஐயரவர்கள் வெளியீடுகள் பெரிதும் பாதித்துள்ளன எனலாம்.

இளமையில் நீண்ட காலம் ஐயரவர்களுடன் முக்கிய மாணவராக இருந்து பழகிய நூலாசிரியர் கி. வா. ஜகந்நாதன் பண்டைத் தமிழ்க் கல்வியிலும் சிறந்தவர்; இன்றைய முன்னணி எழுத்தாளர் வரிசையிலும் மதிக்கப் பெறும் ஆசிரியர். ஐயரவர்களின் சிறந்த வாழ்வையும் உயர்ந்த தமிழ்ப் பணியையும் இந்த நூலில் தெளிவாக உணர்த்துகின்றார்.

அட்டை அமைப்பு: சத்தியஜித் ராய்

உருவப் படம் : மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூலகம் வழங்கிய புகைப் படத்தின் கோட்டுருவம்.

விலை : ரூ. 4.

தமிழ்த் தாத்தா

இந்திய இலக்கியச் சிற்பிகள்

தமிழ்த் தாத்தா

(டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் வாழ்வும் இலக்கியப் பணியும்)

கி. வா. ஜகந்நாதன்

சாகித்திய அக்காதெமி

Tamizh Tatta: (Dr. U. V. Swaminatha Iyer), Monograph in Tamil by K. V. Jagannathan, Sahitya Akademi, New Delhi (1983) **Rs. 4**.

முதல் வெளியீடு: 1983

தலைமை அலுவலகம்:
சாகித்திய அக்காதெமி
ரவீந்திரபவன், புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:
29, எல்டாம்ஸ் சாலை, சென்னை 600 018
பிளாக் V–B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா ரோடு
தாதர், பம்பாய் 400 014

விலை : ரூ. 4.

அச்சிட்டோர்: டையோசிசன் அச்சகம், சென்னை 600 007

முன்னுரை

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றி இந்த நூற்றாண்டில் மறைந்த இரண்டு பெரும் புலவர்கள் தமிழுக்கு ஆக்கத்தை அளித்துப் புகழ் படைத்தனர். ஒருவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்; மற்றொருவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள். பாரதியார் அற்புதமான புதிய கவிதைகளைப் பாடித் தமிழ் மகளை அலங்கரித்தார். ஐயரவர்களோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய சங்க நூல்களையும் வேறு பழைய காவியங்களையும் கண்டெடுத்து ஆராய்ந்து அருமையான முறையில் பதிப்பித்து உதவினார்கள். அந்த நூல்களால் உலகம் முழுவதும் தமிழின் தொன்மையையும் பெருமையையும் பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் தெரிந்துகொண்டது. வெவ்வேறு நாடுகளில் உள்ள பேரறிஞர்கள் தமிழில் ஈடுபட்டு ஆராய்ச்சி செய்யலானார்கள். அதன் பயனாக உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றன, இனியும் நடைபெறும்.

கம்பராமாயணம், வில்லி பாரதம் போன்ற நூல்களோடு நின்றிருந்த தமிழ் இலக்கியத்தின் விரிவு புலப்பட்டது. இவ்வளவு பழைய காலத்திலே தமிழ் நாட்டின் நாகரிகம் இத்தகைய சிறப்புடன் இருந்தது பெரு வியப்புக்குரியது என்று பலரும் பாராட்டினார்கள். தொன்மையான நூல்களாக இருந்தாலும் சங்க நூல்கள் இன்றும் கற்பவர்களுக்கு இனியனவாய் உள்ளன.

இத்தகைய சங்க நூல்களைக் கண்டெடுத்து உதவிய டாக்டர் ஐயர் உரைநடையிலும் பல நூல்களை எழுதினார். அவர் பதிப்பித்த மணிமேகலைக்கு அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கத்தையும், புத்தர், சங்கம், தர்மம் என்னும் மும்மணிகளைப்பற்றியும் எழுதினார். பெருங்கதைக்கு அங்கமாக உதயணன் சரித்திரத்தை எழுதினார்.

இவற்றையெல்லாமல் தம் ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வரலாற்றையும் வேறு பலருடைய வரலாறுகளையும் எழுதி உதவினார். ஏடு தேடியபோது தாம் பெற்ற அநுபவங்களை எடுத்துரைத்தார். சங்க நூல்களில் கண்ட பல செய்திகளைக் கட்டுரை வடிவில் எழுதினார். அவர் பதிப்பித்த

நூல்களில் உள்ள முகவுரையே அவருடைய உரைநடை வளத்துக்குச் சான்றுபகரும். அவற்றோடு மேலே கண்ட வகைகளில் அவர் எழுதிக் குவித்தவை தமிழுக்குக் கிடைத்த களஞ்சியம் ஆகும்.

பண்டை நூற்பதிப்பு, வாழ்க்கை வரலாறு, ஆராய்ச்சி, அநுபவக் கட்டுரைகள் என்று பல துறைகளில் தம்முடைய இலக்கியப் பணியைச் செய்த அப்பெருமான் எண்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்து 1942ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மறைந்தார். நினைவு தெரிந்தது முதல் தமிழைப் பயின்றும், பயிற்றுவித்தும், பிறகு பண்டை நூல்களைப் பதிப்பித்தும் தமிழுக்கு வளம் ஊட்டி வாழ்ந்த அப்பெரியாருடைய வரலாறு பல பல அரிய உண்மைகளை வெளியிடுகிறது.

அப்பெருமானுடைய வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமே இந்த வெளியீடு. அவருடைய வாழ்க்கையில் மாணவப் பருவம், ஆசிரியத் தொண்டு, பதிப்புத்துறை, எழுத்துப்பணி என்ற பகுதிகள் அமைந்தன. அவற்றையெல்லாம் ஒருவாறு சுருக்கமாக இந்த நூலில் எழுதியிருக்கிறேன். இறுதியில் அவருடைய உரைநடையைப் பற்றிய பகுதியையும் எழுதிச் சேர்த்திருக்கிறேன்.

கவியரசர் பாரதியார் 'பொதிய மலைப் பிறந்த தமிழ் வாழ்வறியும் காலமெலாம் புலவோர் வாயில், துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய், இறப்பின்றித் துலங்குவாயே!' என்று ஐயரவர்களைப்பற்றிப் பாடினர். ஆம், அப்பெருமான் என்றும் வாழ்வார். தமிழுள்ள காலமெல்லாம் அவர் புகழ் நின்று நிலைக்கும்.

4—11—1982 கி. வா. ஜகந்நாதன்

பொருளடக்கம்

தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் தமிழ்ப்பணி

அறிமுகம்

“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு
முன்தோன்றிய மூத்த குடி”.

எனச் சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடி மக்களின் வரலாறும் பண்பாடும் மிகத் தொன்மை வாய்ந்தவை. அதற்கேற்ப தொன்மை மிக்க இலக்கிய இலக்கண வளத்தையும் கொண்டது நம்தாய்மொழியாகிய தமிழ். பனை ஓலையில் ஒளிந்திருந்த பசுந்தமிழை வண்ண வண்ணமையால், சித்திர எழுத்தால், பன்னிறத்தாளில் கொலுவீற்றிருக்கக் கண்டு நாம் இன்று மகிழ்கிறோம். அந்த நூல்கள் எவ்வாறு நமக்குக் கிடைத்தன என்று நாம் அறிவோமா! இன்று இணையக் கணினி வழியாக நாம் அனைத்து பாடங்களையும் தேடிக் காண முடிகிறது என்றால், இதற்கு முன் அவை எப்படி பாதுகாக்கப்பட்டது என்பதனை அறிவோமா! டாக்டர் உ.வே.சா. அவர்கள் இல்லையென்றால் நமக்கு சங்க இலக்கியங்கள் எதுவுமே கிடைத்திருக்க மாட்டா என்று தான் கூற வேண்டும். அவரால் தமிழ் போற்றி பாதுகாக்கப்பட்டது, இன்றும் நீடுழி வாழ்ந்து வருகின்றது என்பது தான் உண்மை.

உ.வே. சாமிநாதய்யர் இளமை மற்றும் கல்வி

உ.வே.சா அவர்கள் கும்பகோனத்திற்கு அருகில் உள்ள “சூரியமூலை” என்னும் கிராமத்தில் 1855ம் ஆண்டு பிறந்தார். உ.வே.சாவின் தந்தையார் சங்கீதத்தில் சிறந்த பண்டிதர். தமிழும் நன்கு கற்றவர். தந்தை தான் முதலாசிரியராக நிகண்டு, சதகம், நீதி நூல்கள் அந்தாதிகள் முதலான நூல்களைக் கற்றுக்கொடுத்தார். முதலில் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்று, பின்னர் பல தமிழ் அறிஞர்களிடம் சென்று தமிழ்ப்பாடம் கேட்டார்.அக்காலத்தில் பேரும் புகழும் பெற்ற

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் கல்வி கற்க விரும்பி, மாயூரம் சென்று, அவரிடம் மாணவராக சேர்ந்தார்.

உ.வே.சாவின் ஆசிரியப் பணி

உ.வே.சா. தனது ஆசான் பிள்ளையவர்கள் காலத்திற்குப்பின் திருவாடுதுறையிலிருந்து பாடம் சொல்லிக் கொடுக்குமாறு மகா சந்நிதானம் கூறவும் அவ்வாறே அவரும் மடத்திலேயே தங்கினார். நான்கு ஆண்டுகள் அங்கு தங்கிப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பின்னர், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அங்கு பணியாற்றும் காலத்தில் தமிழ்ப்பற்று மிக்க சேலம் இராமசாமி முதலியார் நீதிபதியாக இருந்தார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உ.வே.சா தாம் கற்ற இலக்கியங்களைப் பற்றிக் கூறினார்.

குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூர் அந்தாதி, திருவரங்க அந்தாதி, அழகர் அந்தாதி, கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்றெல்லாம் கூறியதோடு, அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத்தமிழில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என ஐயர் தாம் கற்றவைகளைப் பற்றிக் கூறினார்.

இவ்விதமாக ஒரு நீண்ட பட்டியலைக் கூறவும், நீதிபதி, ஐயரிடம் நிதானமாக “இதெல்லாம் நீங்கள் படித்து என்ன பயன்?” என்று கேட்டார். நீதிபதி இவ்விதம் கேட்டு விட்டாரே என்று எண்ணியவராய் தாம் படித்த இன்னும் சில நூல்கள் பற்றியும் கூறத் தொடங்கினார். திருவிளையாடற் புராணம், மயூரப் புராணம் போன்றவற்றுடன் இராமாயணத்தை முழுவதும் ஒரு முறைக்கு இருமுறை படித்ததாகவும் கூறினார்.

இவ்விதம் ஐயர் கூறவும், அவர் கூறியதைப் பற்றி பொருட்படுத்தாமல் "சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? என்று கேட்டதும் ஐயர் உண்மையில் திகைத்துப் போனார். "புத்தகங்கள் கிடைக்கவில்லை, கிடைத்ததும் அவைகளையும் படிக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்" என்று கூறிச் சமாளித்தார்.

உ.வே.சா அவர்களின் தமிழ்நூல் தேடல்பணி

சேலம் இராமசாமி முதலியார் அவர்களே, ஐயர் அவர்களிடம் சிந்தாமணித்தாள் ஏடு ஒன்றைக் கொடுத்து, "சிந்தாமணி மிகவும் சிறந்த நூலாகும் கம்பராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் இந்தக் காவியம் தான் வழிகாட்டி. இதைப் படித்துப் பொருள் கண்டு விளக்கினால் உங்களுக்கும் நன்மை எனக்கும் இன்பம் பயக்கும்" என்று கூறினார்.

இவ்விதம் நீதிபதி கூறியதிலிருந்து ஐயர் சிந்தாமணியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். இதை அவர் நன்றியுடன் கூறவும் செய்துள்ளார். பின்னா ஊர் ஊராகச் சென்று பல துயரங்களை அனுபவித்து, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த போதே பிற நூல்களைப் பற்றி அவருக்குக் கிடைத்த குறிப்புகளையும், பிறவற்றையும் அவர் குறித்துக் கொண்டு வந்ததால் அவருக்குத் தாம் மேற்கொண்ட பணி இலகுவாயிற்று.

உ.வே.சாவின் தமிழ்ப் பற்று

சாமி அவர்கள் தமிழைக் கசடறக் கற்றார், தமிழ் இலக்கியங்களை எங்கும் பரவச் செய்ய அரும்பாடுபட்டார். தமிழால் வளர்ந்தார். அந்த அமிழ்தினினுமினிய தமிழைப் பெரிதும் போற்றி நன்றியுணர்வுடன் கூறும் அடிகள் நெஞ்சத்தைத் தொடுவனவாகும். தமிழ் மொழியை எவ்விதம் வளர்க்கக் கருதினார் என்பதையும் அவர் வாய் மொழியிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்கவே கடைக்கண் பார்.

உ.வே.சாவின் தமிழ்நூல்கள் பதிப்புப்பணி

உ.வே.சா அவர்கள் தம் ஆசிரியருடைய வரலாற்றை மிக விரிவாக எழுதியுள்ளார். இவருடைய பதிப்புக்கள் பிழையற்றவை, விரிவான முன்னுரைகளோடும், ஆய்வுரைகளோடும் கூடியவை, மேனாட்டுப் பதிப்புக்கள் போன்ற அமைப்புடையவை. பத்துப்பாட்டு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் அடியாருக்கு நல்லாருரை, மணிமேகலை, பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல், திருவிளையாடல் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். புதியதும் பழையதும், கண்டதும், கேட்டதும், நினைவு மஞ்சரி முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

உ.வே.சா பெற்ற பட்டங்களும், பாராட்டுகளும்

தமிழுக்காக அருந்தொண்டாற்றியமையால் 1906ம் ஆண்டு இவருக்கு **“மகாமகோ பாத்தியாயர்”** என்ற பட்டத்ததை அன்றைய அரசு

அளித்து மகிழ்ந்தது. பின்னர் **“தாட்சிணாத்திய கலா நிதி”** என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகம் அவருடைய அரும் பெரும் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1932-ல் **“டாக்டர்”** பட்டமளித்துப் பெருமை கொண்டது.

இவ்விதம் தமிழ் இலக்கியம் சிறக்க பெருந்தொண்டாற்றி வந்த ஐயரவர்களின் சலியாத உழைப்பைப் பெரிதும் பாராட்டி **ஜி.யு.போப்** அவர்கள் கடிதம் எழுதிப் பெரிதும் போற்றியுள்ளார். பேராசிரியர் **ஜீலியன் வின்சோன்** என்னும் பிரெஞ்சு அறிஞர் சிந்தாமணிப் பதிப்பைப் பாராட்டிப் பாரிசிலிருந்து கடிதம் எழுதி மகிழ்ந்துள்ளார். அப்போது தமிழகத்தில் வாழ்ந்து வந்த பேராசிரியர் **மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார்** போன்றோர் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர். மேடைப் பேச்சில் அலுப்புத்தட்டாமல் பேசும் ஆற்றல் பெற்றவராகவும் ஐயர் அவர்கள் திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பெருமகனார் ஏடு தேடும் முயற்சியில் ஈடுபட்டு அல்லும் பகலும் பாடுபட்டதை உலகம் அறியும். அதை **நாமக்கல் கவிஞர்** இவ்விதம் கூறுகிறார்:

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்தலைந்தே ஊருராய்த் திரிந்து நாடிச்
செல்லாத்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கி
சோர்வறியா(து) உழைத்த ஒரு சாமி நாதன்
இல்லையெனில் அவன் பதித்த தமிழ்நூ லெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்தி டாதே.

முடிவுரை

தமிழ்த்தாத்தா என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த உ.வே.சா. அவர்கள் உண்மையில் தமிழைப் பெரிதும் பேணிக் காத்தார் என்று தான் கூற வேண்டும். தமிழ் பண்பாட்டுடன் சிறந்த முறையில் வாழ்ந்து வந்த சாமி நாத ஐயர் நல்ல மாணவர் பரம்பரையையும் உருவாக்கித் தமிழின் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாளெல்லாம் உழைத்து வந்தார். தமிழ் உள்ளவரை இந்தத் தமிழத் தாத்தாவின் புகழும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.



முனைவர்.ஆ.இராஜேஸ்வரி

உதவிப் பேராசிரியர்

கலைத்திட்ட வரைவு, மதிப்பீட்டுத்துறை

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

சென்னை-97.